P.A.R. சில்
பிரசித்தமானது
ராஜா
268
139. BOX
P.A. ராஜு சேட்டியார் & பிரதர்
கோயமுத்தூர்
குமரன்

REGD·NO. 4519 VASANTHAM JANUARY, 1947.

ஜூபிடர் பிக்சர்ஸ்

Lessees of:

சென்ட்ரல் ஸ்டுடியோஸ் லிமிடெட்

கோயமுத்தூர்



★

இப்பொழுது தயாராகிவரும் படங்கள்:

ராஜகுமாரி விப்ரநாராயண அபிமன்யு அசோகமாலா கிருஷ்ண விஜயம்	— ஜூபிடர் பிக்சர்ஸ்
அசோகமாலா (சிங்களம்)	— சிலோன் தியேட்டர்ஸ் லிமிடெட்
உஷா	— ஸ்ரீ கார்த்திகேயா பிக்சர்ஸ்
சுதர்சன்	— ராயல் டாக்கி டிஸ்டிரிபியூட்டர்ஸ்
பில்ஹணன்	- சேலம் ஷண்முகா பிலிம்ஸ்

இண்டோ கமர்ஷியல் பாங்க் லிமிடெட்

ஆடிட்டர் யாதாஸ்து (சுருக்கமானது) 31—12—46 வரை

பொறுப்புகள்

		ரூ அ பை
செலுத்திய மூலதனம்		18,75,000—0—0
ரிஸர்வ் நிதி		7,75,000—0—0
கன்டிஞ்சன்ட் நிதி		16,525-13-11
வரிகளுக்கு ஒதுக்கியது		76,182-15—0
டிபாஸிட்டுகள் அண்டு மற்றும் பொறுப்புகள்		5,49,01,266—3—3
வசூலிக்க பில்கள் அண்டு கமர்ஷியல் கிரடிட்கள்		39,00,258-12—2
டிராப்ட்ஸ் அண்டு டி. டி-கள் செலுத்தவேண்டியது		2,99,196—2—8
சில்லறை இனங்கள்		79,311—0—3
பிராஞ்சு கணக்குகளில் கொடுக்கப்பட வேண்டியதுகள்		17,26,806-10—8
லாப, நஷ்ட கணக்குகள்		
முன் வருடப் பிரகாரம் இருப்பு	3,588—7—1	
இவ்வருட நிகர லாபம்	8,14,606-11—3	
	8,18,195—2—4	
30-6-46ன் பாலன்ஸ் ஷீட் படி ஒதுக்கியது	3,86,469—1—0	4,31,726—1—4
		6,40,81,273-11—3

ஆஸ்திகள்

		ரூ அ பை
கடன்கள் & அட்வான்ஸ்கள்		3,23,61,983—6—8
பாங்க் பில்டிங்ஸ்		1,98,510-10—0
கஜானா பெட்டி & பர்னிச்சர்கள்		1,05,425-13—8
புத்தகங்கள் & ஸ்டேஷனரி		53,684-15—1
வசூலிக்க வேண்டிய பில்கள் & கமர்ஷியல் கிரடிட்கள் (பக்கத்தில் உள்ளபடி)		39,00,258-12—2
சில்லறை இனங்கள்		6,75,515-14—5
இன்வெஸ்ட் மெண்டுகள் (கவர்ன்மென்ட் பிராமஸரி நோட்டுகள் முதலியன)		1,56,74,768—3—0
கையில் இருப்பு	59,49,363-11-10	
பாங்கியில் இருப்பு	51,61,762—4—5	1,11,11,126—0—3
		6,40,81,273-11—3

பி. எஸ். சுப்பிரமணிய அய்யர் அண்டு கம்பெனி,
ரிஜிஸ்டர்டு அக்கௌண்டென்ஸ் அண்டு ஆடிட்டர்கள்.

எஸ். என். என். சங்கரலிங்க அய்யர்,
மானேஜிங் டைரக்டர்.

கொஞ்சம் பொருள் அதிகமாய்ப் பயன் படும்படிச் செய்வது.

AC93TM



பிரசினை: 9 தீக்குச்சிகளைக் கொண்டு 5 முக்கோணங்கள் அமைக்கவும்.



விடை: படத்தில் காட்டியுள்ளபடி ஒ தீக்குச்சிகளை அமைக்கவும். ஐந்தாவது முக்கோணம் நிழலுருவமாய் அமைக்கப் பட்டுள்ள தீக்குச்சிகளினால் உண்டாகிறது.

தற்போதைய விலைவாசிகள் இருந்து கொண்டிருக்கிற வரையில்—உணவு விஷயத்திலாகிலும், துணி விஷயத்திலாகிலும், கல்வி விஷயத்திலாகிலும் ஒரு திட்டத்தை அனுசரிக்காமல் காரியங்களைக் கண்டபடி செய்யும் பட்சத்தில் கொஞ்சப் பொருள் அதிகமாய்ப் பயன்படும்படி செய்யமுடியாது. குடும்பத்தின் வரவு செலவு திட்டத்தைச்

சீர்குலைக்கும் அவசரமான சந்தர்ப்பங்களைச் சமாளிக்க ஏன் ஒரு திட்டம் வகுக்கக்கூடாது? நீர் இடைவிடாமல், ஒழுங்காகச் சேமித்து வருவீரானால், உம்மிடம் எப்போதும் ஒரு சேமநிதி இருக்கும். இத்தகைய சேமிப்புகளை வட்டிக்குப் போட்டு வைப்பதற்கான சிறந்த சாதனங்கள் நாஷனல் ஸேவிங்ஸ் ஸெர்டிபிகேட்டுகளும் ஸ்டாம்புகளுமேயாகும்

நாஷனல் ஸேவிங்ஸ் ஸெர்டிபிகேட்டுகள்

இவை முக்கியமான அனுகூலங்களாகும்:—

1. நேஷனல் ஸேவிங்ஸ் ஸெர்டிபிகேட்டுகளை 5, 10, 50, 100, 500, 1,000 அல்லது 5,000 ரூபாய்க்கு வாங்கலாம்.

2. ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்களுள் ஒவ்வொருவரும் (அவர் பெரியவராயிருந்தாலுஞ்சரி மைனராயிருந்தாலுஞ் சரி) 5,000 ரூபாய் வரையில் வாங்க முடியும். இரண்டு பேர் கூட்டாக 10,000 ரூபாய் வரையில் வாங்கலாம்.

3. இவைகளின் மதிப்பு 12 வருஷங்களில் 50 சதவிதம் உயருகிறது. வட்டிக்குப் போட்டு வைக்கப்பட்ட ஒவ்வொரு ரூபாயும் ஒன்றரை ரூபாய் ஆகிவிடுகிறது. இது யாதொரு கவர்ன்மெண்ட் பத்திரத்தின் மேல் கிடைக்கக்கூடிய மிக உயர்ந்த வட்டியாகும்.

4. சம்பாதிக்கப்பட்ட வட்டிக்கு இன்கம்டாக்ஸ் செலுத்த வேண்டியதில்லை.

5. இவைகளை 2 வருஷங்களுக்குப் பிறகு (5 ரூபாய் ஸெர்டிபிகேட்டுகள் விஷயத்தில், 18 மாதங்களுக்குப் பிறகு) ரொக்கமாக மாற்றிக் கொள்ளலாம்.

6. சிறு தொகைகளைச் சேர்த்து வைப்பவர்கள் 1 ரூபாய், 8 அணா அல்லது 4 அணாவுக்கு ஸேவிங்ஸ் ஸ்டாம்புகள் வாங்கலாம். இப்படி வாங்கிச் சேர்த்து வரப்பட்ட ஸ்டாம்புகளின் மதிப்பு 5 ரூபாயானதும், அவைகளைக் கொடுத்துவிட்டு அவைகளுக்குப் பதிலாக ஒரு ஸெர்டிபிகேட் பெற்றுக் கொள்ளலாம்.

7. இந்த ஸெர்டிபிகேட்டுகள், ஸ்டாம்புகள் ஆகிய இரண்டையும் தபாலாபீஸ்களிலாவது கவர்ன்மெண்டாரால் நியமிக்கப்பட்ட அதிகாரம் பெற்ற ஏஜென்டுகளிடமாவது ஸேவிங்ஸ் பீரோக்களிலாவது பெற்றுக்கொள்ளலாம்.

உம்முடைய ஸேவிங்ஸ் க்ரூப்பில் இப்போதே சேரவும்!

துணி உற்பத்தியாளர் கவனிக்க

நீங்கள் உற்பத்தி செய்யும் சட்டைத் துணிகள் கோட்டுத் துணிகள், சேலைகள், வேஷ்டிகள், முதலிய சகலவிதத் துணிகளிலும், பளபளப்பும் கண் கவர் வனப்பும் உண்டாக்க 'காலண்டர்' செய்யுங்கள்.

குறைந்த சார்ஜில் நிறைந்த அழகுடன் 'காலண்டர்' செய்து தரப்படும்.

வெளியூரிலிருந்து வரும் துணிகள் உடனே கவனித்து 'காலண்டர்' செய்து அனுப்பப்படும்.

விபரத்திற்கு அடியிற்கண்ட விலாசத்துக்கு எழுதுங்கள்.

TRINITY WEAVING ESTABLISHMENT Ltd.,

(Calendering Department)

CANNANORE : : NORTH MALABAR.

சிலப்பதிகாரம்

(புகார்க்காண்டம்)

சர். ஆர். கே. சண்முகம் செட்டியார் அவர்கள்
எழுதிய எளிய, இனிய உரையுடன் வெளிவந்திருக்கிறது.

தமிழ் அறிஞர்களான திரு. எஸ். வையாபுரிப் பிள்ளை அவர்களும், திரு. ராமச்சந்திர தீக்ஷிதர் அவர்களும் முறையே சிறப்பான முன்னுரை, மதிப்புரை தந்து, நூலின் சுவையை அனுபவிக்கச் செய்திருக்கிறார்கள்.

விலை ரூ. 5—0—0

—: விவரங்களுக்கு :—

புதுமலர் நிலையம்

திருச்சி ரோடு, : : கோயமுத்தூர்.

வசந்தம்

மலர் 5 | விய ஹூ மாசி மீ | இதழ் 11

OFFICE OF THE R… 23 APR … MADRAS

பொருளடக்கம்

மலர் மணம் ...	...	1
நடையழகு ...	ரா. நா.	2
ஜப்பானில் ...	கே. நரசிம்மன்	4
அமிர்தமும் விஷமும் ...	அ. சிங்காரவேலு	8
சிலப்பதிகாரம் ...	சர். ஆர். கே. எஸ்.	17
ஏக்கம் தவிர்த்தாய்! ...	"பி. பி. எஸ்."	22
காதலி! ...	"பிரான்"	23
புனர்ஜென்மம் ...	கே. வி. துரைசாமி ராஜா	24
தாவர எண்ணெய்! ...	நா. கி. நாகராசன்	32
தெவிட்டாத இன்பம் ...	எஸ். பாலசுந்தரம்	36
புது வெள்ளம் ...	ராஜம் நரசிம்மன்	37
தாபமோ தாபம் ...	"சுகி"	41
திருவள்ளுவரும் வையையும் ...	அ. கிருஷ்ணசாமி நாயுடு	46
சபதம் ...	கு. ப. சேது அம்மாள்	49
மல்லிகை மொக்கு ...	நா. நாகலிங்கம்	57
சிதைந்த எழில் ...	தே. ப. பெருமாள்	64
வசனமும் கவிதையும் ...	கே. ஸ்ரீனிவாசன் எம். எஸ். ஸி.	65
புத்தக ஆராய்ச்சி ...	"உமாபதி"	70
கெட்டிக்காரி மீனு ...	"மஞ்சுளா"	73
மலர்கள் ...	'யுவபாரதி'	74
பிரிவு ...	கு. ஸ்ரீமதி	75
இது நிஜமா? ...	கோமதி சுவாமிநாதன்	82

'வசந்த'த்தில் வெளிவரும் கதைகளில் காணப்படும் பெயர்களும், சம்பவங்களும் கற்பனை.

ஆடை அணிவகுப்பில் இப்பொழுது அதிகம் அடிபடுவது

காலத்துக்கு தகுந்த பாஷனுக எல்லா நெம்பர் நால், நிறம், பாட்டர்ன், அதிக நேர்த்தியாய் நெசவு செய்த துணிகள் கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சங்கத்தாரால் மதருஸ் மாகாணம் பூராவும் நயாரிக்கப்பட்டு வருகின்றன.

ஜாஸ்தி சக்தியால் ஓட்டப்படும் யந்திரங்களைக் கொண்டு, பெருவாரியாக உண்டாக்கும் மில் துணிகளைவிட, கைத்றி சரக்குகளுக்கு பலம் நிடித்த உழைப்பு அழகு நேர்த்தி, உபயோகம் மென்மை மிகவும் அதிகம்.

மதருஸ் கூட்டுறவு கைத்துணிகள், சங்கத்தின், மத்ருஸ் மற்ற ஊர்களிலிருந்து நேராக குறிப்பிட்ட கருர் விலையில் விற்பனை செய்யப்படுவதால், நடுவிலிருக்கும் வியாபாரிகளின் லாபத்தை அகற்ற சாத்தியமாகிறது. ஆகவே, எங்களிடம் சாமான்கள் வாங்குவதால், உங்கள் பணம் மீதமடையும், கஷ்டமுமில்லை

வேஷ்டிகள், புடவைகள், சட்டைகள், டவல்கள், பிரின்ட்ஸ், சிங்கம்ஸ், சின்ட்ஸ், வீடு அலங்கரிக்கத் துணிகள், மேஜைத் துணிகள், படுக்கை விரிப்புகள், கைக்குட்டைகள், லுங்கிகள், அங்கவஸ்திரங்கள், கொசுவலைகள், க்வில்ட்ஸ், தலையணிகள்.

மதராஸ் கோவாபரேடிவ் கைத்தறி ஜவுளிகள்

கட்டுப்பாடு விலைகளில் புதிய சரக்குகள்

மதராஸ் ஹான்லூம் வீவர்ஸ் புரோவின்ஷியல் கோவாபரேடிவ் ஸொஸைடி லிட்., 6-A உட்ஸ் ரோடு, மௌண்ட் ரோடு, மதராஸ்.

இந்தியன் பாங்கு லிமிடெட்

தலைமை ஆபிஸ்: 'இந்தியன் பாங்கு பில்டிங்ஸ்'

நார்த் பீச் ரோடு : : மதராஸ்

சென்னை ஆபீஸ்கள் :

எஸ்பிளனேட்	திருவல்லிக்கேணி
மயிலாப்பூர்	தியாகராயநகர்
புரசவாக்கம்	மவுண்டுரோடு
எக்மோர்	

தென்னிந்தியாவில் எல்லா முக்கியமான இடங்களிலும் பம்பாயிலும் பிராஞ்சுகளும் சப் ஆபிஸ்களுமுள்ளன.

வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம் ரூ. 69,96,600
செலுத்தப்பட்ட ,, ,, 50,79,613
ரிஸர்வ் நிதி ,, 56,87,200

டிபாஸிட்டுகள் ரூ. 17 கோடிக்கு அதிகம்

எல்லாவிதமான பாங்க் அலுவல்களும் ஏற்றுக்கொண்டு நடத்தப்பெறும்

பூரா விபரங்களுக்கும் பாங்கியின் எந்த ஆபீஸிற்காவது விண்ணப்பித்துத் தெரிந்து கொள்ளலாம்.

N. கோபால அய்யர், செக்ரடரி

IBN 101

வசந்தம் சந்தா

வருஷ சந்தா	ரூ. 6—0—0
ஆறுமாத சந்தா	ரூ. 3—0—0
தனிப்பிரதி	ரூ. 0—8—0

ஆறு மாதத்திற்குக் குறைந்த சந்தா ஏற்றுக் கொள்ளப் படமாட்டாது.

மானேஜர்:—

'வசந்தம்' காரியாலயம்,
திருச்சிரோட், கோயமுத்தூர்.

வசந்தம்

கௌரவ ஆசிரியர்கள்:
டி. கே. சிதம்பரநாத முதலியார்
ஸர். ஆர். கே. சண்முகம் செட்டியார்...

நீண்ட தமிழால் உலகை
நேமியின் அளந்தான் — கம்பர்

மலர் மணம்

ஆசிரியர்

சிறுமிகள் ஆனந்தமாய் ஊஞ்சலாடும் ஒரு இனிய காட்சி இம்மாத 'வசந்த'த்தின் மேலட்டையை அலங்கரிக்கின்றது.

எதிர்பாராத சில அசந்தர்ப்பங்களினால் இந்த இதழ் தாமதமாக வெளிவருகிறதென்றாலும், அக்குறையை நிவர்த்தித்து, ஈடுகட்ட சுவையுள்ள பல்வேறு விஷயங்கள் இந்த இதழில் இடம் பெற்றிருக்கின்றன.

கவிஞர் கே. ஸ்ரீனிவாசன் அவர்கள், 'வசனமும் கவிதையும்' என்ற தலைப்பில் ஒரு சிறந்த இலக்கிய ஆராய்ச்சி செய்திருப்பது இலக்கியப் பித்தர்களுக்குப் பெரிதும் பிடிக்கும். கவிஞர் ஸ்ரீனிவாசன் அவர்களின் சிறந்த கட்டுரைகள் 'வசந்த'த்தில் தொடர்ந்து வெளிவரும் என்பதை மகிழ்ச்சியுடன் வாசகர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறோம்.

ஜப்பானில் தாம் கண்ட காட்சிகளையும், அடைந்த அனுபவங்களையும் இளம் எழுத்தாளர் நரசிம்மன் ஒரு கடிதத்தின் வாயிலாக சுவை படச் சொல்கிறார்.

மற்ற கதை கட்டுரைகளையும், வழக்கமான அம்சங்களையும் படித்துப் பாருங்கள்.

நடையழகு

[ரா. நா]

197251

தம்பி,

கல்லூரியில் படிக்கும் பொழுதே கட்டுரைகள் எழுத ஆசைப்படுகிறாய் என்பதை அறிந்து ஆனந்தமடைகிறேன். சில 'மாதிரி'க் கட்டுரைகள் அனுப்பி, அவை பற்றி என் அபிப்பிராயம் கேட்டிருக்கிறாய். அவைகள் யாவும் நல்ல முயற்சிகள் என்றே கருதுகிறேன். எனினும் உனக்குச் சில யோசனைகள் கூற விரும்புகிறேன். எழுதுவதில் பரம பண்டிதன் என எண்ணி இவைகளை எழுத வரவில்லை. பத்திரிகைகளில் வெளிவரும் பலவிதமான கட்டுரைகளைப் படித்துப் படித்து, ஆரம்ப எழுத்தாளன் எம்மாதிரி முறைகளைக் கொள்ள வேண்டும் தள்ள வேண்டும் என்பது பற்றி சில கருத்துக்கள் என் மனதில் பதிந்திருக்கின்றன. அவைகள் உனக்குப் பயன்படலாம் என்றுதான் சுருக்கமாக இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

எதைப் பற்றி எழுதுவது என்பதைத்தான் முதலில் திட்டம் செய்து கொள்ள வேண்டும். இதுவரையில் யாரும் வெளியிடாத காவியமாயிருக்க வேண்டும், அல்லது பழைய காவியத்தைப் புது முறையில் சொல்வதாயிருக்க வேண்டும். இவ்விரண்டு கூறுகளுக்குப் புறம்பான விஷயங்களைப் பற்றி எழுதினால் வாசகர்கள் ரஸிக்க மாட்டார்கள்.

வக்கீல் தொழிலில் இறங்கும்போது 'நீதிபதி உன்னை விட அதிகம் தெரிந்தவர் என்று நினைத்தால் உனக்குப் பேசுவதில் நடுக்கம் ஏற்படும். அவன் முட்டாள் என்று நினைத்துப் பேச ஆரம்பித்தால் பேச்சு மளமள வென்று வரும்' என ஒரு பழம் புலி போதனை செய்தாராம். இந்த உபதேசம் ஆரம்ப எழுத்தாளன் கைக் கொள்ளத் தக்கதன்று. வாசகர்கள் பலபேர் எழுதியவைகளைப் படித்து ரஸனை பாகுபாடு தெரிந்தவர்கள். ஆகையால் படிப்பவனுக்குச் சலிப்புத்தட்டும் விஷயங்களைப் பற்றி எழுதக் கூடாது.

விஷயம் திட்டமானவுடன் கட்டுரையை மனதில் உருவகப் படுத்திப் பார்த்துக் கொள்ள வேண்டும். அப்படிச் சிந்தனை செய்யும் பொழுது நமக்கே திருப்தி ஏற்பட்டால் எழுதத் தொடங்க வேண்டும். சிந்தனைத் தெளிவு ஏற்பட்டால்

ஸ்படிகம் போன்ற தெள்ளிய நடை தானகவே படியும். சொல்லலங்காரத்தில் மயங்கினல் மேல் பூச்சு பிரமாதமாக அமையலாம். ஆனல் சிந்தனை உருவின்றி சிதைந்து விடும்.

சிறுகதை விஷயத்தில் கதையை மர்மமாகவே வளர்த்து கடைசியில் சிக்கலை விடுவித்து ஆச்சரியத்தையோ அதிர்ச்சியையோ உண்டாக்குவது எனும் முறை கையாளப்படுகிறது. இதைக் கட்டுரையில் கையாண்டால் பயன் விபரீதமாகப் போய் விடும். அத்தைப் பாட்டி கதை சொன்னல் பேரப்பிள்ளை 'ஊம், ஊம்' என்று கேட்டுக் கொண்டிருப்பான். ஆனல் வாசகனுக்கு அவ்வளவு பொறுமை கிடையாது. விஷயத்தை விளக்கமாய் வெட்டு ஒன்று துண்டு இரண்டாய்ச் சொல்ல வேண்டும். உதாரணங்கள், உபமான உபமேயங்கள் சொல்லி வாசகரின் ரஸனைச் சுவைக்கு உணவளிக்கலாம். ஆனல் ஒரே உபகதைகளாக அளந்து கொண்டு போனல் கட்டாயம் படிப்பவன் ஊக்கம் தளர்ந்துவிடும்.

நான் என்ன சொல்ல வந்தேனென்றல், 'நான் சொல்ல விரும்புவது என்ன என்றல்' என்ற எழுத்தில் வாசகன் கண் புகுந்து விட்டால் ரயில், தண்டவாளத்தை விட்டு இறங்கி விட்டது என்று அர்த்தம். மறுபடியும் ரயில் பாதையில் ஏற்றும் வரையில் வாசகப் பிரயாணி காத்துக் கொண்டிருக்க மாட்டான். ஒன்று சொல்லிவிட்டு உடனே 'அதாவது' என்று ஆரம்பித்தால் விஷயம் உனக்கே விளங்கவில்லை என்பதை வாசகன் அறிந்து கொள்வான். இம்மாதிரி இடையூறுகள் ஏற்பட்ட பிறகு கட்டுரை பிற்பகுதியில் என்ன ரஸமான விஷயத்தைப் பற்றி எவ்வளவு அருமையாக எழுதியிருந்தாலும் புத்திசாலியான வாசகன் கண்ணெடுத்துப் பார்க்கமாட்டான்.

உன் கருத்தை வெளியிடுவதற்காக நீ எழுதுகிறய் என்பதை மறந்து விடலாகாது. ஆகையால் மேற்கோள்கள் மயமாகக் கட்டுரையை நிரப்பிவிட்டால் பிறர் சரக்கை சந்தையில் விற்கும் தரகன் நிலைக்கு நீ வந்து விடுவாய். சுருக்கமாக எழுதுவதே சாலச் சிறந்தது. கதையில் தொடர்ச்சியைப் படிப்பதே சிரமமாக இருக்கிறது. கட்டுரையில் தொடர்ச்சி என்றல் வாசகனுக்கு அளவுக்கு மீறிய தொந்தரவு கொடுப்பதாகும். வாசிப்பவன் சிந்தனையைத் தூண்டுவதுதான் கட்டுரையின் நோக்கமாயிருக்க வேண்டும். ஆகையால் சுருங்கச் சொல்லி விளங்க வைக்க வேண்டும்.

இதற்குமேல் எழுதினல் உனக்கே சலிப்பு ஏற்படும். அதனல் இத்துடன் நிறுத்திக் கொள்கிறேன்.

உன் அன்புள்ள,

....

ஜப்பானில்...

(கே. நரசிம்மன்)

அன்புள்ள பாலு,

உலகத்தில் மிக அழகியதும், வளம் பொருந்தியதுமான தீவுகள் சிலவற்றுள் ஒன்றன ஜப்பானைப் பார்க்க வேண்டும் என்ற என் நீண்டகால ஆசையை உன்னிடம் அடிக்கடி சொல்லியிருக்கிறேன். அந்த ஆசை இன்று தான் — ஜப்பான் மண்ணில் என் காலடி முதன் முதலாக வைத்ததும் — நிறைவேறியது. நான் முன்னமேயே உனக்கு வாக்களித்திருந்தபடி என் அனுபவங்களை அவ்வப்போது சுருக்கமாக எழுதுகிறேன்.

நான் முதலில் கப்பலை விட்டு இறங்கியதும், எங்கள் (என்னுடன் வந்திருந்த பலருடன்) இடத்தை அடைவதற்காக ரயில்வே ஸ்டேஷனை அடைந்தோம். அங்கு ஜப்பானிய மக்கள் ஸ்திரீ, புருஷ பேதமின்றி, ஒரே 'கியூ' வரிசையில், தங்களுக்குள்ள கட்டுப்பாட்டை வெளிப்படுத்துவது போல் நின்று கொண்டிருந்தார்கள். ஒரு போலீஸ் கூட இல்லை! ஆனால் ராணுவ ஒழுங்கு இருந்தது. ஒருவரை ஒருவர் மோதிக்கொண்டு செல்வதோ, கடுமையாகப் பேசுவதோ எங்குமே காண முடியாது. தெருக்களில் பெரும்பாலும் பெண்களே காணப்படுகிறார்கள். ஜனத்தொகையிலும் பெண்களின் எண்ணிக்கைதான் அதிகம். சர்க்கார் காரியாலயங்கள், ரயில்வே காரியாலயங்கள், வியாபார ஸ்தலங்கள் போன்ற எல்லா விடங்களிலும் பெண் ஊழியர்களே அதிகம்.

ஜப்பானியப் பெண்கள் நல்ல சிகப்பு நிறமும், கட்டுமஸ்தான — சில சமயங்களில் ஸ்தூலமான — அங்க அமைப்புகளுடனும், அவயவங்கள் திரட்சியுடனும், கண்களுக்குக் கவர்ச்சியுடனும் காணப்படுகிறார்கள். பாதிப் பேர் ஆங்கில முறையிலும், மற்றவர் ஜப்பானிய முறையிலும், வித விதமான வர்ணங்களில் பட்டாடைகளை அணிந்து வீதிகளில் குறுக்கும் நெடுக்குமாக பரபரப்புடன் நடந்து கொண்டிருப்பது கண் கொள்ளாக் காட்சியாக இருக்கிறது. பட்டுப் பூச்சிகள் பறந்து கொண்டிருப்பது போன்ற ஒரு இன்ப பிரமை தட்டுகிறது.

ஒரு சிலரைத் தவிர, பெரும்பாலான பெண்கள் ஆபரணங்களே அணிவதில்லை. அவர்களின் உடை அலங்காரங்களும், உடலமைப்பும் எல்லோரையும் கவர்ந்துவிடுகிறது. பனிரண்டு முதல் இருபத்தைந்து வயதுக்குட்பட்ட இளம் பெண்கள் எல்லாப் பொது விடங்களிலும் காரணமாகவோ, வியர்த்தமாகவோ வட்டமிட்டுக் கொண்டிருப்பார்கள். அருகில் சென்ருல் ஜப்பானிய பாஷையில் வணக்கம் செலுத்துகிருர்கள். கூச்சமின்றி தாராளமாகப் பழகும் சரள சுபாவமுடையவர்கள். புது விஷயங்களை அறிந்து கொள்வதில் ஜப்பானிய ஆண்களும் சரி, பெண்களும் சரி, மிகுந்த ஆர்வம் காட்டுகிருர்கள். அவர்களுக்கு நமது பாஷை புரியாததாலும், நம்

மிடம் புதிதாகப் பழகுவதாலும் முதலில் சிறிது பயம் இருக்கத் தான் செய்கிறது. சிறிது பழகி யதும் நீண்ட காலம் பழகியவர் களைப் போன்று நெருங்கி வந்து விடுகிறார்கள். மேனாட்டார் போல இவர்களுக்குள் ஸ்திரீ புருஷ பேதம் கிடையாது. யாரு டனும் சரி, எவ்வளவு யௌவன யுவதிகளாயினும் சரி, கைகோர்த் துக் கொண்டோ அல்லது தோள் மீது கைபோட்டு குலவிக் கொண் டோ பேச அனுமதித்து விடுகிறார் கள். ஆனால் அவர்களுக்கும், நமக்கும் உள்ள நிற பேதத்தால் அதிகம் நெருங்கிப் பழகுவதற்கு இடங் கொடுப்பதில்லை. நாம் வீதிகளில் போகும் பொழுது சின்னஞ் சிறு குழந்தைகளும் தம் மழலைச் சொற்களில் "ஹலோ, குட் ஈவ்னிங்," "குட் பை" என்று அழைப்பார்கள். சிறிது நின்று நாம் பதில் அளித்தால், அக்குழந்தைகள் ஓடி வந்து நமது கையைப் பிடித்துக் கொள்ளுவார் கள். நாம் அவர்களுக்குத் தின் பண்டமோ, பணமோ ஏதாவது கொடுத்தால் மிகவும் நன்றியுடன் வணக்கம் கூறும் அழகே ஒரு தனிப் பண்பு.

இங்கு, (ஜப்பானின் பிரதான நகரங்களுள் ஒன்று) துருப்புக் களுக்கென ஒரு பெரிய ஜப்பா னிய ஓட்டல் இருக்கிறது. மிக வும் அலங்காரமான, சுத்தமான இடம். இங்கு பதினைந்து முதல் இருபது வயதிற்குட்பட்ட பெண் களே பணிவிடை செய்கிறார்கள். உள்ளே சென்று அமர்ந்ததும், அருகில் வந்து உட்கார்ந்து கொண்டு, கண்ணாடி டம்ளரில் "பீர்" என்ற பானத்தை ஊற்றிக் கொடுப்பார்கள். கவர்ச்சியான உடை, மேனியழகைக் கூடுமான வரை வெளிக் காட்டும்படிச் செய்யும் உபசாரம், அன்பு கலந்த மரியாதையான மொழிகள், ஓரளவுக்கு நம் திடச் சித்தத்தைத் தகர்க்க முயற்சிக்கும் பணிவு முதலிய நாசுக்கான முறைகளில் தங்கள் ஓட்டல் வியாபாரத்தைப் பெருக்குகிறார்கள். ஓட்டல்களில் சாதாரணமாக இருவர் உட்காரக் கூடிய மெத்தை தைத்த சோபாக் களே போடப் பட்டிருப்பதால் ஒதுக்கமும், சவுகரியமுமாக இருக்கிறது.

ஜப்பானியர்கள் வசிக்கும் வீடு கள் விசித்திரமானவை! வீடுகள் எல்லாம் மேல் மெத்தை உடை யவை. கீழ்ப் பாகம் பகற் காலத் தில் புழங்கு வதற்காகவும், தொழில் முறைகளுக்காகவும், மேல் மெத்தை ஓய்வு எடுத்துக் கொள்வதற்கும் உபயோகமாகி றது. வீடுகள் எல்லாம் மரத்தி னாலும் கண்ணாடிச் சட்டங்களா லும் ஆனவை. கல்கட்டடங்கள் மிக அபூர்வமாகக் காணப்படு கின்றன. ஜப்பானியர்களின் வீடுகள் நம் நகரங்களில் காணப் படும் 'காக்ஷி சாலைகள்' மாதிரி தோற்றமளிக் கின்றன. வீடுகளுக்குப் பூட்டு கள் கிடையாது. தாளோடு சரி. மிகவும் கட்டுப்பாடான உணர்ச் சியினால் களவு என்பது அதிகம் கிடையாது. எவ்வளவு சிறிய வீடுகளானாலும் எலக்ட்ரிக் விளக் குகள் உண்டு. நடுத்தர அந்தஸ் துள்ள வீடுகளில் டெலிபோன் கள் இருக்கிறது. தூய்மையாக வும், ஒழுங்காகவும் அலங்காரம் செய்யப் பட்டும் இருக்கின்றன. முன் கதவைத் தாண்டியதும், கட்டையால் செய்த பாதக் குறடு களைக் கழற்றிவிட்டு, பாய் அல்லது கம்பளம் விரிக்கப்பட்ட அறை களில் புழங்குகிறார்கள். அன்னிய தேசத்தவர் யார் சென்றாலும்

வெறுங் கால்களுடன்தான் அவர்கள் வீட்டினுள் நுழைய வேண்டும்.

ஜப்பானியர்களின் உணவு, மீன், கீரை, சோறு – இவைகள் தான் முக்கியமானவை. தேயிலையைக் கொதிக்கும் நீரில் போட்டு, வடிகட்டி, பால் சேர்க்காமலேயே, சர்க்கரை அதிகம் சேர்த்துக் குடிக்கிறார்கள். பீர், ஒயின் ஆகிய இவ்விரு பானங்களும் ஒவ்வொரு வீட்டிலும் இருக்கும். குளிர் பிரதேசமாகையால் இவைகள் இங்கு அதிகத் தேவையாயிருக்கிறது. விருந்தினர்களை உபசரிக்க முதன் முதலில் இப்பானங்களை வழங்குகிறார்கள். பழவகைகள் அதிகம் கிடைப்பதில்லை. உயர்ந்த அந்தஸ்துடையவர்கள் ஆங்கில முறையில் மேஜை நாற்காலி, பீங்கான் தட்டுகள், ஸ்பூன் முதலியவைகளைச் சாப்பிடும் பொழுது உபயோகிக்கிறார்கள். ஜப்பானியர்கள் சாப்பிடும் பொழுது பார்த்தால் நமக்கு வேடிக்கையாயிருக்கும். ஏன், சர்க்கஸ் வித்தையோ என்று கூட ஆச்சரிய முண்டாகும். ஏனெனில் அவர்கள் உயரமில்லாத முக்காலி போன்ற பீடத்தின் மீது சோற்றை வைத்துக் கொண்டு, இரண்டு மெல்லிய மூங்கில் சிம்பு களால் பரபர வென்று ஒரு பருக்கைகூட சிந்தாமல் எடுத்துச் சாப்பிட்டு விடுகிறார்கள்.

சாதாரண ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள் பைஜாமாவும், முழுக்கைச் சட்டையும் அணிந்து, இடுப்பைச் சுற்றி அலங்காரமான கச்சையைக் கட்டிக் கொள்ளுகிறார்கள். தலை மயிரை உச்சந்தலையில் உயர்த்திச் சீவி அழகான முடிச்சுப் போட்டுக் கொள்ளுகிறார்கள். பற்கள்தான் இவர்களுக்குச் சரியாக அமையவில்லை. செயற்கைப் பல் கட்டிக் கொள்ளாதவர்களைப் பார்ப்பது அரிது. இந்த ஒரு விஷயத்தைத் தவிர மற்ற அம்சங்களில் கவர்ச்சியுடன் தோற்றமளிக்கிறார்கள்.

சிறுவர்கள் முதல் வயோதிகர் வரை ஆண்களும், பெண்களும் எப்பொழுதும் சுறுசுறுப்பாகவே இருக்கிறார்கள். இவர்களிடம் வீண் கௌரவமே கிடையாது. மிகவும் வணக்க சுபாவம் உடையவர்கள். ஒருவரை ஒருவர் சந்திக்கும் பொழுது தாழ்ந்து வணங்குகிறார்கள். சில சமயங்களில் அப்படி வணங்குவதற்காக முன்னால் குனியும் பொழுது, தவறி கீழே விழுந்து விடுவார்களோ என்று கூட எனக்குச் சந்தேகம் ஏற்படுவதுண்டு! பிறர் எவ்வளவு தாழ்ந்தவர்களாயிருந்த போதிலும் மரியாதையான வார்த்தைகளாலேயே பேசுவார்கள்.

சிறுவர்களுக்குள் அதிகமாகக் காணப்படுவது பந்து விளையாட்டு தான். கிழவர்கள் கூட உற்சாகத்துடன் பந்தாடுவதைப் பார்த்தேன். பெண்களுக்கு இனிமையான குரல் இருக்கிறது. பாட்டுக்கள் கேட்பதற்கு இனிமையாயிருந்தாலும், பாஷை புரியாததால் அர்த்தமாகிறதில்லை. அவர்கள் நாட்டியமும் பர்மிய வகையைச் சேர்ந்தது. தாளத்திற்கு ஒத்து, அபிநயத்துடன் அழகாக நாட்டிய மாடுகிறார்கள்.

ஒவ்வொரு வீட்டின் முன் புறத்திலும், எவ்வளவு சிறிய இடமாயிருந்தாலும் முட்டைகோஸ், தக்காளி, அவரை முதலிய செடிகளுடன் ஒரு தோட்டம் இருக்கும். மாலை நேரங்களில் தோட்டத்தில், பாத்தி கட்டிக் கொண்டோ, ஜலதாரையை சுத்தம்

செய்து கொண்டோ, மண்ணைக் கிளறிச் செப்பனிட்டுக் கொண்டோ இருப்பார்கள். தோட்டத்திற்குத் தண்ணீர் ஊற்றுவதில் ஜப்பானியக் குழந்தைகளுக்கு அலாதிப் பிரியம் உண்டு. பூக்களில் அதிகமாகக் காணப்படுவது வாசனையற்ற ரோஜாவும் அல்லி போன்ற வெண்ணிற நீர்ப் பூக்களும்தான். வருஷத்தில் சில மாதங்களில் உருளைக் கிழங்கும், சிவப்பு முள்ளங்கியும் பயிரிடுகிறார்கள். தோட்டத்தில் ஒரு சதுர அடி நிலத்தைக் கூட காலியாக விடுவதில்லை. பயன் படக்கூடிய ஏதாவதொரு உணவுப் பயிரை வளர்த்து விடுகிறார்கள்.

இப்பிரதேசம் சமவெளியாக இல்லாமல் குன்றுப் பிரதேசமாக இருக்கிறது. சவுக்குப் போன்ற ஒருவகை உயர்ந்த மரங்கள்தான் எங்கும் அடர்த்தியா யிருக்கிறது. மூங்கில் புதர்களும் அதிகம். எங்கும் பசுமை நிறமும் சிறு சிறு மலைக் குன்றுகளும் உள்ள காக்ஷிகள் மனோரம்யமாக இருக்கின்றன. இத்தேசத்தின் கைத்தொழிலுக்குப் பெரும்பாலும் இம் மூங்கில்களும், சவுக்கு வகுப்பைச் சேர்ந்த மரங்களுமே முக்கிய சாதனங்களாகப் பயன்படுகின்றன. இத்தேசத்தின் சீதோஷ்ண நிலமை, இரண்டு மாதம் இளவேனிற் காலம்; நான்கு மாதம் மழை காலம்; மற்ற காலங்களில் ஒரே குளிர்தான். பனிக் காலங்களில் தண்ணீர் உறைந்து விடுவதுமுண்டு.

பல இடங்களில் கடல் நீர் உட்புகுந்திருப்பதால், குழிகளும், அவைகளால் நிரப்பப்படும் ஏரிகளும் ஏராளமாக இருக்கின்றன. எனவே இத்தேசத்தின் எல்லாப் பகுதிகளிலும் இயற்கையின் இன்பக் காக்ஷிகள் மலிந்திருக்கின்றன.

கடிதம் நீண்டு விட்டதால் இத்துடன் நிறுத்திக்கொள்ளுகிறேன். சமயம் நேரும் பொழுது மறு கடிதத்தில் இன்னும் எழுதுகிறேன்.

★

"எல்லோரும் சந்தோஷமா யிருக்கலாம். ஆனால், ஒரு சிலரே அரும் பெரும் செயல்களைச் செய்ய முடியும்."

— *ரஸ்கின்*

"ஜனங்களைச் சிரிக்கும்படி பலவந்தப் படுத்த முடியாது; அவர்கள் ஏன் சிரிக்கிறார்கள் என்பதற்கு உன்னால் காரணம் சொல்லவும் முடியாது; அவர்களே சிரித்துக் கொண்டாலுண்டு; இல்லையேல், அவர்கள் சிரிக்கவே மாட்டார்கள்."

— *ஆஜ்லிட்டி*

அமிர்தமும் விஷமும்

[அ. சிங்காரவேலு]

உதவி கவுன்சிலரான இளைஞன் குஸ்டாப் பாக் கல்யாண சம்பந்தமாக தன் விருப்பத்தை லூசியின் தகப்பனரிடம் தெரிவித்த பொழுது, அந்த வயோதிக மனிதன் இப்படி முதல் கேள்வியைப் போட்டான்:

"நீ எவ்வளவு சம்பாதிக்கிருய்?"

"மாதம் சுமார் நூறு குரோனர் (நூறு ரூபாய்) வரை. ஆனல் லூசி......"

"அதைப்பற்றிச் சொல்லாதே" என்று இடை மறித்துச் சொன்னன் கிழவன். "நீ போதியது சம்பாதிக்க வில்லை"

"அப்படியல்ல, ஆனல் நானும் லூசியும் ஒருவரை யொருவர் ரொம்ப அன்யோன்யமாக நேசிக்கின்ருேம். ஒருவருக்கொருவர் நேந்து நிரவிக்கொண்டு போய் விடுவோம். அந்த நிச்சயம் எங்களுக்குள் உண்டு"

"அது சரிதான், ஆனல் எப்படியும் உன் வருமான மெல்லாம் சேர்த்தும் பனிரண்டு நூறு தானே? சர்க்கார் சம்பளத்தைத் தவிர வேறு ஏதாகிலும் கிடைக்க வழியுண்டா?"

"ஆமாம், எங்களுக்குப் போதியது உண்டு என்றுதான் நினைக்கிறேன். பின்னுடி நீங்கள் பார்ப்பீர்கள், நாங்கள் எப்படி ஒருவருக்கொருவர் பரஸ்பரம்......"

"நீ சொல்வது சரிதான். அப்படி அந்த இதர வகையில் ஏதாகிலும் வருமானம் வருமென்ருல், அவைகள் எப்படி என்று நான் தெரிந்து கொள்ளலாமோ."

"ஆஹா!" பாக் உற்சாகத்துடன் சொன்னன் "எனக்கு இதர வேலைகளில் போதியளவு கிடைத்துவிடும்"

"என்ன வேலை அது! எவ்வளவு கிடைக்கும்"

"நான் பிரெஞ்சில் பாடம் சொல்லிக் கொடுப்பேன். அதோடு மொழி பெயர்ப்பேன். 'ப்ரூப் ரீடிங்'கும் கொஞ்சம் பார்ப்பேன்."

"மொழி பெயர்ப்புக்கு எவ்வளவு?"

"அதைச் சரியாய் சொல்ல முடியாது. இப்போது ஓர் பிரெஞ்சு நூலை மொழி பெயர்த்துக் கொண்டிருக்கிறேன். அதற்கு ஒரு பக்கத்திற்கு 5 க்ரோனர் வீதம்.

"அது மொத்தம் எத்தனை பக்கங்களிருக்கும்"

"சுமார் 4 டஜன் பக்கங்களுக்கு மேலிருக்கலாம்."

"சரி, இதற்கு ஒரு நூற்றி ஐம்பது குரோனர் என்று வைத்துக் கொள்வோம். இன்னும் பாக்கியில் என்ன வரும்."

"அது எனக்குத் தெரியாது. அது கொஞ்சம் சந்தேகந்தான்"

"என்ன இது. கல்யாணம் செய்து கொள்ள வேண்டுமென்கிருய். உனக்கு ஒன்றும் நிச்சயமாக இல்லையே. கல்யாணத்தைப் பற்றிய உன் கருத்தே ஓர் புதுமையாய் இருக்கிறது! குழந்தைகள் பெற்று விட்டால்......நீ இதெல்லாம் நினைத்துப் பார்க்க வில்லையாக்கும். உணவளித்து, உடையளித்து அவர்களை முன்னுக்குக் கொண்டுவர எல்லாம்......"

"ஆனல்" பாக் ஆக்ஷேபித்தாற் போல் சொன்னன் "அவ்வளவு சீக்கிரத்தில் குழந்தைகள் பிறந்து விடாது"

"குழந்தை குட்டிகளைப் பற்றியும் முன்னடியே யோசித்துக் கொள்வதுதான் ரொம்ப நல்லது" லூசியின் தந்தை மேலும் சொன்னன்: "நீங்கள் இருவரும் விவாகம் செய்துகொள்வதாக வைத்துக் கொள்வோம். அதில் ஒன்றும் எனக்கு சந்தேகமில்லை. ஆனல் நீங்கள் ஒருவரை ஒருவர் உண்மையில் எதில் பிரியப்படுகிறீர்கள். அதெல்லாம் எப்படியிருந்தாலும் சரிதான். எனக்கு அதில் சம்மதம். லூசியை அடைவதில் உள்ளதைப்போல் காலத்தை நல்ல வழியில் உபயோகித்து வருவாய் பெருக முயற்சிப்பதுதான் சிறந்ததாகும்."

இளைஞன் பாக் அவர் சம்மதம் கிடைக்கப் பெற்றதும் ரொம்பவும் சந்தோஷப்பட்டான். அந்த வயோதிக மனிதர் கையை எடுத்து முத்தமிட்டுக் கொண்டான். அடதெய்வமே! அவனுக்கு எவ்வளவு சந்தோஷம். அவன் லூசிக்குந்தான்! அவர்கள் ஒருவரோடொருவர் கை கோர்த்துக் கொண்டு முதன்முதலாக உலவச் சென்ற பொழுது அவர்களுக்கு எவ்வளவு பெருமை! இந்த இளந் தம்பதிகளுக்கு எல்லாமே எவ்வளவு ஆனந்தமாகத் தோன்றியது!

சாயங்கால வேளைகளில், அவன் அவளைப் பார்க்க வருவான். அவன் வரும்போது திருத்தம் செய்து தர அவன் ஒப்புக் கொண்டுள்ள "புரூப் ஷீட்களை" கொண்டு வருவான். இதனல் அவனுக்கு ஒரு நல்ல வரவேற்பு கிடைக்கும். அவள் அவனுக்கு ஓர் முத்தம் கொடுப்பாள். ஆனல், ஒரு நாள் சாயங்காலம், அவர்கள் ஒரு தியேட்டருக்கு விஜயம் செய்தார்கள். வாடகை ஜட்கா பிடித்துக் கொண்டு வீட்டுக்கு வந்தார்கள். அந்த மாலைப் பொழுதில் கொஞ்ச நேரம் குஷாலாய் உலாத்தி விட்டு வந்ததற்கு அவனுக்கு 10 குரோனர் செலவாகி விட்டது. மறுபடியும், இன்னும் சில நாள் மாலை வேளைகளில் வெளியே போய் உலாவிவிட்டு வர, அவனுக்கு அழைப்பு வரும். அவன் பிரெஞ்சுப் பாடம் சொல்லிக் கொடுப்பதையும் விட்டு விட்டு உலாவப் போய் விடுவான்.

கல்யாண தேதி நெருங்கியதும், வேண்டிய சாமான்களை வாங்குவது பற்றி அவர்கள் யோசித்தார்கள். மெதுவான நல்ல இரண்டு மெத்தைகள், மேல் உரை உள்பட மிருதுவான நல்ல தலையணைகள், இவற்றை வாங்கினர்கள். ஷாப்பிற்குப் போய், சிவப்பு நிற ஷேட் உள்ள ஒரு விளக்கும், பளிங்கினல் செய்யப்பட்ட 'வீனஸ்'

உருவச்சிலை ஒன்றும் வாங்கினார்கள். அதோடு கண்ணாடி சாமான்களும், கத்தி, முள் போன்ற மேஜை சாமான்களும் வாங்கினார்கள். இதற்கு மட்டும் அந்தப் பெரியவரின் உதவியும், யோசனையும் அவர்களுக்குக் கிடைத்தது. இந்த சமயத்திலெல்லாம் குஸ்டாப்பாக்குக்கு கடுமையான வேலை. ஓடியாடிப் போய் சாமான்கள் வாங்கவும், வாங்கின சாமான்களை எல்லாம் கொண்டு வந்து சேர்க்கவும், வீடு தேடிப்பிடிக்கவும், கொடுக்க வேண்டிய பாக்கிக்கெல்லாம் 'செக்' எழுதிக் கொடுக்கவும், இன்னும் என்ன......?

இந்த இடைக் காலத்தில் குஸ்டாப்புக்கு இதர வருமானங்கள் ஒன்றும் கிடைக்கவில்லை. ஆனால் அவர்கள் கல்யாணம் முடிந்த உடன் அவன் மீண்டும் (அவற்றை) ஆரம்பித்து விடுவான். அவர்கள் ரொம்பவும் சிக்கனமாக வாழ்க்கை நடத்துவதென்றும் யோசித்து விட்டார்கள். இரண்டே அறைகள் உள்ள வீடு போதுமானதென்று தீர்மானம். முதல் மாடியில் ஓர் வீட்டை 600 குரோனர் வாடகைக்குப் பிடித்துக் கொண்டனர். அதில் ஓர் சமையல் கட்டும், இரண்டு அறைகளும் உண்டு. முதலில் லூசி சொன்னாள்: இன்னும் மேல் மாடியில் மூன்று அறை இருந்தால் தேவலாம் என்பதாக. அதைப்பற்றி என்ன., அவர்கள் ஒருவருக்கொருவர் அவ்வளவு காலமாக விடாப்பிடியாகக் காதலித்து வரும் பொழுது, இதொரு பிரமாதம்!

கடைசியாக அறைகள் அலங்கரிக்கப் பட்டன. பள்ளியறை சின்ன கர்ப்பக்கிரகம் மாதிரி. கட்டில்கள் பக்கம் பக்கமாகப் போடப்பட்டு, வாழ்க்கைப் பயணத்திற்கு செல்லும் வெற்றி ரதங்கள் மாதிரி ஜோடிக்கப்பட்டன. படுக்கையிலே நேர்த்தியான கம்பளிப் போர்வைகளும், இளந்தம்பதிகளின், விலாசம் போட்ட பூவேலை செய்த உரை போட்ட உயர்ந்த ரக தலையணைகளும் போடப் பட்டிருந்தன. நீண்ட அழகிய படுதா ஒன்று லூசியின் உபயோகத்திற்காகத் தொங்கிக் கொண்டிருந்தது. அவளது 1200 குரோனர் பெறுமான முள்ள 'பியானோ' வாத்யம் மற்றோர் அறையில் வைக்கப் பட்டிருந்தது. அந்த அறை படிக்க, சாப்பிட இளைப்பாற, இவற்றிற்கேற்ற சாதனங்களுடன் அலங்கரிக்கப் பட்டிருந்தது. இங்கும் உயர்ந்த மரத்தால் செய்யப்பட்ட வேலைப்பாடு நிறைந்த மேஜைகளும், நாற்காலிகளும் போடப்பட்டிருந்தன. அதோடு புத்தக பீரோ ஒன்றும், பெரிய நிலைக்கண்ணாடி ஒன்றும், ஒரு சோபாவும் போடப்பட்டு, நல்ல காற்றோட்ட வசதியுடன், அறை அமைக்கப் பட்டிருந்தது.

விவாகச் சடங்கு ஒரு நாள் சனிக்கிழமை இரவு நடந்தது. அன்று மறு நாள் ஞாயிற்றுக் கிழமை. பொழுது விடிந்து ரொம்ப நேரமாகியும் தம்பதிகள் தூங்கிக் கொண்டே யிருந்தார்கள். குஸ்டாப்தான் முதலில் கண் விழித்தான். ஜன்னல்கள் வழியாக வெளிச்சம் தெரிந்துங்கூட, அவன் கதவுகளைத் திறந்து விடவில்லை. விளக்கை கொஞ்சம் தூண்டி விட்டுக் கொண்டான். அதன் ஒளி வீனஸ் உருவத்தில் படர்ந்து அற்புதமாய்க் காணப்பட்டது. அந்த இளம் மனைவி அப்படியேதான் தூங்கிக் கொண்டிருந்தாள். கொஞ்சம்கூட புரளவில்லை. ஞாயிற்றுக் கிழமை, சந்தைபோன்ற இரைச்சல் சத்தத்

திலும் அவள் எழுந்திருக்கவே இல்லை. இப்போதுமாதா கோவிலிலிருந்து மணிச்சத்தம் ரொம்ப ஆனந்தமாக ஒலிக்கத் தொடங்கியது. அந்த ஆணும் பெண்ணும் சேர்ந்து கூடிக் குலாவி மகிழ்ந்து சிருஷ்டித்து விட்டதைக் குறித்து சுவை கொண்டாடுவதைப் போன்றிருந்தது, அந்த ஒலியின் குதூகலம்.

குஸ்டாப் திரைக்கு அப்பால் ஏதோ சாமான்களை எடுத்து ஒழுங்குற வைத்துக் கொண்டிருந்த பொழுது லூசி கொஞ்சம் புரண்டு படுத்தாள். அவன் உடனே சமையலறைக்குப் போய் ஆகாரம் தயாரிக்க உத்திரவிட்டான். அந்தச் செம்புப் பாத்திரங்களும், தகர சாமான்களும் எவ்வளவு பளபள என்று ஜோராக இருந்தன! எல்லாம் அவனுக்கும் அவளுக்கும்தான் சொந்தம். சமையற்காரனிடம் பக்கத்து ஹோட்டலுக்குப் போய் சாப்பாடு அனுப்பச் சொல்லி வரும்படி சொன்னான். அந்த ஹோட்டல் முதலாளிக்குத் தெரிந்ததுதான். அவனுக்கு இது பற்றி எல்லாம் ஒரு நாள் முந்தியே தகவல்கள் கொடுக்கப்பட்டிருந்தன. அவனுக்கென்ன, வேண்டியது பணம் தானே!

மாப்பிள்ளை மறுபடியும் படுக்கையறைக்குத் திரும்பி வந்தார். அங்கே வந்து நின்று கொண்டு "நான் உள்ளே வரலாமா?" என்று கேட்டார்.

பதில் வந்தது. ஒரு சின்ன கீச்சக் குரலுடன் "அன்பே வேண்டாம். இன்னும் ஒரு நிமிஷம் போகட்டும்" என.

குஸ்டாப் பின் மேஜையை ஒழுங்கு படுத்தலானான். அதற்குள் ஹோட்டலிலிருந்து பலகாரம் வந்து சேர்ந்தது. மேஜைமேல் வெள்ளை விரிப்பு போட்டு அதன் மேல் அழகான கண்ணாடி டம்ளர்களும், புதிய சாமான் தட்டுகளும் வைக்கப் பட்டன. லூசியின் இடத்திற்கும் பக்கத்திலே மலர் மாலை இருந்தது. பூ வேலைப்பாடுடைய, காலை உடையுடன் இருந்த லூசியை சூரிய கிரணங்கள் வந்து ஆசீர்வதித்தன. இருந்தும், இன்னும் அவள் உறக்கம் கலைந்த பாடில்லை. சாய்வு நாற்காலியில் சாயலானாள். என் சிரமம்? குஸ்டாபே நாற்காலியோடு இழுத்து அவளைப் பக்கத்தில் வைத்துக் கொண்டான். இரண்டொரு துளி சாராயம், அது அவளை உற்சாகப்படுத்தி விட்டு விடும். ஒரு வாய்......அது அவள் ஆவலைத் தட்டி எழுப்பி விட்டு விடும். விநோதம்தான்! அவள் அம்மா, அவள் சாராயங்கள் குடிப்பதை பார்க்கக் கூடுமானால்! அவள் என்ன சொல்வாள்? ஆனால் இதெல்லாம்தான் கல்யாணத்திற்கு ஆகமனங்கள் ஆயிற்றே! தெரிந்ததுதான்! இஷ்டப்படி என்ன வேண்டுமானாலும், எப்படியும் செய்து கொண்டே போகலாம்!

இளம் புருஷன், தன் மனைவிக்காக ரொம்ப கவலையுடன் காத்திருக்கின்றான். என்ன ஆவலுடன்! வாஸ்தவத்தில், அவன் கல்யாணமாவதற்கு முன்னால் அவனது பிரமச்சரிய வாழ்விலே அவனுக்கு இன்னும் இதைவிட நல்ல சாப்பாடுகளெல்லாம் கிடைத்திருக்கும். ஆனால் இதைப் போன்ற சந்துஷ்டியையோ, உற்சாகத்தையோ அவன் அனுபவித்திருக்கவே முடியாதுதான்! ஒரு கிளாஸில் 'பீரை' ஊற்றிக் கொண்டு ஒரு தட்டில் பலகாரங்களை எடுத்து வைத்துக் கொண்ட பொழுது

இப்படி எல்லாம் அவன் மனம் நினைத்துப் பார்த்தது. பிரமச்சாரிகள் — கல்யாண மாகாதவர்கள் எல்லாம் மடையர்கள்! எவ்வளவு லோபிகள்! ஏன் அவர்கள் மீதும் நாய்களுக்கிருப்பது போன்று ஓர் வரி போடக்கூடாது? லூசிக்கு இதில் அவ்வளவு வேகம் தட்டவில்லை. சாந்தமாவும், இனிமையாயும் சொன்னாள்: ஒரு வேளை அந்த ஏழைப் பசங்கள் கல்யாணம் செய்து கொள்ளாத தற்கு அவர்களது இரக்க குணம் தான் காரணமாயிருக்க வேண்டும். அதில் சந்தேகமே இல்லை. அவர்கள் கல்யாணம் செய்து கொள்வார்களானால், அவள் நினைக்கிறபடி அவர்களுந்தான் இப்படியெல்லாம்......''

குஸ்டாபின் மனதிலே ஓர் கவலை தோன்றியது. நிச்சயம், சந்தோஷம் என்பது பணத்தினால் நிறுத்துப் பார்ப்பதல்ல. அல்லவே அல்லதான். ஆனால் — பரவாயில்லை. எவ்வளவோ வேலைகளிருக்கின்றன. பின் எல்லாம் சாவதானமாய்ப் போய் விடக்கூடும். தற்போதைக்கு அங்கே இந்தக் கம்மென்று மணம் வீசும் கௌதாரி வறுவலையும், மடையான் குழம்பையும், பிரெஞ்சு ஒயினையும் தான் முக்கியமாகக் கவனிக்க வேண்டும். இந்தத் தடபுடலான சாப்பாடும், ஆர்டியோசியாகோ பழங்களும் அந்த இளம் மனைவிக்கு ஓர் கணம் திகிலேற்படுத்தி விட்டது. அவள் குஸ்டாபை சங்கோசத்துடன் கேட்டாள்: "அவர்கள் என்றைக்கும் இப்படியே வாழ்க்கை நடத்த முடியுமா?'' என. ஆனால் குஸ்டாப் லூசியின் கிளாசில் இன்னும் ஓர் தரம் நிறைய ஒயினை ஊற்றி வைத்துவிட்டு அவளுக்கு சாந்தமாகச் சொன்னான் "எல்லா நாளும் ஒரு நாளைப் போலிராது. ஜனங்கள் வாழ்க்கை இன்பத்தை அவர்களால் முடிந்தபோது அனுபவிக்க வேண்டும். ஆஹா! வாழ்க்கை எப்படி அழகாக இருக்கின்றது!''

ஆறு மணிக்கெல்லாம் இரண்டு குதிரைகள் பூட்டிய நல்ல அழகான வண்டியில் தம்பதிகள் ஏறி உட்கார்ந்து கொண்டார்கள். வண்டி 'பார்க்' வழியாகவெல்லாம் போனது. அது சமயமெல்லாம் லூசிக்கு நடந்து செல்லும் பாதசாரிகளைப் பற்றிய நினைப்பு வந்தது. அவள் கண்ணில் பட்ட அவர்களெல்லாம் இவர்களுக்கு வணங்கி விட்டுப் போகிறார்கள். அவர்கள் அப்படிச் செய்வதில், அவர்கள் திடுக்கிட்டுப்போய் அப்படிச் செய்ய வேண்டும்; பின் அவர்களுக்கு இதில் பொறாமை ஏற்பட்டிருக்க வேண்டும். அவள் இப்படி நினைத்துக் கொண்டாள். குஸ்டாபும் நல்ல வேலை செய்தான். அவர்கள் நினைத்திருக்க வேண்டும்: அவன் நல்ல ஓர் பணக்காரப் பெண்ணைப் பார்த்து கல்யாணம் செய்து கொண்டு விட்டான். அந்த ஏழைப் பசங்கள் வழியில்லாதவர்கள், காலால் நடக்க வேண்டியதுதான். மிருதுவான மெத்தையில் உட்கார்ந்து, சாய்ந்து கொண்டு, கொஞ்சமும் சிரமமின்றி வண்டியில் செல்வது எவ்வளவு இன்பமானது! அது தான் மனமொத்த காதல் மணத்தின் அறிகுறி.

இரண்டு மாசங் கழித்து லூசிக்கு உடம்பு சரியில்லை. அவளுக்கு என்ன ஜலதோஷமா! அல்லது ஒருவேளை பாத்திரங்களில் ஏற்பட்ட களிம்பினால் இருக்குமா? அவளை வந்து பார்க்கும்படி கூப்பிட்டு வந்த டாக்டர் அவள் உடம்

யைப் பார்த்துச் சிரித்துவிட்டு "அந்த ஸ்திரீக்கு ரொம்ப உடம்பு சரியாயில்லை என்றால் அது நிச்சயம் ஓர் புது யாதிரி சீக்காய்தான் இருக்க வேண்டும்" என்று சொல்லி விட்டான். ஒரு வேளை சுவற்றில் ஒட்டப்பட்ட காகிதத்தில் ஏதாகிலும் விஷபாஷாண சம்பந்தமாக இருக்கலாமோ, என்று பாக்குக்குத் தோன்றியது. உடனே அவளை ரஸாயனவாதி ஒருவனிடம் அழைத்துக்கொண்டு போய் உடம்பை நன்றாக பரீட்சித்துப் பார்க்கும்படி சொன்னான். அதற்கு அந்த ரசாயணவாதி பார்த்துவிட்டு அதனால் அப்படியெல்லாம் ஒன்றுமில்லை என்பதாக சொல்லி விட்டான்.

அவன் மனைவியின் நோய் கொஞ்சமும் குணமடையவில்லை. குஸ்டாப் தானே பரீட்சித்து ஆராய்ச்சி செய்து பார்த்து விடுவதென்று முடிவு செய்து கொண்டான். வைத்திய நூல்களைப் புரட்டிப் புரட்டிப் பார்த்து அவள் நோய்க்கு சிகிச்சை கண்டு பிடிக்கலானான். அவளுக்கு தினம் வெந்நீர் ஸ்நானம் செய்வித்தான். ஒரு மாத காலத்தில் அவள் நோய் இன்னதென்று தெளிவாகலாயிற்று. இது ரொம்ப திடீரென்று — அவர்கள் எதிர்பார்த்திராத அவ்வளவு சீக்கிரத்தில்! அவர்கள் ஓர் அப்பா, அம்மா ஆகப் போகிறார்கள். அதுவும் — அது ஓர் ஆண் குழந்தையாக இருக்கக் கூடுமானால், அதில் சந்தேகமே இல்லை. அதற்கு என்ன பெயரிடுவது என்பது பற்றி இப்போதே நினைத்துப் பார்க்க வேண்டும். அதற்குள் லூசி, புருஷன் பக்கத்தில் உட்கார்ந்து அவனுக்கு ஞாபகப் படுத்தலானாள். அவன் கல்யாணம் ஆனதிலிருந்து இதர வேலைகள் ஒன்றுமே செய்யவில்லை. அந்த வகைகளில் வரவேண்டிய வருமானம் வராததால் செலவுக்கே ரொம்பவும் நெருக்கடியாக ஆகிவிட்டது. அதுவும் உண்மைதான். அவர்கள் ரொம்பவும் ஆடம்பரமாகத்தான் வாழ்ந்து வந்தார்கள். ஆனால் இனி அதெல்லாம் மாறியாக வேண்டும். அப்போதுதான் எல்லாம் திருப்தியாக இருக்க முடியும்.

மறுநாள் குஸ்டாப் தன் நெருங்கிய நண்பரான பாரிஸ்டரைப் போய்ப் பார்க்கச் சென்றான். அவரிடம் ஓர் பிராமிஸரி நோட்டு எழுதித் தருவதாயும், அதன்பேரில் பணம் வேண்டும் என்றும் தவிர்க்க முடியாத சில செலவுகளுக்கு பணம் வேண்டியிருப்பதாயும், விஷயங்களைச் சொல்லி கேட்டான். அதற்கு அந்தச் சட்டம் படித்த மனுஷன் ஒரேயடியாய் சொல்லி விட்டான்: "கல்யாணம் செய்து கொண்டு குடும்ப பாரத்தை வகிப்பதில், செலவுகளை அதிகரித்து பலுவை உண்டு பண்ணும் இந்த ஓர் காரியத்திற்கு, என்னால் ஒருக்காலும் ஒன்றும் செய்வதற்கில்லை" என்பதாக.

பாக்குக்கு மீண்டும் வற்புறுத்த மனமில்லை. வெட்கத்தோடும் வெறுங்கையுடனும் வீட்டுக்குத் திரும்பி வந்தான். வந்ததும் யாரோ இரண்டு பேர்வழிகள் அவனை வந்து தேடிவிட்டுப்போனதாகச் சொன்னார்கள். அவர்கள் பட்டாளத்தைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்களாக இருக்கக் கூடுமோ என்று நினைத்தான். ஆனால் இல்லை. அவர்கள் சேனைத்தலைவர்களல்ல. ரொம்பவும் வயது முதிர்ந்தவர்களாகத் தெரிந்தது. நல்ல வேளை. பாக்குக்கு ஞாபகம் வந்தது. அவர்களுடன் உப்சலாவில் பழக்கம். அவர்கள் அவன் கல்

யாணமான விஷயம் கேள்விப் பட்டு அவனைப் பார்ப்பதற்காக வந்திருக்க வேண்டும். வேலைக் காரன் உப்சலா என்று சொன் னான். ஆனால் ஸ்டாக் ஹோமிலி ருந்து வந்தவர்கள். அற்புதமான 'ஸ்டிக்கு'கள் கொண்டு வந்திருந் தார்கள். அவர்கள் திரும்பவும் வருவார்கள் என்பதில் கொஞ்சம் கூட சந்தேகமே இல்லை.

பின் அவன் கடைத்தெருவுக்குச் சென்றான். நல்ல வகையான 'ஸ்டாபெர்ரி' போன்ற பழ தினு சுகள் எல்லாம் வாங்கிக்கொண்டு வந்தான். வீட்டுக்கு வந்ததும் தன் மனைவியிடம் அதைக்காட்டி "பார்த்தாயா, இந்தக் காலத்தில் கூட இவ்வளவு பெரிய பழங்களை ஒரு 'பிண்ட்' ஒன்னரை குரோ னுக்கு வாங்கிக் கொண்டு வந்து விட்டேன்" என்றான்.

"ஆனால் அருமை குஸ்டாப், நாம் இதிலெல்லாம் பிரியப்படக் கூடாது. நம் கடன்கள் என்ன ஆச்சு" என்றாள் லூசி.

"கடன்கள்தானே, என் மொத் தமாய் ஒரு கடன் வாங்கி இந்த சில்லரைப் பிடுங்கல்களை எல்லாம் ஒரே நாளில் தீர்த்து விட்டுவிடு வோம்" என்றான்.

"அப்படியா, ஆனால் இதுவும் ஓர் புதுக்கடன் அல்லவா" என் றாள்.

"அப்படியிருந்தாலும் பரவா யில்லை. அது நீண்ட காலத் தவணை யாக இருக்கும். நீ என் இந்த மாதிரி உபத்திரவம் பிடிச்ச சமாச் சாரங்களைப் பேசுகிறாய். அந்தப் பழங்களைப் பார். ஆஹா! அதை சாப்பிட்டு விட்டு ஒரு கிளாஸ் ஒயின் குடித்தால் எப்படி ஜோ ராக இருக்கும். அது உன் மன தில் படவே இல்லையாக்கும்.

உடனே வேலைக்காரனை அனு ப்பி நல்ல உயர்ந்த ரக ஸ்பெயின் ஒயின் ஒரு பாட்டில் வாங்கி வரும் படி உத்திரவிட்டான்.

அன்று மாலை பாக்கின் மனைவி சற்று நேரம் சோபாவில் படுத்து தூங்கி விட்டு எழுந்தாள். உடனே கடன் சமாச்சாரத்தை கேட்கலா னாள். அவள் என்ன சொன்ன போதிலும் அவன் கோபித்துக் கொள்ள மாட்டானென்பது அவள் நினைப்பு. கோபமாவது! இல்லை. அதுதான் கிடையவே கிடையாதே. வேறென்ன? அவள் சொன்னாள்: "பலசரக்கு கடைக்காரனுக்கு பணம் கொடு க்க வேண்டும். கசாப்புக் கடைக் காரனும் நம்மை தொந்திரவு படுத் துகிறான்; குதிரை வண்டிக்காரன் பாக்கியை ஜாடாவாய் தீர்த்து விட வேண்டுமென்கிறான்"

இதற்கு பாக் பதில் சொன்னான்: "இதுதானே! எல்லாவற்றை யுமே — நாளைக்கே — ஒரு பைசா பாக்கியில்லாமல் கொடுத்துத் தீர் த்து விடுவோம். கடன் கிடைக் கட்டும். நாம் வேறு விஷயத் தைப்பற்றி;—நாம் கொஞ்ச நாழி இப்படி வெளியே போய்விட்டு வரலாம். நீ என்ன நினைக்கிறாய்? நீ வண்டியில் வந்தால்கூட தேவ லாம். நல்லது, அதுவும் சரிதான். டிராமிலேயே போய் பார்க்கில் இறங்கி விடலாம்.

அவர்கள் பார்க்கிற்குச் சென் றார்கள். அல்ஹாம்பரா ஹோட் டலில் ஓர் தனி அறை பிடித்து அதில் தங்கி, சாப்பிட்டார்கள். அது அவர்களுக்கு ரொம்ப தமா ஷாக இருந்தது. ஹோட்டலுக்கு வந்த சாதாரண ஜனங்கள் இவர் களைப்பற்றி, இவர்கள் ஓர் உல் லாச இளம் காதல் தம்பதிகள் என நினைத்திருக்க வேண்டும்.

இந்த சமயத்திலே பில் வந்தது. அதைப்பார்க்க ஓசிக்கு தூக்கி வாரிப்போட்டது. ஆனல் குஸ்டாபுக்கு வெகு ஜோர். வீட்டிற்குப் போய் இருக்கிறது அந்த பணச் செலவுகளைப்பற்றிய சமாச்சாரம் எல்லாம்.

சில மாதங்கள் கழியவும், புதிய தேவைகளும் ஏற்படலாயிற்று. ஓர் தொட்டில், குழந்தைக்கு துணி, இன்னும் எல்லாம் தயார் செய்தாக வேண்டும்.

பாக்குக்கு இப்பொழுது வருவாயை விஸ்தரிப்பது சுலபமாக இல்லை. பலசரக்குக் கடைக்காரனும் கடன் கொடுக்க மறுத்துவிட்டான். அவனுக்கு இஷ்டம்போல் கடன் கொடுத்து ஏட்டில் எழுதிக்கொண்டே போனல் அவர்கள் கதி என்ன ஆவது!

கடன் வாங்கவும் வகையில்லாது போன இந்த சமயத்திலே, அவனுக்கு நெருக்கடி இன்னும் அதிகரித்தது. பிறக்கப் போகும் குழந்தையைத் தூக்கி வைத்துக் கொள்ள சம்பளத்திற்கு ஓர் தாதியை அமர்த்தியாக வேண்டும். இதோடு இன்னும் புதிய பொருப்புகளும், பளுவும் அதிகரித்தன. குடும்ப விவகாரங்களில் சிக்கி தொல்லைப்பட வேண்டியவனுய். இருந்தும் எப்படியும் சமாளிக்கத்தான் பார்க்கிருன்; மொழி பெயர்த்தும் வருகிருன். இதெல்லாம் உண்மையே. ஆனலும், அவனை அரித்துப் பிடுங்கித் தின்னும்கடன்காரர்களுக்கு அவன் என்ன செய்வது? ரொம்ப தாராள மனதுடன் தன் மாமனரின் உதவியை நாடுவதென்று தீர்மானித்தான். அந்த வயோதிகரும் அவனை வரவேற்று ரொம்ப நாஸூக்காக சொன்னர்:

"இந்த ஒரு தடவை மட்டும் உனக்கு உதவி செய்கிறேன். இனிமேல் முடியாது. நீ ஒரு பிள்ளைமட்டுமல்ல எனக்கு. என் காரியங்கள் எவ்வளவோ கிடக்கிறது" என்பதாக.

பிரசவிக்கப் போகும் தன் மனைவிக்கு ஒயின், கோழி சூப்பு ஆகிய விலை உயர்ந்த சாமான்களெல்லாம் வாங்கிக் கொடுத்தாக வேண்டும். மருத்துவச்சிக்கு பணம் கொடுத்தாக வேண்டும்.

அதிர்ஷ்ட வசமாக, அவன் மனைவி சுகப்பிரஸவமானுள். நாளடைவில் அவள் உடல் தேறியது. அவள் பிரஸவித்த பின்னர், இப்பொழுது முன்னரைவிட அதிக ரூப லட்சணமாக காணப்பட்டாள். ஆனல் ஓசியின் தகப்பனர் ரொம்ப கடுமையாக தன் மருமகனிடம் பேசலானர்:

"எப்படியும், இனி கஷ்டம் அதிகரித்து விடும். இனிமேல் குழந்தைகள் வேண்டாம்" என்பதாக.

கொஞ்ச காலம் பாக்கின் குடும்பம் காதலிலும், கடன் விஸ்தாரத்திலும் நடந்து வந்தது. ஒரு நாள் கஷ்டம் தலைவாசலுக்கே வந்து இடிக்கலாயிற்று. வீட்டையும் காலி செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டது. அந்தக் கிழமனிதன் வந்து ஓசியையும், அவள் குழந்தையையும் அழைத்துப் போகலானன். வண்டியில் போகும் போதே கிழவனுக்கு ஓசியைப் பற்றிய கொடிய எண்ணங்கள் அவன் மனதில் தோன்றலாயின.

ஓசி எப்போதும் குஸ்டாபுடனேயே தங்கி இருப்பாள். ஆனல் தங்க அங்கே இடத்திற்கும் வழியில்லாது போய்விட்டது.

அவன்தான் பாக்கி, கடன்காரர்கள் அமினு சகிதம் வந்து வீட்டில் உள்ள மேஜை நாற்காலி முதல், சமையல் பாத்திரங்கள் வரை சகல சாமான்களையும் எடுத்துக் கொண்டு போய் விட்டார்கள்.

இப்பொழுதுதான், குஸ்டாபுக்கு நிஜ வாழ்க்கை ஆரம்பமாகியது. எப்படியோ ஓர் பத்திரிகையொன்றில் 'புரூப் ரீடர்' வேலையை ஒப்புக் கொண்டான். அதுவும் காலையில் வெளியாகும் தினசரி செய்திப் பேப்பர். ஆகவே இரவில் ஒவ்வொரு நாளும் மேஜையண்டையிருந்து நீண்ட நேரம் வேலை பார்க்க வேண்டியவனுனன். அவனுக்கு இந்தக் கடன் தொல்லைகள் மட்டும் இருந்திராவிடில், அவனுக்கு வேலையில் உயர்வு கிடைத்தாலும் சரி, கிடைக்கா விட்டாலும் சரி. அந்த சர்க்கார் உத்தியோகத்தை விட்டு வந்தே இருக்க மாட்டான். என்ன செய்வது? அவன் மனைவியையும், குழந்தையையும் ஞாயிற்றுக் கிழமைகளில் மட்டும் போய் பார்ப்பதற்கு அவன் மாமனுர் சம்மதித்தார். ஆனுல் அதிலும் தொல்லை. அவர்கள் இருவரும் ஒரு நிமிஷம்கூட தனியாக இருந்து விட முடியாது.

மாலையில், அவன் பத்திரிகாலயத்திற்குப் புறப்பட்டதும் அவர்கள் வாசற்படிவரை வந்து வழியனுப்புவார்கள். அவன் மனம் புண்பட்டு, வேதனை தாளமாட்டாதவனுக கிளம்பிச் செல்வான். இன்னும் அவனுக்கு இருபது வருஷங்களாகிலும் செல்லும்; அவன் கஷ்டம் நீங்கி......அதன் பின்பு — ஆமாம், பின் என்ன? அவன் மனைவியையும், குழந்தையையும் வைத்து போஷிப்பானு? அவன் மாட்டவே மாட்டான், ஆனுல் அதற்குள் அவன் மாமனுரும் இறந்துபோய் விடுவாரானுல், பாவம், அவர்களுக்கு ஒண்ட நிழலுக்கும் திண்டாட்டமாகிவிடும். அவ்வகையில், அவர்களைத் தனியே பிரித்து வைத்துவிட்ட அந்தக் கிழமனிதர் எவ்வளவுதான் கொடியவராக இருந்த போதிலும், அவன், அவருக்கு நன்றி செலுத்த வேண்டியவன்தான்.

ஐயையோ! மனித வாழ்க்கை உண்மையில் எவ்வளவு கடுமையாயும், கஷ்டமாயுமிருக்கின்றது! ஆமாம், இது ரொம்ப வெட்கக்கேடு. இவ்வுலகிலே மிருகங்கள் கூட சிரமமின்றி, நல்ல ஜீவனம் சுலபமாக நடத்துகின்றன. ஆனுல் மனிதன் மட்டும், எல்லாவற்றிலுமே உழைத்து உழைத்து உழல வேண்டியவனுகின்றுன். இது மகா மானக்கேடுதான். எல்லா மனிதர்களும் நன்ருக வாழ முடியாதபடி இருக்கின்றது! எல்லா மனிதர்களுக்கும் வாழ்வின் சுக போகங்கள் கிடைக்க வசதியில்லாதிருக்கின்றது!

[ஸ்விடிஷ் கதையின் மொழி பெயர்ப்பு]

★

விருந்து

விருந்து மகிழ்ச்சிக்குரிய விஷயம். ஏனென்ருல் சில பேரை அழைக்காததாலேயே மகிழ்ச்சி ஏற்படுகிறது!

சிலப்பதிகாரம்

சர். ஆர். கே. சண்முகம் செட்டியார்

மதுரைக் காண்டம்

(தொடர்ச்சி)

மதுரைக்கு வழி — சிறுமலை

(58—86)

அந்தணனைப் பார்த்துக் கோவலன் "நாங்கள் மதுரைக்குப் போகின்றவர்கள்; மதுரைக்குச் செல்லும் செம்மையான வழியை எங்களுக்குச் சொல்ல வேண்டும்" என்று கேட்க, அந்தணன் சொல்கிறான்.

"அமைச்சனும். அரசனும் தங்கள் கடமையை மறந்து கொடுங்கோல் புரியவே, செங்கோல் முறையில்லாமல் போன நாட்டைப் போல, வேனிற்காலமும் கதிரவனும் கொடுமை செய்தலால், காட்டு நிலமும் மலை நிலமும் தத்தம் வளங்கள் அழிந்து கொடிய பாலை நிலங்களாக மாறுகின்ற இந்த வெயிற் காலத்தில், இந்த இளம் பெண் மகளோடு புறப்பட்டு வந்தீரே!

"கற்பாறைகளும், சின்னஞ் சிறு மலைகளும், மயக்கம் தருகின்ற பேய்த்தேரும் நிறைந்த இந்தக் கொடிய வழியைத் தாண்டிப் போனால் கொடும்பாளூர், நெடுங்குளம் என்ற இரண்டு ஊர்கள் உண்டு. அவ்விரண்டு ஊர்களுக்கும் பொதுவாக மையத்தில் ஓர் ஏரி இருக்கின்றது. அந்த ஏரியைக் கடந்து சென்றால் திரிசூலம் போல் மூன்றாகப் பிரியும் வழியைக் காண்பீர்.

"அவற்றுள் வலப்புறமுள்ள பாதையில் சென்றால், வழி முழுவதும் பரந்த வெண்கடப்ப மரமும், தலை காய்ந்த ஓமை மரமும், தாள் பொரிந்த வாகை மரமும், தண்டு உலர்ந்த மூங்கிலும், வாடிப்போன மரல் செடிகளும் நிறைந்திருக்கும். குடிக்கவும் தண்ணீர் இல்லாமல் மான்கள் கதறிக் கொண்டிருக்கும். வேட்டுவர்கள் வசிக்கும் ஊர்களையும் இடை இடையே காண்பீர்கள்.

இந்தக் கொடிய காட்டைக் கடந்து சென்றால் அதற்கப்பால் கரும்பும், நெல்லும், தினையும், வரகும், காயமும், மஞ்சளும், கவலைக் கிழங்கும், வாழையும், கமுகும், தெங்கும், மாவும், பலாவும் நிறைந்த இடத்தின் மத்தியில் சிறுமலை என்னும் குன்றம் தோன்றும். அம்மலையை வலம் வைத்துச் சென்றால் நீங்கள் மதுரை நகரத்தை அடையலாம்."

"மாமறை முதல்வ! மதுரைச் செந்நெறி
கூறு நீ;" எனக் கோவலற்கு உரைக்கும்;
"கோத்தொழிலாளரொடு கொற்றவன் கோடி
வேத்தியல் இழந்த வியன் நிலம் போல,
வேனல் அம் கிழவனொடு வெம்கதிர் வேந்தன்
தான் நலம் திருகத் தன்மையின் குன்றி,
முல்லையும் குறிஞ்சியும் முறைமையின் திரிந்து
நல் இயல்பு இழந்து நடுங்கு துயர் உறுத்துப்
பாலை என்பதோர் படிவம் கொள்ளும்
காலை, எய்தினர் காரிகை தன்னுடன்;
அறையும் பொறையும் ஆர்இடை மயக்கமும்
நிறை நீர் வேலியும் முறைபடக்கிடந்த, இந்
நெடும் பேர் அத்தம் நீந்திச் சென்று,
கொடும்பை நெடுங்குளக் கோட்டகம் புக்கால்,
பிறை முடிக் கண்ணிப் பெரியோன் ஏந்திய
அறைவாய்ச் சூலத்து அருநெறி கவர்க்கும்;
வலம்படக் கிடந்த வழி நீர் துணியின்,
அலறுதலை மாசமும், உலறுதலை ஓமையும்,
பொரி அரை உழிஞ்சிறும், புல்முளி மூங்கிலும்,
வரி மரல் திரங்கிய கரிபுறக் கிடக்கையும்,
நீர் நசைஇ வேட்கையின் மான் நின்று விளிக்கும்
கானமும், எயினர் கடமும் கடந்தால்;
ஐவன வெண்ணலும், அறைக்கண் கரும்பும்,
கொய்பூம் தினையும், கொழும்புன வரகும்,
காயமும், மஞ்சளும், ஆய்கொடிக் கவலையும்,
வாழையும், கமுகும், தாழ்குலைத் தெங்கும்,
மாவும், பலாவும், சூழ் அடுத்து ஓங்கிய

85 தென்னவன் சிறுமலை திகழ்ந்து தோன்றும்;
அம்மலை வலம்கொண்டு அகன்பதிச் செல்லுமின்;

[மாமறை முதல்வ — சிறந்த வேதத்தை உணர்ந்த அந்தணனே!; மதுரைச் செந்நெறி — மதுரைக்குச் செல்லும் செம்மையான வழி; கூறு நீ என — ; கோவலற்கு உரைக்கும் — கோவலனுக்கு அவ்வந்தணன் கூறுகின்றான்;

கோத்தொழிலாளரொடு — அரசனுடைய காரியங்களைப் பார்க்கும் அமைச்சர்களோடு; கொற்றவன் கோடி — அரசனும் மாறுபட்டு; வேத்தியல் இழந்த — அரசனின் சொங்கோல் கெட்ட; வியன் நிலம் போல — பரந்த நாட்டைப் போல; வேனல் அம் கிழவனொடு — வேனிற் காலமாகிய அழகிய அமைச்சனுடன்; வெம் கதிர் வேந்தன் — கொடிய கதிர்களையுடைய சூரியன்; தான் நலம் திருக — தான் நன்மையினின்றும் மாறுபடுதலால்; தன்மையின் குன்றி — தனது இயல்பினின்றும் குறைந்து; முல்லையும் குறிஞ்சியும் — முல்லை நிலமும் குறிஞ்சி நிலமும்; முறைமையின் திரிந்து — முறையாக மாறி; நல் இயல்பு இழந்து — நல்ல வளங்களை இழந்து; நடுங்கு துயர் உறுத்து — கண்டவர் நடுங்கக் கூடிய துன்பத்தைக் கொடுத்து; பாலை என்பதோர் படிவம் — பாலை நிலம் என்னும் வடிவத்தை; கொள்ளும் காலை — அடைகின்ற இக்காலத்தில்; காரிகை தன்னுடன் எய்தினர் — இப்பெண் மகளோடும் வந்து சேர்ந்தீர்;

வேத்தியல் — வேந்தனின் இயல்பு, அதாவது செங்கோல் முறை; சூரியனை அரசனாகவும், வேனிற் காலத்தை அமைச்சனாகவும் வைத்துக் கூறுகிறார். இருவரும் கொடுங்கோல் புரிவதால் முல்லை நாடும், குறிஞ்சி நாடும் பாலைவனம் போல் ஆய்விட்டன.

அறையும் — கற்பாறைகளும்; பொறையும் — சிறு மலைகளும்; ஆர்இடை மயக்கமும் — மயக்கம் தருகின்ற கடத்தற்கு அரிய வழிகளும்; நிறை நீர் வேலியும் — நிறைந்த பேய்த் தேரும்; முறைபடக் கிடந்த — இவைகள் முறையாகக் கிடந்த; இந் நெடும் பேர் அத்தம் — இந்த நீண்ட பெரிய வழியை; நீந்திச் சென்று — கடந்து போய்; கொடும்பை நெடுங்குளக் கோட்டகம் — கொடும்பாளூர் நெடுங்குளம் என்னும் இரண்டு ஊர்களுக்கும் பொதுவாகிய ஏரியின் கரையை; புக்கால் — அடைந்தால்;

பேய்த்தேர் என்பது வெறும் நிலத்தில் நீர் ஓடுவது போல் தோன்றுகின்ற கானல்; அத்தம் — வழி; கோடு — கரை அதாவது ஏரியின் கரை.

பிறை முடிக் கண்ணி — இளம் பிறையைத் தன் முடியிலே மாலையாகக் கட்டிய; பெரியோன் ஏந்திய — சிவபிரான் தன் கையில் ஏந்திய; அறவாய்ச் சூலத்து — பிளவுபட்ட வாயினையுடைய திருசூலத்தைப் போன்ற; அருநெறி கவர்க்கும் — அரிய வழிகள் பிளவுபட்டுப் போகும்; வலம் படக் கிடந்த வழி — அவற்றுள் வலப் பக்கத்தில் இருக்கும் வழியில்; நீர் துணியின் — நீங்கள் போக நினைத்

தால்; அலறுதலை மராமும் — பரந்த தலையினையுடைய வெண்கடப்ப மரமும்; உலறுதலை ஓமையும் — காய்ந்துபோன தலையினையுடைய ஓமை மரமும்; பொரி அரை உழிஞ்சிலும் — பொரிந்து போன அடி மரத்தையுடைய வாகை மரமும்; புல் முளி மூங்கிலும் — தண்டு உலர்ந்த மூங்கில் மரமும்; வரி மரல்திரங்கிய — கோடுகளையுடைய மரல் செடி வாடிப்போய்; கரி புறக் கிடக்கையும் — கரிந்து கிடக்கும் இடங்களும்; நீர் நசைஇ வேட்கையின் — நீரை விரும்பிய வேட்கையினால்; மான் நின்று விளிக்கும் — மான் நின்று கதறுகின்ற; கானமும் — பாலை நிலத்தையும்; எயினர் கடமும் — வேட்டுவர் வாழும் காட்டையும்; கடந்தால் — ;

(அறைவாய் — அற்றுப் போன வாய், அதாவது பிளவுபட்ட வாய்; அரை — அடிமரம்; முளி — உலர்ந்து போவது.)

ஐவன வெண்ணெலும் — ஐவனை என்னும் வெள்ளிய நெல்லும்; அறைக்கண் கரும்பும் — அறுபட்ட கணுக்களையுடைய கரும்பும்; கொய்பூம் தினையும் — கொய்யும் பருவத்தையுடைய அழகிய தினையும்; கொழும்புன வரகும் — கொழுமையான கொல்லைப்புறத்தில் விளையும் வரகும்; காயமும் — வெள் உள்ளியும்; மஞ்சளும் — ; ஆய் கொடிக் கவலையும் — அழகிய கொடிகளையுடைய கவலைக் கிழங்கும்; வாழையும் கமுகும் — ; தாழ்குலைத் தெங்கும் — தாழ்ந்த குலைகளையுடைய தென்னை மரமும்; மாவும் பலாவும் — ; சூழ் அடுத்தோங்கிய — (ஆகிய இம்மரங்கள்) ஒன்றின் பக்கம் ஒன்றாய் ஓங்கி வளர்ந்து விளங்கும்; தென்னவன் சிறுமலை — பாண்டியன் சிறுமலை என்னும் குன்றம்' தோன்றும் — ; அம்மலை வலம் கொண்டு — அந்த மலையை உங்கள் வலப்பக்கத்தில் வைத்து; அகன்பதிச் செல்லுமின் — மதுரைமா நகரை அடைவீராக;]

அழகர் மலை

(87—103)

முன்னே சொல்லப்பட்ட வழியை விட்டு இடது பக்கமாகச் சென்றால், வண்டுகளின் இசை நிறைந்த வயல்களும், குளிர்ந்த பூஞ் சோலைகளும், காடுகளும் தென்படும். இவற்றை யெல்லாம் தாண்டினால் அழகர் மலையை அடைவீர்கள். அவ்விடத்தில் மக்களின் பிறவி மயக்கத்தைப் போக்கும் சுரங்கம் ஒன்று உண்டு. அதில் புண்ணிய சரவணம், பவகாரணி, இட்டசித்தி என்று சொல்லப்படும் மூன்று பொய்கைகள் உண்டு. புண்ணிய சரவணம் என்னும் பொய்கையில் படிந்து முழுகினால் ஐந்திர வியாகரண ஞானம் உண்டாகும். பவகாரணியில் முழுகினால் இப்பிறவிக்குக் காரணமாகிய முப்பிறவியை அறிவீர்கள். இட்டசித்தி என்னும் பொய்கையில் நீராடினால், விரும்பியவற்றை யெல்லாம் வாய்க்கப் பெறுவீர்கள்.

87 அவ்வளிப் படரீர் ஆயின், இடத்துச்
செவ்வழிப் பண்ணின் சிறை வண்டு அரற்றும்

தடம்தாழ் வயலொடு, கண்பூம் காவொடு
கடம்பல கிடந்த காடுடன் கழிந்து,
திருமால் குன்றத்துச் செல்குவிர் ஆயின்;
பெருமால் கெடுக்கும் பிலம் உண்டு; ஆங்கு,
விண்ணோர் ஏத்தும் வியத்தகு மரபின்
புண்ணிய சரவணம், பவகாரணியோடு,
இட்ட சித்தி எனும் பெயர் போகி,
விட்டு நீங்கா விளங்கிய பொய்கை
முட்டாச் சிறப்பின் மூன்று உள; ஆங்கு,
புண்ணிய சரவணம் பொருந்துவிர் ஆயின்,
விண்ணவர் கோமான் விழுநூல் எய்துவிர்;
பவகாரணி படிந்து ஆடுவிர் ஆயின்,
பவ காரணத்தின் பழம்பிறப்பு எய்துவிர்;
இட்ட சித்தி எய்துவிர் ஆயின்,
இட்ட சித்தி எய்துவிர் நீரே;

[அவ்வளிப் படரீராயின் — அவ்வழியாக நீங்கள் போகாவிடில்; இடத்து — இடது பக்கத்தில்; செவ்வழிப் பண்ணின் — செவ்வழிப் பண் என்னும் இசையால்; சிறை வண்டு அரற்றும் — சிறகையுடைய வண்டுகள் பாடுகின்ற; தடம் தாள் வயலொடு — அகன்று ஆழமுடைய வயல்களோடும்; தண்பூம் காவொடு — குளிர்ந்த பூஞ்சோலைகளோடும்; கடம் பல கிடந்த காடு உடன் — பாலை நில வழிகள் நிறைந்த காட்டையெல்லாம்; கழிந்து — கடந்து; திருமால் குன்றத்து — திருமால் உறையும் குன்றமாகிய அழகர் மலைக்கு; செல்குவிராயின் — செல்வீரானால்;

(கடம் — பாலை நில வழி.)

பெருமால் கெடுக்கும் பிலம் உண்டு — பெரிய பிறவி மயக்கத்தைப் போக்கும் சுரங்கம் ஒன்று உண்டு; ஆங்கு — அதில்; விண்ணோர் ஏத்தும் — தேவர்கள் புகழுகின்ற; வியத்தகு மரபின் — வியக்கத்தக்க சிறப்பினையுடைய; புண்ணிய சரவணம் — ; பவகாரணியோடு — பவகாரணி; இட்ட சித்தி — ; எனும் பெயர் போகி — என்னும் பெயர்களை உடையனவாய்; விட்டு நீங்கா — தம்மில் ஒன்றையொன்று விட்டு விலகாத; விளங்கிய பொய்கை — சிறப்பு விளங்கும் பொய்கைகள்; முட்டாச் சிறப்பின் — கெடாத புகழ் அமைந்தனவாய்; மூன்று உள — ; ஆங்கு — அவற்றுள்;

புண்ணிய சரவணம் — புண்ணிய சரவணம் என்னும் பொய்கையில்; பொருந்துவிராயின் — படிந்து நீராடினால்; விண்ணவர் கோமான் — தேவர் தலைவனாகிய இந்திரனால் (செய்யப்பட்ட); விழுநூல் எய்துவிர் — ஐந்திர வியாகரணம் என்னும் நூலை நன்கு அறிந்தவராவீர்;

(எய்துதல் — உணர்தல். ஐந்திரம் என்னும் நூல் இந்திரனல் செய்யப்பட்டது.)

பவகாரணி படிந்து ஆடுவீராயின் — பவகாரணி என்னும் பொய்கையில் நீராடினல்; பவ காரணத்தின் — இப்பிறப்பிற்குக் காரணமாகிய; பழம் பிறப்பு எய்துவிர் — முன் பிறப்பின் உணர்ச்சியை அடைவீர்;

(பவம் — பிறப்பு)

இட்ட சித்தி எய்துவிராயின் — இட்ட சித்தி என்னும் பொய்கையில் நீராடினல்; இட்ட சித்தி எய்துவிர் நீரே — நீங்கள் விரும்பிய பொருள்களை வாய்க்கப் பெறுவீர்;]

★

ஏக்கம் தவிர்த்தாய்!

[பி. பி. எஸ்.]

தேமலர்ச் சோலையிலே — சில்லெனும்
தென்றல் உலாவையிலே
மாமலர் கொய்தாயடி — உடனென்
மனமும் கொள்ளை கொண்டாய்!

கண்ணைச் சுழல விட்டாய் — அதில்
காட்டினய் மின்ன லொளி!
எண்ண மெல்லாம் குலைத்து — என்னை
ஏங்கித் தவிக்கச் செய்தாய்!

மோகனப் புன்னகையில் — தொடுத்தாய்
முல்லையரும் புச்சரம்!
சாகசம் செய்தாயடி — மனதில்
சஞ்சலம் சூழ்ந்ததடி!

வீணைக் குரலிசையால் — மயக்கி
விண்ணிற் கழைத்துச் சென்ருய்!
ஆணையிட்டே னப் போதே—உனையன்றி
யாரையு மெண்ணே னென்று!

கன்னியுன் பூககரத்தால்—தொட்டெனை
கள்வெறி கொள்ளச் செய்தாய்!
"என்றும் உங்களவள் நான்!,'—எனச்சொல்லி
ஏக்கம் தவிர்த்தாயடி!

காதலி!

'பிரான்'

★

தென்றலென உன் நினைவு எழுந்து என் சிந்தனைகளை வருடிச் செல்கிறது. அப்போதுதான் என் உள்ளத்தில் என்ன இன்பக் கிளர்ச்சி, புளகாங்கிதம், ஆசை வெறி!

என்றோ நீ கண் சிமிட்டி அளித்த பார்வை என் இதயத்தில் மாறாத மறவாத சித்திரமாகப் பதிந்து விட்டது! அன்று நீ உன் விழிகளால் விழுங்கிய என் இதயத்தை ஏனோ இன்னும் விடவில்லை?

மலைவரையில் மண்டிக் கிடக்கும் மேகக் குவியலைப் போல், அந்தி வானில் காணப்படும் வர்ண விசித்திரங்களைப் போல், உன் கூந்தலைச் சூடி மலர்கள் வரிந்திருப்பதுந்தான் காட்சிக்கு என்ன குளுமை!

வானில் மிளிரும் தாரகைகள் போல், கடல் ஆழத்தில் புரளும் மீன்களைப் போல், ஒப்பற்ற உன் கண்கள் சுழல்வதும் பிறழ்வதும் என் சித்தத்தை ஏன் இப்படிக் குலைக்கின்றன?

நின் செவ்வதரங்களின் மலர்ச்சி, அவை மத்தியில் அந்த வெண் பற்களின் ஒளி, இவை விரித்த, திறந்த அந்த இன்னகையில் என் உள்ளம் மலருகிறது.

உன் ராகம் பிரவகிக்கும் குரலும் நல்ல தாளம் ஒலி செய்யும் மொழியும் என் செவிகளுக்கு இனிய நாதம்!

சதா என் விழிப்பிலும் தூக்கத்திலும் உன் ஆட்டமும் பாட்டமும் நெளிவும் குழைவுமே அகக் கண்கள் முன் கூத்தாடுகிறது.

சிந்தனைகள் எல்லாம் என் வசமின்றி உன் பின்னோடு எங்கோ அலைகின்றன. அவை மீண்டும் என்னை வந்து அடைவது எப்பவோ? மனம் நிலை கொள்ளாத இச் சஞ்சலமேனோ? உன்னையே நினைத்து நினைத்து இதயம் குமுறுவதேனோ?

நிழலில் குளிர்ச்சியும் சாந்தியும் கிட்டுமாம்; ஆனால் உன் நினைவின் நிழலிலோ என்னை மகா உக்கிரமான வேட்கை தகிக்கிறதடீ! உன் இன்ப நினைவில் சதா என் இதயம் துன்பக் கடலாடுதடீ!

கனியினுள் ரஸமாம்
உன் நினைவினில் இனிமை
உரையினில் வருமோ, அடீ!
அச்சுவையினின் விழுமை!

புனர்ஜென்மம்

கே.வி. துரைசாமி ராஜா

3

இடம்: ஊர்க்கவுண்டர் வீடு.

பாத்திரங்கள்: உபாத்தியாயர், கவுண்டர், கவுண்டர் மனைவி.

[நோட்டு எழுதியாய் விட்டது—கவுண்டர் அதைப் பெட்டியிலே வைக்க தன் மனைவியைக் கூப்பிடு கிறார்.]

கவு: ஏளே — ஒன்னெத்தானே இங்கே வா. இந்த நோட்டைக் கொண்டு போய்ப் பெட்டிக் குள்ளே வை. (உபாத்தியாரைப் பார்த்து) நம்ம சம்மந்திக் கவுண்டர் கிட்டே போன வருஷம் வாங்குன பணமுங் கோ. இந்த வருஷம் நோட்டு எழுதலாம் எழுதலாமுன்னு இன்னிக்கித்தாந் தீந்துதுங்கோ. ஏனுங்க இன்னத்த தேதி தானுங்க போட்டெழுதி இருக் கிறீங்க?

உபா: ஆமாங்க இன்னித்த தேதி தானுங்க.

கவு: இன்னிக்கிக் குடுத்தார்னு வைச்சிட்டுப் போகுட்டுமுங்க. அந்தக் கவுண்டனுக்கும் படிக் கத் தெரியாது. நமக்கு ஒரு வருஷ வட்டி மிச்சம் பாருங்க. (சிரித்துக் கொள்ளுகிறார்.)

உபா: கவுண்டரே, நான் போகணும். நேரம் ரொம்ப ஆச்சு பாருங்கோ.

கவு: ஆமாங்க. ஆமாங்க - எனக்கும் பொயிலைக்காடு தண்ணி பாஞ்சுட்டிருக்குது. வந்து வெகு நேரமாச்சுங்கோ. போங்க போங்க — பசங்க ஏகப் பட்ட ரவுசு போட்டுட்டு இருப் பாங்க.

உபா: சோளங் குடுக்கறேன்னு சொன்னீங்களே. அதென்னாச் சுங்கோ.

கவு: ஒ, நான் மறந்திட்டேன் பாத்தீங்களா. (மனைவியைக் கூப்பிடுகிறார்) ஏளே, அளே — என் காது கேக்கலையா. வாத் தியாருக்கு ரெண்டு வள்ளச்

சோளம் இருந்தாக் குடுக்கறது தான.

கவு-மனை : (உள்ளிருந்த படியே) சோளம் ஏதுங்கே—நேத்து ஒரு மிடா இருந்துச்சு பொழுதோட தானே சக்கிலியனுக்குக் குடுத்தேன். இந்த வாத்தியார் நேத்து வந்திருந்தா ஆகாதா. இனிக் குளியிலிருந்து எடுத்தாத் தாஞ் சோளம்.

கவு : அடடே சோளம் இருக்குதுன்னு அல்லவா பாவம் வாத்தியாரைக் கூட்டிட்டு வந்துட்டேன். ஏனுங்க வாத்தியாரே இன்னும் நாலஞ்சு நாளையிலே குழியிலிருந்து சோளம் எடுக்கப் போரோம். உங்களுக்கு மறக்காமெ ரெண்டு வள்ளங் குடுத்தனுப்பறேன் போங்க.

உமா : (ஏமாற்றத்துடன்) என்ன கவுண்டரே இன்னேர வரையிலும் எங்க வீட்டிலே இருந்திட்டுப் பாத்தீங்களே—உங்களைத் தானே நம்பிட்டிருந்தேன். இனியும் காலையிலிருந்து அடுப்பிலே தீ மூட்டுலே. உங்க சோளத்தைப் பார்த்துட்டுத் தான் உலை அடுப்புமேலே ஏறும். எப்படி யாச்சி பெரு மனசு வெச்சு தயவு செய்யுங்கோ.

கவு : (மனைவியை) வீராயி—ஒரு படி ரண்டு படியுங்கூட இல்லையா. வாத்தியார் பாவமடி. இன்னத்த ஒலெக்காகிலும் எதாச்சி இருந்தாக் குடு. அப்பறம் பாக்கியை வாங்கிக்கிட்டும்.

கவு-மனை : காக்காயிக்குக் கூட ரண்டு தவசம் வெளியே இல்லெ. எல்லாங் குளியைக் கலெச்சாத் தான்.

கவு : இன்னு நாலுநாள் பொறுத் தீட்டா—ரெண்டு வள்ளமா வாங்கிக்கலாமே.

உபா : இன்னத்த பசிக்கு ஒரு வழியும் இல்லையா—எட்டணா வாகிலும் குடுங்கோ கடையிலே வாங்கிக்கறேன்.

கவு : கேட்டாக் கேளுங்கோ, கேக்காட்டிப் போங்க—நான் பொய் சொல்றேனுன்னு நினெச்சுகிட்டாலுஞ்சரி - சில்ரை ஒரு சல்லி கிடையாதுங்க. முழுசா நூறு ரூபா நோட்டொண்ணு இருக்கு. அதை முரிச்சாத்தான்.........

உபா : சரியாப் போச்சு—கடவுள் செயல் (எழுந்திருக்கிறார்.)

[ஒரு பையன் அலறி அடித்துக் கொண்டு ஓடி வருகிறான்.]

பையன் : ஐயோ சார். இஸ்ானுப் பெட்டர் வந்திருக்கார் சார் இஸ்ானுபெட்டர்.

உபா : என்னடா உளர்ரே.

பை : இஸ்ானுப் பெட்டர் சார். தொப்பி கண்ணாடி—கால் சராயெல்லாம் போட்டுட்டு பூச் சாண்டியாட்டம் வந்திருக்காங்க சார். உங்களைக் கூட்டிட்டு வரச் சொன்னாங்க சார்.

உபா : யார்ரா இன்ஸ்பெக்டரா?

பை : ஆமாங்க சார் இஸ்ான் பெக்டர்தானுங்க சார்.

உபா : பாழாப்போன இவனும் இதே சமயத்திலே வந்து தொலையணுமா.

[அவசர அவசரமாகப் பள்ளிக் கூடத்திற்கு ஓடி வருகிறார்.]

உபா : யஜமான் நமஸ்காரமுங்கோ நமஸ்காரமுங்கோ.

இன்ஸ்: பள்ளிக்கூடத்தை விட்டிட்டு எங்கே தொலைஞ்சே?

(அதிகார தோரணையில்)

உபா: (கெஞ்சும் பாவனையில்) ஜலவாதைக்கு ரொம்ப அவசரமாயிட்டுதுங்க. வெளியே போனேனே இல்லையோ யஜமானும் இங்கே விஜயம் செய்திட்டீங்க.

இன்: நீ பொய் சொல்றே — சுத்தத் திருடன் — ஊருக்கவுண்டன் வீட்டுக்கு நோட்டெழுதப் போனையா ஜலவாதைக்கு அவசரம்னு போனயா? இப்படித் திருட்டுப் பசங்களை யெல்லாம் உபாத்தியாயராப் போட்டுப் போட்டுத்தான் இந்த நாட்டிலே ஆரம்பக் கல்வி குட்டிச் சுவராய்ப் போச்சு. என் ஆஜர் கம்மியா இருக்கு — இது தான் பள்ளிக்கூடத்தைப் பார்த்துக்கிற லக்ஷணமோ.

உபா: கோவுச்சுக்காதீங்க எஜமான் — ஏழை மேலே கிருபை வைக்கோணும் — நான் உண்மையிலே ஜலவாதைக்குத்தான் போயிட்டிருந்தேன் எஜமான்.

இன்: (அதிக கோபமாக) யாருடா அந்தப் பெரிய பையன். உங்க வாத்தியார் எங்கடா போயிருந்தாரு.

பை: ஊர்க்கவுண்டர் வீட்டுக்கு நோட்டு எழுதறதுக்குங்க.

இன்: உன்னிடம் சொல்லிட்டுப் போயிருந்தாரா?

பை: ஆமாங்க. எங்க எல்லார்த் தோடவுந்தானுங்க சொல்லிட்டுப் போனரு.

இன்: அப்படி மொல்லை மாரிகளை யெல்லாம் வாத்தியார் உத்தியோகத்துக்குப் போட்டிருந்தால் அதுக்கு மரியாதை வரணும்னு எங்கிருந்து வரும்? அந்தப் பையன் பொய்யா சொல்றன்.

உபா: (முன்னிலும் அதிகமாகக் கெஞ்சும் பாவனையில்) எஜமான் உண்மையைச் சொல்றேனுங்க. சமுகம் என்னை மன்னிக்கோணும். தங்களை யெல்லாம் நம்பித்தான் இந்த ஏழை வாழ்க்கையை ஓட்ட வேண்டியதா இருக்கு. இன்னிக்கி சாப்பாட்டுக்கு வழி இல்லிங்க. நோட்டெழுதிக் கொடுத்துட்டு நாலணா சம்பாதிக்கலாமுன்னு போனேனுங்க.

இன்: ஓ — ஓ சம்பளம் வாங்கறது பத்தாமெ கிம்பளம் வாங்கப் போனையோ — அப்படிச் சொல்லு. இப்படிப்பட்ட காரியங்களுக் கெல்லாம் ஒரு வாத்தியார் தலையிட்டுக் கொள்ளக் கூடாதுன்னு சட்டம் இருக்கிறது உனக்குத் தெரியாதா, அதுவும் பள்ளிக்கூட நேரத்திலே ஊரு மேயப் போயிருக்கிறையே உனக்கு எவ்வளவு நெஞ்சுரம் இருக்க வேணும்.

உபா: ஐயோ, எஜமான் இந்தத் துரும்பை அப்படி எல்லாம் நினைச்சிடக் கூடாதுங்க; ஏதோ வயித்துக் கொடுமைக்கு அப்படித் தெரியாமச் செய்திட்டனுங்க, சமுகம் மன்னிச்சுக் கோணுமுங்க.

இன்: வயித்துக் கொடுமை என்ன வயித்துக் கொடுமை — உனக் கென்ன கேடு மாசா மாசம் ஜில்லா போர்டிலிருந்து சம்பளம் வாங்கலே.

உபா: வர்ர சம்பளம் எஜமான் மாசத்திலே பாதி நாளைக்குங் கூட காண மாட்டமுங்குதுங்க. பாக்கி பாதி நாளும் பரதவிச்சுப் பாழாப் போறதைவிட வேறு கதியில்லீங்க. வாத்தியாரைப் படைச்ச பிரமன் அப்படிப் படைச்சுட்டானுங்க. எஜமானுடை சன்னதிலே ஆயிரம் ஆயிரம் நமஸ்காரத்தோடெ விண்ணப்பிச்சுக்கிறனுங்க. என் தலைவிதி எல்லாம் உங்க கைலேதான் எஜமான் இருக்குது— தாங்கள் பார்த்து எப்படி விட்டாலுஞ்சரி.

இன்: மரியாதையாச் சொல்றேன் கேளு—செரச்சா செரியா செரெக்கோணும் — இல்லாட்டி உனக்கென்னத்துக்கு இந்தத் தொழில். சர்க்கார்க்காரன் போன ஜன்மத்திலே உங்கிட்ட கடன் வாங்கித் திங்கவில்லை, இந்த ஜென்மத்திலே உனக்கு மாசா மாசம் அழுகிறதுக்கு — பேசாமே வீடு போய்ச் சேருவதற்கு வழிபாத்துக்கோ.

உபா: எஜமான் வேண்டாமுங்க — வேண்டாமுங்கோ — இந்த ஏளை பாவத்தைக் கட்டிக்காதீங்க — பகவானே — இந்தத் தொழிலை விட்டா வேறு ஒண்ணும் செய்யத் தெரியாதுங்க. இனிமே இப்படிச் செய்ய மாட்டனுங்கோ — பள்ளிக்கூடத்திலேயே உதயத்திலிருந்து அஸ்தமனம் வரைக்கு வேணும்னாலுங் கிடந்தர்ரனுங்கோ — ஏழையை எப்படியாகிலும் காப்பாத்தோணும்.

இன்: நீ இன்னைக்குச் செய்த குற்றத்திற்கு உன் சர்டிபிகேட்டையே கேன்ஸல் செய்யலாம்— ஆனால் நான் அப்படிச் செய்யப் போறதில்லை பிழைத்துத் தொலைந்துபோ. நாளைக்கு டவுனுக்கு வர்ரபோது நல்ல மாட்டு நெய்யாய்ப் பார்த்து ரெண்டுபடி வாங்கிக் கொண்டு வந்திரு.

உபா: ஐயையோ எஜமான். பச்சைச் குழந்தை தலையிலே பாராங்கல்லைத் தூக்கிப் போடரதுபோல? இந்த ஏழை தலையிலே இத்தாச்சோடு—பாரத்தைத் தூக்கிப் போடறீங்களே— உங்களுக்கு தர்மமா? ரெண்டு படி நெய்யுக்குச் சொளை ரூபா எட்டாச்சுங்களே — வீட்டிலே பொஞ்சாதி ஒரே கந்தலோட, மாத்திக்கிறதுக்குங்கூட கதியில்லாமெ, இருக்கிரு எஜமான்! ஏழையால் எப்படி முடியுமுங்க- காலங் கொஞ்சம் சவுரியமாகுட்டுங்க உங்களை யெல்லாங் கவனிக்காமெ இனி யாரைக் கவனிக்கப் போறனுங்க.

இன்: ஆனல் பத்து ரூபாயை முடிந்து வைத்துக்கொள். இந்த மாதம் அபராதத்திற்குச் சிபார்சு செய்யப் போகிறேன். இனிமே பள்ளிக்கூடத்தைத் தாறுமாறு விட்டிருந்தையானல் வீட்டுக்கு மூட்டையைக் கட்டும்படி செய்து விடுவேன். ஜாக்கிறதை (டக் என்ற சப்தத்துடன் எழுந்திருக்கிறர்.)

உபா: (ஈனக் குரலில்) எப்படியாகிலும் பாக்கறனுங்க எஜமான்— அபராதத்துக்கு வழி பன்னிடாதீங்க.

இன்: (அதட்டலுடன்) அதெல்லாம் முடியாது — அந்தப்புறம் போ.

4

இடம் : வாத்தியார் வீடு. காலம் : மத்தியானம்.

பாத்திரங்கள் : வாத்தியார், அவர் மனைவி.

[வாத்தியார் தொங்கிய முகத்துடன் வருகிறார். அவர் மனைவி வாட்டமாக உட்கார்ந்திருக்கிறாள்.]

உபா : விமலா, நான் செய்ததை மறந்துவிட மாட்டாயா? நாம் எப்பத்தான் சந்தோஷமாய் இருக்கிறது? (துக்கம் கலந்த குரலிலே) இங்கே வா.

மனை : ஏது தேவஜாதியாயிட்டாப்படி இருக்கே. உலைக்கு என்ன செய்தீங்க. அமிர்தத்தையே கொண்டு வந்திருக்கீங்களாக்கும்?

உபா : மறுபடியும் என் மனத்தைப் புண் செய்யாதே விமலா—அதிகாரி வந்து உலை வச்சிட்டே போயிட்டான். நமக்கேது இண்ணைக்குக் கஞ்சி. ஒரு செம்புத் தண்ணியை மோந்துட்டு வா—கொஞ்சம் வயிறு குளிருட்டும்.

மனை : கவுண்டர் சோளம் என்னாச்சு?

உபா : சம்மந்தியையே பதம் பார்க்கிறவன் அவன். என்னை விட்டு வைப்பானா?

மனை : அதிகாரி உலைவச்சிட்டுப் போயிட்டான்னு சொன்னீங்களே அது என்ன? என் தொண்டையெல்லாம் கம்மிப் போயிப் பேசறீங்க. ஐயோ, கண்ணுலே வேறு தண்ணி கலங்குதே.

உபா : விமலா நீயும் அழறே—நானும் அழறேன். ரெண்டு பேருமாச் சேர்ந்திட்டு அழுவோம் வா—இந்த ஜன்மத்திலே நம்ம வாழ்க்கை இடுகாடாய்ப் போகட்டும்.

[அவனும் அவளுமாக வாய்விட்டு அழுகிறார்கள். மனைவி கொஞ்சம் தைரியத்தை வருவித்துக்கொண்டு]

மனை : இங்கே பாருங்கோ என் முகத்தே. உங்களுக்கு என்ன வந்தது—ஒண்ணும் வரல்லே—கண்ணைத் துடைக்குறீங்களா இல்லையா—நான் பெரிய சத்தம் போட்டு அழுதிருவேன். என்ன நடந்தது சொல்றீங்களா இல்லையா?

உபா : இன்னிக்கு அதிகாரி வந்தான்—நான் பள்ளிக்கூடத்திலே ஆஜர் இல்லை. திருடன், மொல்லமாரி யென்றெல்லாம் மானம் போகப் பேசினான். நான் அவனுடைய காலைப் பிடிக்காத குறை ஒண்ணுதான். எல்லாஞ் செய்து பார்த்தும் அந்த ராக்ஷஷன் பத்து ரூபா அபராதத்துக்கு வழி பண்ணிட்டுப் போயிட்டான். நான் இனி எத்தனை பேரிடம்தான் இடிபட்டுச் சாகட்டும். நான் போன ஜன்மத்திலே எத்தனை ஆயிரம் பாவம் செய்தேனோ இந்த ஜன்மத்திலே வாத்தியாராப் பிறக்க.

மனே: ப்பூ – இவ்வளவுதானு. கால் கடுதாசி எடுத்து ராஜி நாமா எழுதி அவன் முகத்திலே தூக்கி எறிந்து விட்டுக் காரித் துப்பிப் போட்டு வந்திருந்தா என்ன? உத்தியோகத்தைப் பாரு – உத்தியோகத்தை. திரு டான்னு கேட்டானும். திருட னுக்கியது யாரு? செலவுக்குப் பத்தாத சம்பளம் கொடுத்தா கவர்னர் ஜனரலுங் கூடத்தான் கன்னம் வைச்சுத் திருட ஆரம் பிப்பாரு. வேலையை வேண் டாம்னு எழுதிப் போட்டுட்டு தலையை முழுகுங்கோ. இண் ணைக்கிருந்து நம்மைப் பிடிச்ச பீடைகள் போகட்டும்.

உபா: ஐயோ படுபாவி வேலையையா விடச் சொல்லறே – வேலையை விட்டிட்டு என்ன செய்யறது. விமலா வேண் டாம் காக்கஞ்சியாகிலும் குடிச் சுக் காலத்தை ஓட்டலாம்.

மனே: இல்லே. நீங்கள் கடவுளா ணையா இந்த வேலையை உதரித் தள்ளோனும். சந்தோஷமா வாழ ஆயிரம் வேலைகளிருக்கு.

உபா: இந்தப் பிசாசு தைரியம் எங்கிருந்து வந்தது விமலா. என்னுலே கூலி வேலை செய்ய முடியாது – கடப்பாறை பிடிக்க – மம்மட்டி எடுக்க – வெய்யலில் காய – மழையில் நனைய என் உடலில் பலமிருக்கா பாரு. வேறு எந்தத் தொழி லுக்கும் லாயக்கில்லாமே இந்தி வாத்தியார் வேலை என்னை ச் சப்பாணியாக்கி விட்டது. ஐயோ இதையும் விட்டு விட் டால் – உலகமே இருட்டாப் போயிடுமே. வேண்டாம் விமலா. அந்த ஒரு காரியத்தை மட்டும் செய்ய என்னைத் தூண் டாதே.

மனே: (வீராப்புடன்) ஒரு பெண் ணுக்குள்ள துணிவு கூட உங்க ளுக்கில்லையா. "மானஞ் சேர்ப்பது மனைவியின் வார்த் தைகள்" நான் சொன்னதைக் கேட்கிறீர்களா இல்லையா? இப்பொழுது ரௌத்ராகார மான சக்தி சொரூபமாய் இருக் கிறேன். நீங்கள் என் முன்னே சிவம். உங்கள் துன்பத்தைத் தீர்த்துக்கட்ட ஆவேசம் கொண்டு விட்டேன் நான். நெஞ்சு நிமிர்ந்து உட்காருங் கோ. நான் சொன்னபடி கேளுங்கோ.

உபா: சரி சொல்லு.

மனே: இந்தத் தாலியிலே மிஞ்சி யிருக்கிற தங்கம் பதினஞ்சு ரூபாயுக்குப் போகும். அஞ்சு ரூபாய்க்கு அரிசி. அஞ்சு ரூபாயுக்கு உளுந்துப் பருப்பு. வாங்கிட்டு ரோடு மார்க்கம் பார்த்துக் குடி போயிறலாம்.

உபா: (ஆச்சரியமாக) எனத் துக்கு.

மனே: இட்லி சுட்டு விக்கலாம். தர்மத்திற்கு விரோதமில்லாத எந்தத் தொழிலும் கௌரவ மானதுதானே?

உபா: (உரத்த குரலில்) பராசக்தி சிவமாகிய அடியேன் நின் திரு வாணையைச் சிரமேற்கொண்டு விட்டேன். வாழ்க்கையில் இன்பத்துக்கு வழிகாட்டுக. இந்தக் கணத்திலிருந்துமாவாட் டத் தயாராகி விட்டேன்.

5

இடம்: ரோடு மார்க்கத்திய இட்லிக்கடை. காலம்: சாவகாசமாய் இருக்கிற மத்தியான நேரம். பாத்திரங்கள்: மாஜி வாத்தியாரும், அவர் மனைவியும்.

மனை: ஐயா மாஜி வாத்தியாரே — உங்களைத்தானே — பேச மாட்டீங்களோ — என்னமோ புஸ்தகத்திலே முடுக்கா இருக்காப்படி இருக்கு?

உபா: (புத்தகத்தை டப்பென்று மூடிவிட்டு) ஏன் விமலா என்னைச் சும்மா கூப்பிட்டுக் கூப்பிட்டுத் தொந்தரவு செய்யறே!

மனை: புஸ்தகத்திலே எதாச்சியும் அதிசயம் இருந்தாச் சொல்லுங்களேன்!

உபா: சொல்றேன் கேளு. "காதல் நிறைந்த பெண் — பசிக்குச் சோறு — அநுபவிக்க நல்ல ரஸமான நூல் — இந்த மூணும் இருந்தாப் போதுமாம் — மனுஷன் அமரனாகிவிடலாமாம் — எப்படியிருக்குது பார்த்தாயா ஒரு கவி வாக்கு.

மனை: நீங்க சொல்லறது சரிதான் — ஆனா முறைப்படுத்திச் சொன்னதுதான் தப்பு. முதலிலே வயிற்றுப்பசி இரண்டாவது காதல் பசி, மூன்றாவது அறிவுப் பசி. நான் சொல்றது சரிதானுங்களா?

உபா: ரொம்ப ரொம்ப சரிதான்.

மனை: ஆமா — முந்தி யெல்லாம் வரிசை வைச்சுக் கூப்பிடுவீங்களே — இந்த ஆறுமாசமா எது பேரு வைச்சு ரொம்ப ரொம்ப கொஞ்சலாகக் கூப்பிடறது.

உபா: நல்ல கேள்வி கேட்டே — பதில் சொல்றேன் கேளு. ஆறு மாசத்துக்கு முன்னே எப்பப் பார்த்தாலும் வயிறு எரிஞ்சுக்கிட்டே இருக்கும் — எதைப் பார்த்தாலும் எரிச்சலாய் இருக்கும். இப்போ வயிறு குளிர்ந்து உடல் குளிர்ந்து — உள்ளங் குளிர்ந்து — அறிவு குளிர்ந்து ஆசை யெல்லாம் குளிர்ந்து பிறபாடுகூட உன்னைப் பார்த்தால் குளிராமல் இருக்குமா?

மனை: பழைய வாத்தியார் உத்தியோகத்திற்குப் போரதுதானே. உங்களை வரவேற்கிறதுக்கு ஜில்லா போர்டுக்காரர் மாலையுங் கையுமா காத்திட்டிருக்கிறுங்களாமே!

உபா: வாத்தியார் தொழில் கேவலமுன்னு நினைச்சிட்டிருக்கிறே — உலகத்திலுள்ள பெரிய தர்மங்களை யெல்லாம் ஒரு தட்டிலே வைச்சு — ஒரு ஏழைக்கு எழுத்துச் சொல்லிக் கொடுக்குறும் பாரு — அந்தத் தர்மத்தையும் ஒரு தட்டிலே வைச்சு நிறுத்திப் பார்த்தா எது இழுக்கும்னு நினைக்கிறே — எழுத்துச் சொல்லிக் கொடுக்கிற தர்மந்தான். பாவம் ஆரம்ப ஆசிரியனுக்கு வயித்துப் பாட்டுக்கே அளவை பத்தாது. பசிக் கொடுமையைச் சமாளிக்க வெகு வெகு பித்தலாட்டம் பண்ணுவதிலேயே அவன் பொழுது விருதாவாப் போகுது. பாடுபடச் சொன்னா எப்படிப் பாடு படு

வான். இந்த வயிறுங்கிற நிலைக்களன் இருக்கு பாரு—அதிலே எப்போ திருப்தி நிலவுதோ அன்றைக்குத்தான் மனுஷன் செய்யற காரியத்திலுங்கூட திருப்தி நிலவும். அது கிடக்கட்டும் இன்னைக்கி "வி" கொண்டாட்டம். தடபுடலா நடக்கப் போகுதாம். நம்ம ரெண்டு பேரும் போறதில்லையா?

மனோ : அதென்ன "வி" கொண்டாட்டம்னு.

உபா : சொல்றேன் கேளு. இந்த உலகம் ஆறு வருசமா யுத்தப் பிசாசு வாயிலே கிடைச்சிட்டு அல்லோல கல்லோலப் பட்டுட்டு இருந்ததல்லவா?

மனோ : ஆமாம்.

உபா : அந்தப் பிசாசு வாயிலிருந்து விடுபட்டுப் புனர் ஜன்மம் எடுத்து அமைதியா வாழ்க்கை ஆரம்பிக்கிற முதல்நாள் இது.

மனோ : அதுக்கும் நமக்கும் என்ன சம்பந்தம்?

உபா : என்ன சம்பந்தமா! நாமும் நித்திய தரித்திரத்திலே இருந்து மரண தைரியத்தோடே விடுவித்துக் கொண்டு புனர் ஜன்மமெடுத்தோமே அதைக் கொண்டாடினோமா?

மனோ : இல்லை.

உபா: நம்ம புனர் ஜன்மத்தோடே வைச்சுக் கொண்டாடிட்ட ஒழுங்காப் போகுமா இல்லையா?

மனோ : நல்ல பேஷான யோசனை.

உபா : அப்படியானால் என் பக்கத்தில் வா பார்க்கலாம்.

மனோ : போங்க - பட்டப்பகல்லே, யாராலும் பார்த்துட்டா என்ன சொல்லுவாங்க. பொழுது விழுகறதுக்குள்ளே அவசரமா?

இருவரும் பாடுகிறார்கள் :-

வாழ்க்கை என்பது ஒரு மலர் வனமே — அதில்
வண்டென மதுநுகர்ந்திரு மனமே
வாழ்க்கை என்பது ஒரு நிறைகுளமே — அதில்
மலர்ந்த தாமரை என இரு உளமே

பசியினைப் போக்கிடும் ஒரு தொழிலே — செய்தால்
பாரினில் ஓங்கிடும் நம தெழிலே
புசித்திடும் கூழிலும் அமுதமயம் — பரி
பூரணமாமிந்த வாழ்க்கை மயம்

வயிறு குளிர்ந்திட உண்டிடுவோம் — இங்கு
வானவர் வாழ்வினைக் கண்டிடுவோம்
உயிரினிற் சாந்தியை நிலவிடுவோம் — பல
ஊழிகள் ஊழிகள் குலவிடுவோம்

★

தாவர எண்ணெய்

[நா. கி. நாகராசன்]

"நமது தேகத்தில் உள்ள அவயவங்கள் எப்போதும் வேலை செய்த வண்ணமே இருக்கின்றன; சில பகுதிகள் தேய்ந்து போகின்றன; சில வளருகின்றன. இதற்கெல்லாம் தேவையான சக்தியை நாம் உணவிலிருந்து பெறுகிறோம். உணவில் உள்ள சக்தி யெல்லாம் சூரியனிட மிருந்து வந்ததுதான். தாவரங்கள் கதிரொளியைப் பெற்று அதன் சக்தியைத் தம் இலைகளிலும், தண்டு வேர்களிலும், காய் விதைகளிலும் சேமித்து வைக்கின்றன. மனிதரும், விலங்குகளும் அவற்றை உட்கொண்டு அச்சக்தியைப் பயன்படுத்துகிறோம். நம் முன்னோர் இதை அறிந்திருக்க வேண்டும். அதனல்தான் அவர்கள் கதிரவனைக் கடவுளாக வழிபட்டனர்.

உணவுப் பொருள்களின் பல வகைகளில் சிலவற்றில் அதிகமான சக்தி பொதிந்து கிடக்கிறது. உணவு வகைகளில் கொழுப்பு வகைகள் சக்தியை அதிகமாகக் கொண்டவை. நெய், வெண்ணெய், எண்ணெய் முதலிய கொழுப்புகள் பொதுவாய் சர்க்கரை முதலிய மாக்கூர்களைப் (Starch) போல் இரண்டரை மடங்கு சக்தி யளிக்கும். ஆகையால் இவைகள் நம் உணவின் முக்கியமான பகுதி என்பது தெளிவு. ஆனல் நம் நாட்டில், பசிப்பிணி தலைவிரித்தாடும் இந்நாளில் நெய்யையும், வெண்ணெயையும் கண்ணினல் காண்பதே அரிதாய் விட்டது. நகரங்களில் பாலும், பாலிலிருந்து கிடைக்கும் மற்றப்பொருள்களும், செல்வவந்தரே யன்றிப் பிறர் வாங்க முடியாத விலைக்கு விற்று வருகின்றனர். ஆகையால் எளியவர்கள் பயன் படுத்தும் கொழுப்பு எண்ணெய் ஒன்றே. ஆனல் எண்ணெயை அவ்வாறே உபயோகிப்பதில் பல குறைகளுண்டு. அது விரைவில் கெட்டு சிக்கு நாற்றமெடுத்துவிடும். மேலும் சிலருக்கு எண்ணெயில் செய்த பண்டங்கள் கட்டோடு பிடிப்பதில்லை. ஆனல் தற்காலத்தில் எண்ணெயிலிருந்து தயாரிக்கப்படும் தாவர நெய்யில் (Vegetable Ghee) இவ்விதக் குறைகள் இல்லை. இது மணமற்றதாயினும் இதன் தன்மைகள் நெய்யையே ஒத்தன.

வனஸ்பதி என அழைக்கப்படும் இந்நெய்யைத் தயாரிக்கும் தொழிற்சாலை யொன்று தமிழ் நாட்டில் சில ஆண்டாக இருந்து வருகிறது. நம் நாட்டில் பல பாகங்களில் இத்தகைய தொழிற்சாலைகளை ஏற்படுத்த இந்திய அரசாங்கம் தீர்மானித்துப் பல கம்பெனிகளுக்குப் பொருளுதவியும், மற்ற உதவிகளையும் அளிக்க ஒப்புக் கொண்டுள்ளது. இதன் பயனய் நாட்டில் பல வனஸ்பதித் தொழிற்சாலைகள் ஏற்பட்டு, ஏழை எளியவரும் வாங்கக் கூடிய விலைக்கு இவ்வுணவுப் பொருள் கிடைக்கும். ஏனெனில் எண்ணெய் வித்துக்கள் நம் நாட்டின் பல பாகங்களில் விளைகின்றன. இவற்றுள் பெரும் பகுதி ஜெர்மனி, இங்கிலாந்து நாடுகளுக்கு ஏற்றுமதியாகிறது. அங்கிருந்து

மறுபடியும் வேறு உருவங்களில் அது நம் நாட்டுக்கே பன்மடங்கு அதிக விலையுடன் திரும்பி வருகி றது. ஆனால் நம் நாட்டில் சவர்க் காரத் தொழில் அதிகமான பின்னர், எண்ணெய் வித்துக்கள் ஏற்றுமதி வெகுவாகக் குறைந் திருக்கிறது. இத்துடன் வனஸ் பதித் தொழிலையும் நாம் தொடங் கினால் நம் நாட்டுத் தாவர எண் ணெய்களை முழுதும் பயன்படுத்த வழியுண்டு. கதிரவன் நம் நாட் டுக்கு உவந்தளிக்கும் சக்தியை வேற்று நாட்டினர் பயன்படுத்த நாம் உடல் மெலிந்து வாழ்வது என்ன மதியீனம்!

தவிர, தமிழ் நாட்டில் பருத்தி விளையும் பாகங்களில் ஏராளமான பருத்திக் கொட்டை கிடைக்கி றது. மாடுகளுக்கு இது நல்ல தீனி என்பதைத் தவிர இதற்குத் தற்சமயம் வேறொரு பயனுமில்லை. இது ஒரு சத்துள்ள உணவுப் பொருள். இதில் கொழுப்பும், பிசித வகைகளும் (Profeins) உள் ளன. இதைச் செக்கிலிட்டு ஆட்டி எண்ணெய்யைப் பெற்ற பின் உள்ள பிண்ணுக்கும் மாடு களுக்குத் தீனியாகவும், நிலத் திற்கு உரமாகவும் பயன்படும். சென்ற யுத்தத்தின் போது, அமெரிக்காவில் இப் பிண்ணாக்கை நன்றாகப் பொடித்து ரொட்டி மாவுடன் கலந்தளித்தனர். இத னால் ரொட்டியின் சுவை சிறிதும் கெடாததோடு கூட, அதன் உணவுச் சத்தும் அதிகமாயிற்று. பருத்தி விளையும் நாடுகளின் முன்னணியிலுள்ள அமெரிக்கா ஒரு காலத்தில் பல்லாயிர டன் பருத்திக் கொட்டையை ஜெர்ம னிக்கு ஏற்றுமதி செய்து வந்தது. ஆனால் தற்போது அது பல வகை யில் நாட்டிலேயே பயன்பட்டு, அமெரிக்க விவசாயிகளுக்குப் பலகோடி டாலர்கள் ஊதியத்தை யளிக்கிறது. உணவுப் பொருள் களுக்கு வேற்று நாடுகளின் தயவை நாடும் நம் நாட்டிலும் இதுபோன்ற புது உணவுவகை களைப் பரப்பத் தக்க ஆராய்ச்சி யும், அதன் முடிவுகளைப் பொது மக்கள் அறியுமாறு பிரசாரமும் செய்ய வேண்டியதவசியம்.

தவிர, பருத்திக் கொட்டையி லேயே முக்கியமான பாகம் எண் ணெயாகும். இது செந்நிறமும், ஒருவகை நாற்றமும் கொண்டி ருக்கும். இரசாயன முறைக ளால் நிறத்தை நீக்கி, அதன் மணத்தையும் போக்கிச் சுத்தப் படுத்தியபின் இது மஞ்சள் நிற மாய், உணவுக்குகந்த ஆலிவ் எண் ணெயைப் (Olive Oil) போலாய் விடும். இது ஆலிவ் எண்ணெய்க் குப் பதில் மேனாடுகளில் உணவாகப் பயன்படுகிறது. ஆனால் இதையே வனஸ்பதியாக மாற்றி விட்டாலோ, இது இன் னும் விரும்பத்தக்க உணவுப் பொருளாய் விடும்.

பருத்தி எண்ணெயையும், மற்ற எண்ணெய்களையும் வனஸ் பதியாக மாற்றும் முறையை அறிய, கொழுப்புகளின் தன்மை யைச் சிறிதளவு அறிதலவசியம், எல்லாக் கொழுப்புகளும் தீயகம் (Oxygen), நீரகம் (Hydrogen). கரிமம் (Arlom) என்னும் மூன்று தனிப் பொருள்களாலானவை.

ஆனால் பலவிதக் கொழுப்புகளி லும் இம் மூன்றும் ஒரே அளவில் இருப்பதில்லை. இவ்வேறு பாட் டுக்குத் தக்கவாறு கொழுப்பின் தன்மையும் மாறுபடும். வெண் ணெய், நெய் முதலிய கொழுப்பு கள் பொதுவாய்க் கட்டிப் பொருள்கள்; எண்ணெய்கள் நீர் மங்கள். ஒரு கொழுப்பில் நீரகத்

தின் அளவு குறைவானல் அது நீர்மமாகவும், அதிகமானல் கட்டியாகவும்மிருக்கு மெனலாம். கட்டிக் கொழுப்புகளைக் "கடினமான கொழுப்புகள்" என்றும், நீர்மக் கொழுப்புகளை "மிருதுவான கொழுப்புகள்" என்றும் கூறுவதுண்டு.

நீரகம் குறைவாய், நீர்மமான கொழுப்புகளுக்கு ஏதோ ஒரு வகையில் நீரகத்தை யளித்தால், அது கடினமாய் விடுமல்லவா? இம் முறையையே வனஸ்பதித் தொழிலில் கையாளுகின்றனர். இது மிக எளிதாகும். ஏனெனில் மிருதுவான கொழுப்புகள் சமயம் வாய்த்தால் நீரகத்தை யேற்றுக் கடினமாய்விடும். நீரகம் கிடைக்காம லிருந்தால் இவை வேறு பொருள்களை ஏற்பதும் உண்டு. ஆளிவிதை யெண்ணெய் (Linseed Oil) சாயம் பூசப் பயன் படுவது எல்லோரும் அறிந்ததே. சாயம் பூசிய சிறிது நேரத்திற்குள் இது உலர்ந்து கெட்டியாவதன் காரணம், மிருதுவான கொழுப்பு வகையைச் சேர்ந்த இவ்வெண்ணெய் காற்றிலுள்ள தீயக வாயுவைப் பெற்றுக் கடினமாவதுதான். இவ்வகைக் கொழுப்புகளைத் தெவிட்டாத கொழுப்புகள் (Unsaturated Fate) என்றும், நீரகத்தை முழுதும் பெற்று மேலும் ஏற்க முடியாத நிலையிலுள்ள கட்டிக் கொழுப்புகளைத் தெவிட்டிய கொழுப்புகள் (Saturated Fats) என்றும் அழைப்பது உண்டு. எண்ணெய்கள் தெவிட்டா திருப்பதால்தான் காற்றுப்பட சில நாள் வைத்திருந்தால், கெட்டுப் போய் நாற்றமடிக்கத் தொடங்குகின்றன. அதனல் அவைகளைக் கடினமாக்குவது அவசியமாகிறது.

எண்ணெய்களுக்கு நீரகத்தை யளித்து அவைகளைத் தெவிட்டிய கொழுப்புகளாகச் செய்யு முறையை நீரகமேற்று முறை (Hydrogenation) என்பர். நீரகமும், கொழுப்புகளும் தாமாகவே சேருவதில்லை. இவைகளைச் சேர்க்க ஒரு தூண்டுகோல் வேண்டியிருக்கிறது. இத்தூண்டு கோலை வேதி நூலில் நுகைப்பான் (Catalylic agent) எனக் கூறுவர். இப்பொருளை மனித வாழ்க்கையில் தரகர்களுக்கு ஒப்பிடலாம். தரகர்களால் நடைபெறும் காரியங்கள் பல. ஆனல் அவர்கள் அக்காரியத்தில் பங்கெடுத்துக் கொள்கிருர்களோ எனில் அது தான் இல்லை. இதைப் போல் நுகைப்பான்கள் பல இரசாயன மாறுபாடுகளை விளைவிக்கும். அவ்விளைவில் அவை ஒருவித மாறுதலையும் அடைவதில்லை. நீரக மேற்றலில் இத்தகைய நுகைப்பான் ஒன்று பயன்படுகிறது.

வனஸ்பதித் தொழிலில் முதற்படி இரசாயன மாறு பாட்டை விளைவிக்கும் நுகைப்பானைத் தயாரித்தல். நன்ருகப் பொடித்த பளிதனம் (Platinum) இதற்குப் பயன்படுமெனினும் அது மிக விலையுயர்ந்தது. ஆகையால் பொதுவாய், நிகலம் (Nickel) செம்பு இவ்விரு உலோகங்களின் தூள் சாதாரணமாய் நுகைப்பானைகப் பயன் படுத்தப் படுகிறது. உலோகங்களை எவ்வளவு நன்ருகப் பொடித்தாலும், இரசாயன விளைவுக்குத் தேவையான அளவு நுண்ணியதாக இராது. ஆகையால் இவ்விரு உலோகங்களின் கரிசகைகள் (Formates) என்னும் உப்புக்கள் இரசாயன முறையொன்ருல் உலோகங்களாக மாற்றப்படுகின்றன. இப்போது கிடைக்கும் தூள் மிக நுண்ணிய

தாக இருக்கும். நீரகமேற்றும் எண்ணெய் பெரிய தொட்டிகளில் எடுத்துக் கொள்ளப்பட்டு, அத்துடன் உலோகத் தூள் சரியான அளவில் கலக்கப்படும். பின்னர் எண்ணெயைக் காய்ச்சி அது 180° செண்டிகிரேட் சூட்டிலிருக்குமாறு செய்து, தொட்டியின் கீழிருந்து நீரகவாயு மேலே செலுத்தப்படும். இப்போது எண்ணெயைத் துடுப்புக்களினால் துழாவிக் கொண்டே இருக்க வேண்டும். இப்போது நீரகம் எண்ணெயுடன் சேர்ந்து விடும். இவ்விளைவு நிகழும் போது அடிக்கடி எண்ணெய் பரிசோதிக்கப்பட்டு அதன் நிறம், மணம் முதலியவற்றிலிருந்தும், இரசாயன விளைவுகளைக் கொண்டும், எண்ணெய் எந்த அளவில் நீரக மேற்றுள்ளது என்பது அறியப்படுகிறது. அது சரியான பக்குவத்தையடைந்தவுடன் நீரகம் அனுப்புவது நிற்கும்.

இதற்குத் தேவையான நீரகத்தைப் பெறுவது எளிது. தண்ணீர் நியகம், நீரகம் என்னும் இரு வாயுக்களாலானது. ஆகையால் தண்ணீரில் மின்சாரம் பாய்ந்தால் அது மேற்கூறிய இரு வாயுக்களாகப் பிரிந்து விடும். இவ்வகையில் கிடைக்கும் நீரகவாயுவையே வனஸ்பதி செய்ய உபயோகிக்கின்றனர்,

எண்ணெய்க்கு நீரக மேற்றி முடித்த பின்னர் அதைப் பெருந் தொட்டிகளிலிட்டு, அதை விரைவாய் வடிகட்டும் பொருட்டு ஒரு வகை மண்ணுடன் கலந்து வடி பொறிகளில் வடிகட்டுவார்கள். இதனால் நுகைப்பான், மண்ணோடு மேற்றங்கி விடும். இப்போது எண்ணெய் குளிர்ந்தால் நெய்யைப் போல இறுகிவிடும். வனஸ்பதியில் சிறிதளவு நிகலம் கரைந்திருக்கலாம். ஆனால் அது உடலுக்குத் தீமையைத் தராது. இப்போது அத்துடன் உயிர்ச்சத்துகளான வைட்டமின்களையும் (Vitamins) சேர்க்கலாம். அவ்வாறு செய்த பின் அது மிருகக் கொழுப்புகளுக்கு எவ்விதத்திலும் தாழ்ந்ததல்ல எனத் திண்ணமாய்க் கூறலாம். நூறு ராத்தல் எண்ணெய்க்கு நீரகமேற்ற ஒரு ராத்தல் நீரகம் போதுமானது. ஆகையால் இம்முறையிலாகும் செலவு மிகக் குறைவே. அதனால் எண்ணெயின் விலைக்கே வனஸ்பதியை விற்க இயலும்.

அரிசிப் பஞ்சத்தின் விளைவாய் நிலக்கடலை சாப்பிடுவதன் நன்மையை அரசாங்கம் இப்போது நமக்கு அறிவுறுத்துகிறது. தமிழ் நாட்டில் தென்னாற்காடு முதலிய ஜில்லாக்களில் இது முக்கியமான பயிர். இது ஒரு சிறந்த உணவுப் பொருள். ஏனெனில் இதில் நூற்றுக்கு 50 பங்கு கொழுப்பும், 30 பங்கு பிசித வகைகளும் உள்ளன. நிலக்கடலையிலிருந்தும் சோயா அவரையிலிருந்தும் ஒரு விதப் பாலை அடையலாமென்றும் அது இயற்கைப் பாலையே ஒத்தது என்றும், பெங்களூரில் இந்திய விஞ்ஞானக் கழகத்தின் ஆராய்ச்சிகளால் சமீபத்தில் தெரிய வந்தது. ஆயினும் நம் நாட்டில் விளையும் கடலையின் பெரும் பகுதியை நாம் மேனாடுகளுக்கு ஏற்றுமதி செய்து விடுகிறோம். அங்கு கடலை எண்ணெய்க்கு நீரகமேற்றி அதிலிருந்து சாகலேட் (Chocolate) முதலிய பல பண்டங்கள் செய்கிறார்கள். இதை நம் நாட்டிலேயே செய்து ஊதியத்துடன் உணவையும் பெறலாம்.

இதைத் தவிர, நம் நாட்டுக் கடற்கரைப் பகுதிகளில் மீனெண்

ணெயை மிக அதிகமாகப் பெற வழியுண்டு. இதன் நாற்றத்தினல் இதை அவ்வளவாகப் பயன் படுத்த முடிவதில்லை. ஆனல் இதற்கு நீரகமேற்றி இதை மண மற்றதாகச் செய்து சவர்க்காரம் செய்யவும், மெழுகுவத்தி செய்யவும் பயன்படுத்தலாம். இதனல் மீன் பிடிக்கும் தொழிலே முன்னேறும்.

நாட்டில் மலிந்துள்ள தாவர எண்ணெய்களையும், மிருகக் கொழுப்புகளையும் சரியானவாறு பயன் படுத்த இம்முறை இன்றியமையாதது. நீரகமேற்றப் பட்ட கொழுப்பு வகைகள் சிறந்த உணவு என்பதைத் தவிர சவர்க்காரம் செய்யவும், தோல் பதனிடவும், வழுப்புப் பொருள்கள் (Lubrilating Oils) செய்யவும் பயன்படும். நீரகமேற்றுந் தொழிற்சாலைகள் நாட்டின் பல பகுதிகளில் அமைக்கப்பட வேண்டும். இத்துறையில் கையாளப்படும் தற்கால முறைகளையறிய நம்நாட்டு இளைஞர் மேனடுகளுக்கு அனுப்பப்படவேண்டும். இதைப் பற்றிப் போதுமான ஆராய்ச்சியும் நம் நாட்டிலேயே செய்யப்பட வேண்டும். இவ்வாறு செய்தால் அது நாட்டுக்குப் பெரு நலனை விளைவிக்குமென்பதில் ஐயமில்லை.

★

தெவிட்டாத இன்பம்

(எஸ். பாலசுந்தரம்)

அசைந்தாடும் கிளைகளெல்லாம் தந்திக் கம்பி;
அவைகளைத்தம் மென் விரலால் மீட்டும் காற்று;
இசையமுதாய் இயங்குமொலிப் பறவை கீதம்;
இடை சிறுத்த நதிக்கன்னி நடனஞ் செய்ய,
விசையுடனே மோது கற்கள் தாளம் போட,
விரைந்திடு நல் மீனினத்தின் ஜலதரங்கம்;
திசையெங்கு நோக்கிடினும் கலையரங்கம்.
தெவிட்டாத இன்பநிலை இயற்கை யெங்கும்!

புது வெள்ளம்

[ராஜம் நரசிம்மன்]

பொங்கல் தினம். காலையில் தலை முழுகிய பின், வள்ளி தன் அப்பன் வாங்கி அனுப்பியிருந்த சேலையைக் கட்டிக்கொண்டு, ஆறுமுகத்திற்கு முன்னால் வந்து நின்றாள். அச்சமயம் அவள் அகத்தில் பொங்கும் குதூகலம், புன்னகை தவழும் முகத்தில் பிரதிபலித்துக் கொண்டிருந்தது.

"என்ன வள்ளீ, நான் எடுத்த சேலையை கட்டிக்கலையா?" என்று கேட்டான் ஆறுமுகம் சற்று மனத்தாங்கலுடன்.

"என், இதுவும் நல்லாத்தானே இருந்தது. பாவம், அப்பன் அத்தனை பிரியமா எடுத்து அனுப்பிச்சிருக்கு......"

வள்ளி தன் வார்த்தைகளை முடிக்கு முன்பே, ஆறுமுகம் இடைமறித்து "அப்போ, நான் மட்டும் பிரியமா எடுக்கல்லே, அப்படித்தானே?" என்று கேட்டான் சற்று ஆத்திரத்துடன்.

வள்ளியின் வதனம் வாடிப் போயிற்று. "என்ன மச்சான், நான் ஒண்ணு சொன்னா, நீ தப்பா எடுத்துக்கிறயே......"

மீண்டும் ஆறுமுகம் வள்ளியை இடைமறித்துப்பேசினான்! "ஆமா என்னைக்காட்டிலும் உன் அப்பன் ஒசத்தியாப் பூட்டானல்ல, அதனாலே நான் சொல்லறதெல்லாம் ஒனக்கு தப்பாத்தான் தோணும். 'அப்பன் அப்பன்'னு இப்படி உசிரை விடறயே; உனக்கு கண்ணாலமாகி நாலு வருஷமாச்சு, என்னத்தே செஞ்சு கிழிச்சுப்பூட்டான், கொஞ்சம் சொல்லேன்"

"இந்தா, என்னைப்பத்தி எப்படி வேணுமானாலும் பேசிக்கோ, வீணா அப்பனை இழுக்காதே, நாலு வருசமா நீ செஞ்சதைத்தான் அதுவும் செஞ்சது" என்றாள் வள்ளி சற்று பொறுமை இழந்தவளாய்.

"என்னடீ ரொம்ப துள்ளறே, நாவெ அடக்கி பேசறயா, இல்லே, ஒதைகிதை ஏதாச்சும் வேணுமா?"

"அடிபட்டு சாகணும்னுதான் என் விதின்னு தெரிஞ்சே இருக்கே, அப்பறம் அதுக்காக அளுது முடியுமா?" வள்ளியையும் அறியாமல் அவள் வாய் இவ்வார்த்தைகளை முணுமுணுத்துக் கொண்டது. ஆனல் பாம்புச் செவி படைத்த ஆறுமுகத்திற்கு இது கேட்காமல் போய் விடுமா? அவன் முகம் கோவைப் பழமெனச் சிவந்தது. "என்ன சொன்னே" என்று சீறியவண்ணம், ஓங்கின கையுடன் அவள் மீது பாய்ந்தான். ஐயோ, அந்த முரட்டுக் கை இன்னும் ஒரு கணத்தில் வள்ளியின் மெல்லிய தேகத்தைத் தாக்குமே! நல்ல வேளை. 'ஆறுமுகம்' என்று அச்சமயம் வாசலிலிருந்து யாரோ கூப்பிடவே, அவ்வபலை தப்பினாள். ஆறுமுகம் வாசலுக்குச் சென்றான். சற்று நேரத்திற்கு முன் குதூகலம் பொங்கி வழிந்த வள்ளியின் உள்ளத்திலிருந்து இப்போது துக்கம் பீறிட்டுக்கொண்டு கடல் மடை திறந்ததுபோல பெருகிய கண்ணீருடன் கரைந்து வெளி வந்தது.

வள்ளியின் அப்பன் ஒரு மொடாக்குடியன். ஆறுமுகமும் இது விஷயத்தில் மாமனுக்கு கொஞ்சமும் தாழ்ந்தவனல்ல. நான்கு வருஷங்களுக்கு முன்பு வள்ளியை மணம் செய்து கொண்டபோது பொள்ளாச்சியில் வேலை எதுவுமின்றி திரிந்து கொண்டிருந்தான். இவனுக்கும் மாமனுக்குமிடையே தோன்றிய மன வேற்றுமை நாளடைவில் முற்றி விடவே ஆறுமுகம் கோவையை அடுத்த சிங்காநெல்லூருக்குச் சென்று அங்கே ஒரு மில்லில் வேலைக்கு சேர்ந்து கொண்டான். வள்ளி தன் பெற்றோர்களிடம் அதிதமான அன்பு கொண்டவளாயினும், விவாகமான பின் பதியே தனக்கு சர்வமும் என்பதை உணர்ந்திருந்தாளாதலால், ஆறுமுகத்துடன் அவளும் சிங்காநெல்லூர் சென்றாள். அத்துடன் இரு குடும்பங்களுக்குமிடையே போக்குவரத்து என்பதே அற்றுப்போய் விட்டது. இதற்கு முக்கிய காரணம் வள்ளி தன் கல்யாணத்திற்குப் பின், தாயை இழந்து விட்டது தான். அப்பனோ குடியில் ஆனந்தத்தை காண்பவன். அதே நிலைமையிலிருந்த ஆறுமுகத்தைப் பற்றி பேச்செடுக்க அவ்வப்பலைக்கு துணிவு இல்லை.

நல்ல வேளை, இந்த வருஷம் பொங்கலுக்கு முன்பு மது விலக்கு உத்திரவை சர்க்கார் கோவை ஜில்லாவிலும் அமலுக்குக் கொண்டு வந்தனர். கள்ளுக் கடைக்குப்போக வேண்டிய பணம் கையில் தங்க ஆரம்பித்த பின் வள்ளியின் அப்பனுக்கு தன் பெண்ணைப் பற்றிய நினைவு தோன்றிற்று போலும். நீல நிறத்தில் ஒரு சேலை வாங்கி, பொங்கலுக்கு முன் தினம் ஏதோ அலுவலாக சிங்காநெல்லூர் போகும் தன் தோழன் ஒருவன் மூலம் கொடுத்தனுப்பினன். ஆனல் இதற்கு முன்பே வள்ளிக்கு ஆரஞ்சு கலரில் ஒரு சேலையை ஆறுமுகம் எடுத்திருந்தான். பாவம், வள்ளியைப் பொருத்த மட்டில், இதுவரை புதுச்சேலை கட்டி, பொங்கல் நோன்பைக் கொண்டாடியதே இல்லை — பிறந்தகத் திலிருக்கும் போதுதானகட்டும், புருஷனிடம் வந்த பின் தானகட்டும், விசேஷ தினங்களில்தானே குடியர்களும் விசேஷமாகக் குடித்து விட்டு வந்து வீட்டில் பெண்டு பிள்ளைகளை உதைத்துத் தள்ளுவார்கள்.

முதல் முதலாக தான் கொண்டாடும் பொங்கல் நோன்பை உத்தேசித்து இரண்டு சேலைகள் கிடைக்கப்பெற்ற வள்ளி அதிதமான பூரிப்படைந்தாள். ஆனல் இரண்டில் அன்றைய தினம் எதைக் கட்டிக் கொள்வது என்பது பெரிய பிரச்னையாகி விட்டது. முன் இரவு முழுவதும் மூளையைக் குழப்பிக்கொண்டு, கடைசியில் நீல நிறப்புடவையையே தெரிந்தெடுத்தாள். அது இத்தனை விபரீதத்தில் முடிந்தது!

2

“என்ன தம்பீ, நல்ல நாளிலே தானு வீட்டிலே சண்டை பிடிக்கணும். இன்னிக்கி நாம செய்யறதைத் தானே வருஷ முழுதும் செய்ய வேண்டியிருக்கும்” என்ருர் பெரியசாமி ஆறுமுகத்தினிடம்.

வள்ளியின் ஆபத்பாந்தவனைப் பற்றி ஒருவார்த்தை. மில் தொழிலாளர்களின் அபிமானம் பெற்ற நல்ல தலைவர் அவர். நல்ல குணம். சிறந்த தியாகி. அவருடைய இடைவிடா முயற்சியினல்

தான் சர்க்கார் இவ்வருஷத்து மது விலக்கு பிரதேசங்களில் கோவையையும் சேர்த்துக் கொண்டனர் என்பதை யாவரும் அறிவர்.

"வாங்க அண்ணு, இப்படி உட்காருங்க" என்ருன் ஆறுமுகம் அசட்டுச் சிரிப்புடன்.

"உபசாரமொண்ணும் வேண்டாம் தம்பீ, நான் கேட்டதிற்குப் பதிலைக் காணுமே. 'பால் பொங்கிச்சா'ன்னு கேட்டு விட்டுப் போகத்தான் வந்தேன். அதுக்கு அவசியமே இல்லாமப் போய் விட்டது......"

"வள்ளி இப்பத்தான் தலை முழுகிச்சுங்க. ஆச்சு, இன்னும் கொஞ்ச நேரத்திலே பால் பொங்க வைச்சூடும்"

"சும்மா சும்மா, அடுப்புமேலே சட்டி பாலை வைச்சு பொங்க விட்டா, நோன்பு கொண்டாடினதாக ஆய்விடுமா தம்பீ. இதன் அர்த்தம் என்னன்னு தெரிஞ்சுக்கணுமப்பா, வருஷப் பிறப்பன்னிக்கி கோபதாபங்கள் இல்லாமெ மனசிலே சந்தோஷம் பொங்கணும்னு இந்த நோம்பை பெரியவுக ஏற்படுத்தியிருக்கிருங்க. இத்தனை வருஷமாத்தான் பொங்கல் நாளிலே நல்லா குடிச்சு விட்டு வந்து, பெண்ஜாதியை ஒதைச்சாங்க மகராசனுக. இனிமேலாவது, அவுகளைக்கொஞ்சம் சந்தோஷமா நடத்துங்களேன். ஒரு பாவமும் அறியாமெ இருந்தும் உங்க அக்ரமத்தினலே நரக வாழ்க்கையை அனுபவிச்சவுங்களாச்சே அதுகள்" என்ருர் பெரியசாமி உருக்கமாக.

"என்ன அண்ணே, நீங்க சொல்றத்தை பார்த்தா, நானே இன்னிக்கி வலிய வள்ளிகிட்டே சண்டைக்கி போனதாக அல்ல ஆறது. பொங்கலுக்கு நான் ஒரு சீலை எடுத்து குடுத்திருக்கேன். அவள் அப்பன் அனுப்பிச்ச சீலையை அது கட்டிக்கிச்சு. 'ஏன்'னு கேட்டதுக்கு, அப்பன் பிரியமா அனுப்பிச்சுதாம், என் கிட்டே அடிபட்டு சாகணும்னு தான் அதன் விதியாம், என்னென்னவோ பேசுது, யாருக்குத்தான் கோவம் வருது?"

"அவள் சொன்னதிலே என்ன தப்பு, காட்டப்பா! அதுக்கு பிரியமான சீலையை அது கட்டிண்டால் அதுக்கு என்ன சந்தோஷம் அதிலே. நீ துணி கட்டிக்கிறப்ப வள்ளியைக் கேட்டா செய்யறே. ஏதோ பெண் அப்பன் ஆத்தாளைப் பிரிஞ்சு, முன்னே பின்னே பளக்கமில்லாத உன்னை நம்பி வாழவந்தது. நல்லா குடிச்சுட்டு நாலு வருஷமா அதை ஒதைச்சிட்டு இருந்தே. பாவம் பொறுமையா அது சகிச்சுட்டு வந்திருக்கு. தான் அனுபவிச்சதைத்தானே வள்ளி சொன்னுள். உனக்கேன் கோபம் வரணும்? நியாயமா பார்த்தால், அப்போ குடி போதையிலே செய்த அக்ரமங்களுக்கெல்லாம், நீ இப்ப வருத்தப்படவல்ல வேணும்?......"

பெரியசாமியின் உருக்கமான மொழிகள் ஆறுமுகத்தின் உள்ளத்தில் ஊடுருவிப் பாய்ந்தன. அவன் துர்க்குணம் படைத்தவனல்ல. வள்ளியின் மீது அவனுக்குப் பிரியமில்லை யென்றும் சொல்ல முடியாது. ஏதோ சில சமயங்களில் உணர்ச்சி வசப்பட்டு, தன் நிதான புத்தியை இழந்து விடுகிருன். மது விலக்கு வருமுன் வள்ளியின் வாழ்க்கை நரகமாயிருந்ததை அவன் அறிய சந்தர்ப்பமே ஏற்படாமலிருந்தது. இப்போது பெரியசாமி அவன்

மனக்கண்முன் அதைக் கொண்டு வந்து நிறுத்தவே, ஆறுமுகம் தீவிர யோசனையிலாழ்ந்தான். அடுத்து நிலவிய பதினைந்து நிமிஷ நிசப்தத்திற்குப்பின் பெரியசாமி ஆறுமுகத்தினிடம் விடை பெற்றுக்கொண்டு, அவ்விடம் விட்டுச் சென்றபோது பின்னவனின் மனம் பூரண மாற்றத்தை அடைந்திருந்தது. தன் செய்கைக்கு அவன் கழிவிரக்கம் கொண்டு, வள்ளியை சமாதானப் படுத்தும் நோக்கத்துடன் உள்ளே சென்றான்.

உள்ளே ஆறுமுகம் ஒரு அதிசயத்தைக் கன்டான். வள்ளி அடுப்பருகில் அமர்ந்து, பால் காய்ச்சிக் கொண்டிருந்தாள். அவள் இடையில் அவன் எடுத்துக் கொடுத்திருந்த ஆரஞ்சு நிறப் புடவையல்லவா இருக்கிறது!...

“வள்ளீ, அதுக்குள்ளே என் சீலையை மாத்திக்கிட்டே? நான் ஒரு முட்டாளு, வீணு உன் மனசு நோக வச்சேன். ஒனக்கு இஷ்டமானபடி உன் அப்பன் அனுப்பிச்ச சீலையையே கட்டிக்கோ...”

ஆறுமுகம் தன் வார்த்தைகளை முடிக்கு முன்பே வள்ளி எழுந்து அவனருகில் வந்து “இல்லே மச்சான். நான் தான் முட்டாள். இத்தனை வருஷங் கழிஞ்சு நோம்பு கொண்டாடறோம். கேவலம் ஒரு சீலைக்காக அந்த சந்தோசத்தைத் தொலைச்சுக் இருந்தேனே பாவி” என்றாள் இடைமறித்து. அவள் விழிகளின் ஓரங்களில் நீர்த்துளிகள் திரண்டு நின்றன. அதை மறைத்துக் கொள்ள அப்பேதை தலை குனிந்து நின்றாள்.

வள்ளி அழுது கொண்டிருப்பாள், அவளை சமாதானம் செய்ய தான் வெகுவாக பாடுபட நேரிடுமென்றெல்லாம் எண்ணி வந்த ஆறுமுகத்திற்கு அவள் செயலும் மொழிகளும் ஆச்சர்யத்தை மூட்டின. அவள் வதனத்தைத் தன் கரத்தால் நிமிர்த்திய வண்ணம் “கண்ணு, இந்த சீலை உன் ஒடம்புக்கு எத்தனை பொருத்தமாயிருக்கு தெரியுமா? நாலு வருஷத்துக்கு முன்னேகூட நீ இம்புட்டு அளகாயிருந்து நான் பார்த்ததே இல்லை” என்றான். அதே சமயம் அதே சமயம் அவனுடைய மற்றொரு கரம் அவளை அணைய முயன்றது.

வள்ளி அவன் பிடியில் சிக்காமல் விலகிய வண்ணம், “போ மச்சான் உனக்கு வேலையில்லே. யாராச்சும் பார்க்கப் போறாக” என்றாள். நாணத்தால் அவள் முகம் ‘குப்’ என சிவந்து விட்டது.

பானையிலிருந்த பால் புதுவெள்ளம் போல் பொங்கிக் கொண்டிருந்தது. அதே போல அத் தம்பதிகளின் உள்ளங்களிலிருந்தும் இன்பம் பொங்கி வழிந்தது.

★

கலை

“கலை உலகத்துடன் அதிகமாக ஒன்றிப் போகப்போக, நாம் இயற்கையை மதிப்பதே யில்லை என்பது பொதுவான அபிப்பிராயம்.”

தாபமோ தாபம்!

'சுகி'

மணி பன்னிரண்டு அடித்தது.

பாலசந்திரன் படிப்படியாக வந்து கொண்டிருந்தான். அப்போது வெயில் தகித்துக்கொண்டிருந்தது.

நேயர்களுக்கு சந்தேகம். பகல் பன்னிரண்டு மணிக்கு பாலசந்திரன் படிப்படியாக எப்படித் தோன்ற முடியும்? அல்லது பாலசந்திரன் தோன்றினல் எப்படிப் பகலாகும்? இது தானே? கதையை நான் பூடமாக மூடி மறைத்து, கடைசியில் மூட்டையவிழ்க்க விரும்பவில்லை. ஆரம்பத்திலேயே உண்மையைச் சொல்லி விடுகிறேன்.

பாலசந்திரன், நிலவு இல்லை. மேகத்தில் படிப்படியாகத் தோன்றினன் என்றும் சொல்லவில்லை. படிப்படியாக வந்து கொண்டிருந்தான் என்றுதான் சொன்னேன். இதிலிருந்து நமது கதாநாயகன் பெயர் பாலசந்திரன் என்று நேயர்களுக்கு விளங்கச் சொல்ல வேண்டியதில்லை. அவன் வீட்டு மாடிப்படியில் படிப்படியாக ஏறி வந்து கொண்டிருந்தான்.

நமது கதாநாயகன் பாலசந்திரன் ஒரு உதவி பத்திரிகாசிரியன். அதாவது அற்புதமாக சிறுகதைகள் எழுதிப் புகழும் பேரும் பெற்ற, பெயர்போன எழுத்தாளன். என்ன சொன்னேன்? பெயர் போனவன் என்ரு? வாஸ்தவம். அவன் அடைந்த பெயர் எல்லாம் வர வர, தேய்பிறைச் சந்திரனைப் போல் மங்கிக் கொண்டிருந்தது.

மறுபடியும் பெயர் பெற்ற எழுத்தாளன் ஆக, வளர்பிறைச் சந்திரன் போல முயற்சித்தான் பாலசந்திரன். முயற்சியுடையார் இகழ்ச்சி அடையார், இது பழமொழி. இதைக் கையாண்டு பார்த்து, தன் சிறுகதையை பத்திராதிபரிடம் கொடுத்தான். அவர் அதைப் போற்றினர். ஆனல் பிரசுரம் செய்யவில்லை. இப்படி நேரவே, பாலசந்திரன் மனம் அமாவாசை இருளில் — ஆமாம், கன்னங்கரிய காரிருளில் — அலைதையாகத் திரியும் கதாநாயகிகள் மனம்போல வருத்தம் அடைந்தது.

பாலசந்திரன் முகத்தில் வருத்தத்தின் சாயல், கிரகணம் பிடித்த பூர்ணிமையை நினைப்பூட்டியது. பிறகு, பூர்ணிமையால் காதலர்கள் அடையும் தாபம் நினைவில் வந்துவிட்டால், அப்புறம் மனம் எங்கே போய் நிற்குமோ? அந்நினைவுகள் வந்துவிடு முன், நானகவே பேச்சை ஆரம்பித்தேன்.

"ஏண்டாப்பா, நீ ஆபீஸ் போகவில்லையா? அடுத்த இதழில் 'தாபம்' என்ற தலைப்பில் சிறுகதை எழுதுகிருயாமே, அது என்ன கதை?" என்றேன்.

"அதுவா? அது எழுதினதும் போதும். நான் பட்ட கஷ்டமும் போதும் பத்திரிகை தர்பம் என் கதையை பிரசுரிக்க இடம்

கொடுக்கவில்லையாம். அதனால் இதே தலைப்பில் வேறு கதை எழுதச் சொல்லுகிறார். நான் நேற்றும் இன்றும் ஆபீஸ் போகவில்லை'' என்று சொன்னான்.

எனக்கு சந்தோஷம் தாங்க முடியவில்லை. இந்த இடத்தில் நண்பனிடம் பரிதாபம் காட்ட வேண்டிய நான் அதற்குப் பதிலாக சந்தோஷப்பட்டது எதனால்?

அது ஒரு பெரிய கதை.

ஒரு சமயம் நான் தாபம் என்ற தலைப்பில் ஒரு கதை எழுதினேன். அது உலக மகா கதைகளுக்குள் சிறந்த ரத்தினம் போன்றது. (ஊடே ஒரு வார்த்தை. நான் எழுதும் ஒவ்வொரு கதையும், கட்டுரையும் உலகத்திலே சிறந்தது என்று எண்ணத் தவறுவதில்லை. என் நான் மட்டும் இப்படியா? எல்லா எழுத்தாளர்களுக்கும் இப்படித்தானே. — அடடா, எதோ சொல்ல வந்தவன் என்னமோ சொல்லிக்கொண்டு இருக்கிறேனே!)

தாபம் என்ற கதை எழுதியதாகவல்லவா சொன்னேன்? அதைப் பத்திரிகைக்கு அனுப்பினேன். பத்திரிகாசிரியர் திருப்பியனுப்பினர். என்னுடைய கதையை ரசிக்காத பத்திரிகாசிரியரை மனதிற்குள் நிந்தித்துக் கொண்டு, வேறு பத்திரிகைக்கு 'பரிதாபம்' என்ற தலைப்பில் அனுப்பினேன். அட பாவமே, அந்த ஆசிரியரும் என் கதையைப் பிரசுரம் செய்யவில்லை. இவர்கள் ஜம்பம் என்னிடம் பலிக்குமா?

பரிதாபம் என்ற தலைப்பை மாற்றினேன். நீங்கள் நினைக்கிறபடி பரியை நரியாக்கவில்லை. அப்படி நரிதாபம் என்று வார்த்தை இருந்தால், ஆக்கியிருப்பேன். ஆனால் பரிதாபத்தை வெகு சுலபமாகப் பச்சாதாபம் என மாற்றி, அனுப்பினேன். அந்த ஆசிரியர் "தங்கள் கதையைப் பார்த்து, அனுதாபம் கொள்ளுகிறேன்'' என்று எழுதி விட்டார்.

அனுதாபம் என்பதைத் தலைப்பாகக் கொண்டு எந்தப் பத்திரிகைக்கு அனுப்பலாம் என யோசித்த வேளையில், பாலசந்திரன் படிப்படியாக மேலே வந்தான். அவன் தன் கதைக்குத் 'தாபம்' எனப் பெயரிட்டு, அடைந்த வருத்தத்தைச் சொல்லவே, எனக்குச் சிரிப்பு வந்தது.

"வேறு கதை எழுதி விட்டாயா?'' என்றேன்.

"அது ஹோட்டல் பக்ஷணமா? கொஞ்சம், இருங்கள் போட்டுத் தருகிறேன் என்று சொல்ல? எழுதுவதற்கு அவகாசம் வேண்டாமா?'' என்று பாலசந்திரன் கேட்டான்.

"ஆமாம், நீயும் பெரிய கதாசிரியன். அடுத்த இதழில் உன் கதை இல்லாவிட்டால், எத்தனை ஆயிரம் வாசகர்கள், ஏமாற்றத்தால், மூர்ச்சையடைவார்களோ? அதனால், பாவம், அந்த வாசகர்கள் நன்மைக்காக தாபம் என்ற தலைப்பில் ஏதாவது எழுது'' என்று கேலியும் பரிகாசமுமாகச் சொன்னேன்.

பாலசந்திரன், 'இதோ என் கையில் இருப்பது என்ன தெரியுமா?' என்று கேட்டான். எனக்குச் சந்தேகம் வந்துவிட்டது. அதைக் கூர்ந்து நோக்கிவிட்டு, 'கத்தியில்லை. ரேஷன்கார்டும் இல்லை. ஒருவேளை... பாஷாணம்... சே... சே... பாஷாணம பெட்டி வடிவத்தில் இருக்காது. ஆமாம், இது தகரப் பெட்டியாக என் ஊனக்

கண்ணிற்குப் புலப்படுகிறது. அது என்னவோ? எட்டைத் திருப்பினேன்.

பாலு ஒரு முறை சிரித்தான். 'வெயில் அடிக்கிறதையும், நேரத்தையும் நீ பேசுகிற தினுசையும் பார்த்தால் உனக்கு டாக்டர் தேவை' என்று மேலே சொல்லு முன், நான் குறுக்கிட்டேன்.

"பாலு, இந்தப் பெட்டிக்குள் ஒரு முழக் கயிறு இருக்க வேண்டும், இல்லாவிட்டால், நீ இப்படிப் பேசியிருக்க மாட்டாய். அட பாவி, அநியாயமாக உயிரை மாய்த்துக் கொள்ளாதே" என்று கெஞ்சினேன். ஆமாம், பரிதாபமாகவே கெஞ்சினேன். ஆனல் அவன் மனசில் அது வீண் தாபமாகப் பட்டிருக்க வேண்டும்.

பாலு சொன்னன்: "நான் யாரிடமும் சொல்லாமல் கொள்ளாமல் போகிறேன். உன்னிடம் மட்டும் சொல்ல வந்தேன். இன்னும் மூன்று தினங்களில் தாபம் என்ற கதையுடன் வருவேன். அதுவரை நான் எங்கே இருக்கிறேன். எங்கே போவேன், என்ற விபரம் யாரும் அறிய முடியாது. வீட்டில் அவளிடம்கூட சொல்லவில்லை" என்று படிப் படியாக பாலசந்திரன் கீழே இறங்க ஆரம்பித்தான்.

நான் போய்த் தடுக்குமுன், பல்லி ஒன்று அவன் மீது விழுந்தது. நல்ல வேளையாக பல்லி உயிர் தப்பியது. (கதை பூராவும் கேட்ட பின்புதான் பல்லி உயிர் தப்பியது என்பதின் கருத்து விளங்கும்) அந்தப் பல்லியால் தனக்கு நடக்கப் போகும் கஷ்ட நஷ்டத்தை அவன் உணர்ந்திருந்தால், பாலசந்திரன் மாடியை விட்டு நகர்ந்திருக்க மாட்டான்.

மேலும், கதை எழுதுவதற்காக எவனவது தலை மறைவாக மூன்று நாள் போனது உண்டா? இல்லை. பாலசந்திரன் இதற்கு விதிவிலக்காக மறைந்து போனன். இந்தச் சமயம் ஒரு ஊமைக் கோட்டான் அலறியிருந்தால் நான் பாலுவைத் தடை செய்திருப்பேன். அப்படியொன்றும் ஊமைக் கோட்டான் கத்தாமற் போகவே, கதவைச் சாத்திக் கொண்டேன்.

★

அடுத்த வீட்டில் நீலாம்புரி ராகத்திற்கும், முகாரி ராகத்திற்கும் போட்டி அதிகமாகி, கடைசியில் முகாரி ராகத்திற்கே வெற்றி ஏற்படவே, தூக்கம் கலைந்து எழுந்தேன். மணியைப் பார்த்தால் காலை 9 மணி. காலடியிற் கிடந்த பத்திரிகையைப் புரட்டினேன். முன் பக்கத்தில் இருந்த செய்தி என் நெஞ்சை இரண்டாகப் பிளந்தது.

கொட்டை எழுத்துகளில் கஷ்டகாலன் பத்திரிகை ஆபீஸில் 5000 ரூபாய் திருட்டு என்ற வரிகள் என் நினைவை மயக்கியது. பாலசந்திரன் மறைவு என்ற வரிகள் அதைவிட அதிகமாக நினைவை ஊட்டின. ஆகவே 5000 ரூபாயும், பாலசந்திரனும் என் மனதிற்குள் போராடின.

பாலசந்திரனைப் பற்றி ஆசிரியரே, தம் கைப்பட குறிப்பு எழுதியிருந்தார்.

நமது பத்திரிகாலயத்தில் இன்று திடுக்கிடும் சம்பவம் நடந்திருக்கிறது. போலீஸார் மேற்பார்வையில் காரியாலயத்தில் நடந்த சோதனையில் ரூ. 5000 களவாடப்பட்டது என்றும், வேறு எவ்விதப் பொருள்களும் களவாடப்படவில்லை என்றும்

ஊர்ஜிதம் செய்யப்படுகிறது. இந்தக் களவில் சம்பந்தப்பட்டவர்களை, போலீஸார் புலன் விசாரித்து வருகிறார்கள். திருடனைக் கண்டுபிடிக்கிற வர்களுக்குரு. 100 இனாம் கொடுக்கப்படும். இத்தோடு கண்டுபிடித்தவரை எமது பத்திரிகையின் ஆயுள் சந்தாதாராகச் சேர்த்துக் கொள்ளப்படும்.

இதைப் படித்து முடிந்ததும், பாலசந்திரன் மறைவு என்ற தலைப்பில் எழுதியிருந்ததைப் படிக்க ஆரம்பித்தேன்.

நேயர்களுக்கு ஒரு அனுதாபச் செய்தி. நமது உயரிய கஷ்டகாலவில் இதுவரை உப ஆசிரியராக இருந்து வந்த ஸ்ரீமான் பாலசந்திரன் நேற்று ஆபீசுக்கு வரவில்லை. உடம்பு அசௌகரியம் என்று நாங்கள் நினைத்தோம். வீட்டிற்கு எமது ஆபீஸ் பையன் சென்று விசாரித்ததில், தனக்கு ஒன்றும் தெரியாது என்று அவர் மனைவியார் சொன்னாராம். அவர், பத்திரிகாலயத்திற்கு வராத காரணம் தெரியவில்லை.

இன்றும் ஸ்ரீ. பாலசந்திரன் காரியாலயத்திற்கு வரவில்லை. நேற்றிரவு ஆபீசில் திருட்டுப் போனதால், யாவரையும் போலீசார் சோதனை இட்டார்கள். வீடுகளில் பரிசோதனை செய்யப்பட்டது ஸ்ரீ பாலசந்திரன் வீட்டைப் பரிசோதனை செய்ததில் அவரும், அவருடைய பெட்டியும் காணப்படவில்லை.

ஸ்ரீ பாலசந்திரனின் பேரும் புகழும் தமிழ் நாட்டில் பரவி நிற்கிறது. அவருடைய கதாபாத்திரங்கள் உங்களுக்கு அறிமுகமானவர்கள். அவருடைய இனிய சின்னஞ் சிறிய, பாலர்க்கும் விளங்கும் சிறந்த நடையும், கற்பனா சக்தியும் யாவரும் அறிந்ததே. இப்படி வாசக நேயர்களின் மனதைக் கொள்ளை கொண்ட, இக்கதாசிரியர் ஆபிஸ் பணத்தைக் கொள்ளையிடுவார் என யாரும் நினைக்கவில்லை.

பழி ஓரிடம், பாவம் ஓரிடம் என்ற முது மொழிக்கு இணங்க, இத்திருட்டும் இவர் மறைவும் நடந்திருப்பதால் வாசகர்களிடம் பூர்ண மன்னிப்பை இப்பொழுதே கேட்டுக் கொள்கிறேன்.

இதைப் படிக்கப் படிக்க, எது உண்மையென எனக்குப் புலனாகவில்லை. ஒரு வேளை, பாலசந்திரன் திருடி இருப்பானா? அல்லது தாபம் என்ற சிறுகதை எழுத மறைந்திருப்பானா? ஒன்றும் தீர்மானிக்க என்னால் முடியவில்லை.

இரண்டு தினங்களாக நான் இப்படியாகத் திணறிக் கொண்டிருந்தேன்.

மூன்றாம் நாள் பொழுது விடிந்தது. ஆமாம் வழக்கம் போல் முகாரியும் — நீலாம்புரியும் போட்டி போடவே, நான் விழித்துக் கொண்டேன். பத்திரிகையைப் பிரித்தால், என் நெஞ்சம் துடித்தது.

அதில், சிறுகதாசிரியர் திரம் என்றும், திருடன் பிடிபட்டான் நாளை, "தாபம்" வெளியாகும் என்றும் மூன்று தலைப்புகள் கண்டால் திடுக்கிடாமல் இருக்க முடியுமா?

ஆவலுடன் படிக்க ஆரம்பித்தேன். பாலசந்திரனே தன் பெயரில் எழுதியிருந்தான்.

நான் தாபம் என்ற சிறுகதை எழுத ஆபீசில் சொல்லாமல் கொள்ளாமல் வீட்டை விட்டுப் புறப்பட்டேன். ரயிலில் போய்க் கொண்டிருந்த பொழுது, ஒரு கனவான் நான் போகுமிடம், என்னுடைய பெயர் எல்லாம் கேட்டார். நான், "கஷ்டகால"

னில் உதவி ஆசிரியர் பாலசந்திரன் என்றேன். உடனே, அவர் முகத்தில் ஏற்பட்ட முகவேறுபாடுகளை அறிந்தேன். அம்முகத்திற்கு உள்ளே ஒரு திருடனின் முகம் கண்டேன். அவருடைய தோற்றம் போலியாகவிருந்தது. அவரைக் கதாபாத்திரம், அதிலும் தாபத்தில் கதாபாத்திரமாக வர்ணிக்க நினைத்தேன்.

நான் திடீரென்று தங்கள் தொழில் என்றதும் அந்த மனிதர் உளறினர். ரயில் நின்றதும்



இறங்கினர். நானும் அவரைப் பின்பற்றி கதாபாத்திரத்தை வர்ணிக்க நினைத்தேன். இப்படி நான் அவரைப் பின்பற்றிப் போகும்போது, என்மீது போலீசார் சந்தேகப்பட்டு, பிடித்தார்கள். நான் அந்த மனிதனைப் பிடித்தேன்.

என்ன ஆச்சரியம். அவர் தான் திருடன். திருடனைக் கையும் களவுமாகப் பிடித்தேன். நேயர்கள், நாளைய இதழில் தாபம் என்ற சிறுகதையைப் பார்த்து, மனித இதயத்தின் போராட்டங்களையும், ஆசாபாசங்களையும் காதலின் காருண்ய சக்தியையும் படிப்பீர்கள். நமஸ்காரம்.

இது படித்து முடிந்ததும் மற்றொரு பகுதியில் ஸ்ரீமான் பாலசந்திரனுடைய வீரம், பெருமை, தமிழ் நடை, கற்பனையின் வனப்பு, கதையின் சிறப்பு இவைகளோடு, ஒரு நடைச் சித்திரத்தை பத்திரிகாசிரியரே எழுதியிருந்தார்.

இப்படியாக ஸ்ரீமான் பாலசந்திரன் "தாபம்" என்ற சிறுகதை வெளிவந்தது. அதைப் படிக்க வெகு ஆவலுடன் தற்சமயம் நீங்கள் இருப்பது போல் நானும் இருக்கிறேன்.

என்னுடைய கதை தாபத்தைச் சொல்லாமல், ஸ்ரீமான் பாலசந்திரனின் பிரதாபத்தைச் சொல்ல நேர்ந்ததற்கு அனுதாபம் கொள்கிறேன்.

★

மருந்துச் சரக்கல்ல

வாடிக்கைக் காரர்களுக்கு ஓர் அறிவிப்பு:
எங்கள் வெள்ளிக் கரண்டிகளைச் சாப்பாட்டிற்குப் பின் **எடுத்துக்** கொள்ள வேண்டாம்!

— ஈவினிங் நியூஸ்

திருவள்ளுவரும் வையையும்

[அ. கிருஷ்ணசாமி நாயுடு]

திருவள்ளுவர் நாஞ்சில் நாட்டில் பிறந்து வளர்ந்து பல துறைகளிலும் கல்வி பயின்ற பின்னர், பல நூல்களையும் ஆராய்வதற்காக மதுரைக்கு வந்தார். "மாங்குடிவாழ் மருதன், மாகீர்த்தி பாண்டியன், தாங்குடி கோள் மதுரை சார்தலுமே" திருவள்ளுவர் வையை யாற்றைக் கண்ட காட்சியைத் "திருவள்ளுவர் வெண்பா" என்னும் நூலில் கூறுவதைக் காண்போம்.

திருவள்ளுவர் வையை யாற்றைக் கண்டவுடன் முடிவில்லாத தனித் தமிழில் வையையின் புகழைப் பாடி ஆனந்தத்துடன் அப்பொழுது ஆடினார். ஏனென்றால் வையைக் கண்டவுடன் வையை யாற்றில் பெருகிவரும் தண்ணீரானது தண்ணீராகக் காணப்பட வில்லை. மற்றோ அத் தண்ணீர் குளிர்ந்த தமிழ் மொழியின் சாறு ஆகக் காணப்பட்டது; தாயின் மார்பிலிருந்து ஊறிவரும் பாலமிழ்தமாக ஊக்கமளித்தது; அரசர்களின் நல்ல நீதி பெருகிவருவதைப் போல மகிழ்வளித்தது. பாலமிழ்தச் செய்யுளாவது:—

தண்டமிழின் சாறோ! நல் தாய் முலையின் பாலமிழ்தோ!
மண்டரசர் நீதியோ! வையையெனக் — கண்டவுடன்
தானந்தம் இல்லாத் தனித் தமிழிற் பாடியே
ஆனந்தத் தாடினன் அன்று.

மக்களுக்கு வேண்டிய பலவகையான சுதந்தரங்கள் எல்லாம் ஒரு வகையில் திரண்டு வடிவெடுத்து வையை யாற்றில் வெள்ளமாகப் பெருகி வருகின்றது. அச் சுதந்தர வெள்ளத்தைக் கண்டவுடன் மிகவும் உவகை கொண்டவராகி பெருமை தங்கிய மனதில் வியந்தார். வியந்து இஃதோ! இவ்வையை யாறோ! பெருகிவரும் ஆறு அன்று. மக்கள் மனதில் என்றும் ஊறிவரும் அன்பு எனத் திருவள்ளுவர் வியந்தார். ஏன்? மக்கள் அகத்தில் அன்பு, வெள்ளம்போல் பெருகுமானால் அந்நாட்டில் சுதந்தரம் உண்டென்பதைச் சொல்ல வேண்டுவதில்லை. சுதந்தர வெள்ளம் பெருகிவரும் வையைப் பற்றிய செய்யுளாவது:—

மக்கள் சுதந்தரமே வையைப் புனலாக
ஒக்கப் பெருகிவரல் ஓர்ந்துமே — மிக்குவகை
வீறென்று நெஞ்சில் வியந்தான் வியந்து இஃதோ!
ஆறன் றகத்தூறும் அன்பு.

பழங்காலத்து மக்களும் அரசரும் தம் நாட்டுக்குரிய யாற்று நீரில் ஒருகுடம் தண்ணீர் பகை யரசனுக்குக் கொடுக்கமாட்டார்கள். அவ்வாறு கொடுப்பது தோற்றுப்போனமைக்கு அடையாளம். இதனை, பாண்டிய நாடு உரிமையிழந்து சேர வரசனுடைய ஆளுகைக்

குட்பட்டது என்பதைத் தெரிவித்தற்காகப் பாண்டிய நாட்டு மந்திரி வையை யாற்றில் ஒருகுடம் தண்ணீரைச் சேர வரசனுக்குக் கொடுப்ப தாக மனோன் மணீயம் என்னும் நூலில் சொல்லப்படுகின்றது.

வையை யாற்றிற்கு ஒரு வீறு உள்ளது; பெருமிதம் உள்ளது; தமிழ் நாட்டிலோ, பாரத நாட்டிலோ உலகத்தில் வேறு எந்நாட்டிலோ இல்லாத பெருமை வையை யாற்றிற் குள்ளது. அப்பெருமை என்ன? கடல் முகத்தில் விழிப்பதில்லை. ஏன் கடல் அவ்வளவு பாவஞ் செய்ததா? ஆம்; அவ்வளவு அழிவைச் செய்தது. அதுவும் அழியாத பொருளை அழிக்கும் அழிவைச் செய்தது. அழியாத கலைச் செல்வங் களை அழித்துவிட்டது. இத்தகைய அழிவைச் செய்த பாவியின் முகத் தில் விழிக்கப்படாது என்று வையை தன் நாட்டிலேயே தங்கிவிட்டது. இவ்வாறு தங்கின வையை கோபத்தோடும் வெறுப்போடும் ஒன்றுக் கும் பயன் படால் இருந்து விட்டதா? இல்லை; ஒரு பக்கத்தில் அழிவு செய்தவன் முகத்தில் விழிக்கப்படாது என்ற வீரமும் இன்னொரு பக் கத்தில் தமது மக்களுக்குத் தண்ணீரமிழ்தம் ஊட்ட வேண்டும் என்ற அன்பும் வையையின் மனதில் குடிகொண்டிருந்தது. வீரமும் அன்பும் உள்ள வையைக் காண்போம்.

> அழியாத் தமிழ் நூல் அழித்த கடல் மூஞ்சி
> விழியாத வீறு கொண்ட வையை — ஒழியா
> திருகரையில் தோப்பும் எழுவயலும் ஊட்டி
> அருகமரும் கண்மாவில் ஆர்ந்து.

வையை யாறு பல கால்வாய்களாகப் பிரிந்து வயல்களில் பாய்ந்து கடைசியில் இராமநாத புரத்திலுள்ள பெருங் குளத்தில் கலக்கின்றது. கடலுக்குள் ஆறென்னும் வடிவத்துள் கலப்பதில்லை. இதனைத் தமிழ் நூல்களை அழித்த கோபத்தினால் கடலில் கலப்பதில்லை என்பது தற் குறிப்பேற்ற அணி. இயற்கையாக நிகழும் நிகழ்ச்சிக்குக் காரணம் கற்பித்தல் தற்குறிப் பேற்ற அணியாம்.

கடல் பாண்டிய நாட்டையும், தமிழ்ச் சங்கத்தையும், தமிழ் நூல் களையும் அழித்த வரலாறு "நெடியோன் குன்றமும், தொடியோள் பௌவமும்" என்னும் சிலப்பதிகாரச் செய்யுளுக்கு அடியார்க்கு நல் லார் எழுதிய உரையாலும் மற்றைய நூல்களின் உரைகளாலும் "ஏர ணம் உருவம்" என்னும் பழம்பாட்டினாலும் நன்கு தெளியலாம். அவ்வளவேன்!

வையை கடலுடன் கலக்காத இவற்கைக்குப் புனைகதைகளான புராணங் களிலிருந்து கற்பனைக்கதைகளைக் கற்பிக்காமல் உண்மையில் நிகழ்ந்த ஒரு சரித்திரத்தை ஆதாரமாகக் கொண்டதைப் பாராட்ட வேண்டும்.

இத்தகைய வையையைக் கண்டதும் யாவராலும் எண்ணத்தகும் பெருமை வாய்ந்த திருவள்ளுவர் கைகளைக் குவித்துப் போற்றுகின் றார். வையை யாகிய தாயைக் கண்டவுடன் திருவள்ளுவரைக் கேட்

காமலேயே கைகள் குவிந்து விட்டன. தன்னை அறியாத மகிழ்ச்சியும் இயற்கைக்குள்ளேயே தோய்ந்து செய்யுளாக வருகின்றது.

தன்னை யறியாதே தன் தலையில் கை குவிய
அன்னையே வானே அமிழ்தமே- முன்னைச்
செழுந்தமிழ்ச் செல்வியே வான்சேயே என்றென்று
எழுந்திருந்து போற்றினன் எண்.

[வான் சேய் – விண்ணென்னும் மாதின் குழந்தை. வானிலிருந்து வரும் மழைத் தண்ணீரே ஆறாக வருவதால் ஆற்றை வான் சேய் என்று சொல்லப்பட்டது.]

திருவள்ளுவர் வையை யாற்றைப் புகழ்ந்து கொண்டே "முத்தமிழ்த் துறை" என்னும் குளிக்கும் துறைக்கு வந்து குளித்தார். சாதாரணமாக யாற்றில் குளிப்பவர் இன்னதிற்காகக் குளிக்கிறோம் என்று சங்கல்பம் செய்து கொண்டு குளிப்பது உண்டு; இல்லையேல் இன்னொருவர் சங்கல்பம் சொல்லிவிக்கக் கேட்டுக் கொண்டுபோய் அவ்விதமே குளிப்பதும் உண்டு. இதில் திருவள்ளுவர் என்ன சங்கல்பம் செய்து கொண்டார் என்றால் எனது உள்ளும் புறமும் தமிழ் வெள்ளம் நிறைய வேண்டும் எனச் சங்கல்பம் செய்து கொண்டார். அங்ஙனம் சங்கல்பம் செய்து கொண்டு வையையில் குளித்தவர் சிறப்பாக வேறு ஒன்றை மனதில் சங்கல்பம் செய்து கொண்டார். அகமும் புறமும் தமிழ் வெள்ளம் நிறைந்தால் அதனால் ஆகும் பயனைத் திருவள்ளுவர் காவியமாகச் செய்ய வேண்டும் என்பதே. இதற்காக வல்லவன் ஒருவன் ஆழ்கடலினுள் சென்று அழகிய முத்துக்களை எடுப்பவன் போல முப்பால் என்னும் முத்துக்களை எடுப்பதாக எண்ணிக்கொண்டு மூழ்கினன். முப்பால் இயற்ற வேண்டும் என்பதே சிறப்பான சங்கல்பம். அச்சங்கல்பம் கண்எதிரே தோன்றுகிறது:

அகமும் புறமும் அருந்தமிழின் வெள்ளம்
தொக; முத் தமிழ்த் துறையில் தோய்ந்து—தகவொருவன்
ஆழ்கடலினுள் சென்றணிமுத் தெடுப்பான் போல்
மூழ்கினன் முப்பால் நினைந்து.

தொகை நிறைய! "அகமும் புறமும் அருந்தமிழின் வெள்ளம் தொக" என்பதற்கு அகத்தமிழும் புறத்தமிழும் நிறைந்த தமிழ் என்றும் உள்ளும் புறமும் தமிழ் மயமாக வேண்டுமென்றும் இரு பொருள் கொள்ளலாம்.

ஒரு ஆற்றினுள்ள பல குளிக்கும் துறைகளுக்குச் சிறப்பான பெயர்கள் வைத்திருப்பதைப் போல. வையையாற்றினுள்ள குளிக்கும் துறைகளுள் ஒன்றிற்கு 'முத்தமிழ்த் துறை' என்னும் பெயர் இந்நூலாசிரியரால் கற்பித்து வைக்கப் பட்டது. முப்பால் என்பது திருக்குறள் திருவள்ளுவர் தாம் இயற்றிய நூலுக்கு முப்பால் என்று பெயர் வைத்தனர் என்றும் 'திருக்குறள்' என்னும் பெயர் பிற்காலத்தவரால் வைக்கப்பட்டதென்றும் 'திருவள்ளுவர் வெண்பா' நூலாசிரியர் முடிந்த முடிபாகக் கருதுகின்றார்.

சபதம்

[கு. ப. சேது அம்மள்]

பத்தடி நடக்கும் வரையில் சித்தார்த்தரோ, ஆட்டிடையர்களோ ஏதுமே பேசவில்லை! சித்தார்த்தர் ஆட்டுக் குட்டியின் பரிதாப நிலைமையை சிந்தித்தவாறு நடந்தார்.

இடையர்களோ, வழியில் செல்லும் வேற்றாள், அதுவும் ஒரு தபசி, ஆட்டுக்குட்டியை தோளில் சுமந்து செல்லும் விசித்திரத்தைக் கண்டு வியந்து ஒன்றும் பேசத் தோன்றாதவர்களாக சித்தார்த்தரைப் பார்த்த படியே நடந்தார்கள்.

சித்தார்த்தர் தமது தோளில் சுமந்திருந்த ஆட்டுக் குட்டியினுடைய ஊனமான காலைத் தடவிக் கொடுத்தபடியே இடையர்களைப் பார்த்து "நண்பர்களே, சாயந்திரமாகவன்றோ மேய்ச்சலினின்றும் ஆடுகளை ஓட்டிச் செல்வது, ஏன் இப்போதே நடத்திச் செல்கிறீர்கள்?" என்று சாவதானமாகக் கேட்டார்.

"ஓ, அதுவா? எங்க ஊரு ராசா, யாகம் பண்ராருல்ல; அது நாளைக்கி கடைசி. அதுக்காக இந்த இருநூறு ஆடுகளையும் அங்கிட்டு இட்டுக்கிட்டு போறோம் — நாளை நடுப்பகலுக்குள்ளார அங்கிட்டு வந்திரணும்னு உத்திரவு. நேரம்கூட ஆயிடுச்சு, ஊம், ஏலே அதட்டி ஓட்ரா நாளியாவுது" என்றான் ஒருவன்.

"எஞ்சாமி, எங்கிட்டு போறிய?" என்று கேட்டான் மற்றொருவன்.

"அப்பா, நீங்கள் செல்லுமிடம் வரையில் நானும் வருவேன் இந்தக் குட்டியை எடுத்துக்கொண்டு" என்று மாத்திரம் அவர்களுக்குப் பதில் சொல்லிவிட்டு நடந்தார்.

உச்சிவெய்யில் மண்டையைப் பொசுக்கிக் கொண்டிருந்தது. வியர்வையால் உடம்பும், உடையும்கூட நனைந்துபோய் விட்டன சித்தார்த்தருக்கு.

வியர்வையால் தொப்பலாகிவிட்ட தம்மை ஒருதரம் பார்த்துக் கொண்டு தலை நிமிர்ந்தபொழுது தமக்கு எதிரில் குழந்தையொன்றைத் தோளில் சாத்தியபடி ஒரு ஸ்த்ரீ தம்மை நோக்கி ஓடி வருவதைக் கண்டார்.

அந்த ஸ்த்ரீ இரண்டு எட்டில் சித்தார்த்தரை அணுகி தோளிலிருந்த குழந்தையை அவர் காலடியில் கிடத்திவிட்டு "தெய்வமே, எம்புள்ளைக்கி உசிரு பிச்சை கொடுங்கசாமி" என்று வீரிட்டபடி அவளும் அவரடிகளில் விழுந்து விட்டாள்.

சித்தார்த்தர் நின்றதும், ஆட்டு மந்தையை நிறுத்தி, இடையர்களும் நின்றவிடத்திலேயே நின்றார்கள்.

"யாரம்மா, எழுந்திரு, மனிதனை என்னை வணங்கி நீ பெறப்

போவது யாது?" என்று அன்போடு வினவினார்.

உடனே அவள் எழுந்து நின்று தீனமான குரலில் "சாமி, நேத்து நீங்க இருந்த தோப்பிலே இருக்கல்லியா நானு; இந்தப் புள்ளெயெ அங்கிட்டு வெள்ளாட உட்டுட்டு வேலே செஞ்சிட்டிருந்தேனுங்க புள்ளெயெ பாம்பு கடிச்சிருக்குங்கசாமி, நீங்கதான் தெய்வமா இருந்து எம்புள்ளெயெக் காப்பாத்தணும், ஐயோ, இருந்தது ஒரு கருக்கா சாமி—" என்று உரக்க அழுதாள்.

க்ஷணநேரம் மௌனமாக நின்று புத்ர சோகத்தால் பீடிக்கப்பட்ட அந்த யுவதியைப் பார்த்து சித்தார்த்தருடைய அறிவு சிந்தித்தது. பிறகு மெதுவான குரலில் "அம்மா, அவ்விதமே ஆகட்டும், அதற்கு யாரும் இறவாத வீட்டிலிருந்து ஒரு பிடி கடுகுதான் வேண்டும்" என்றார்.

துக்கத்தில் மூழ்கி விட்ட அந்த ஸ்த்ரீ 'ஆனல் சரி' என்று சொல்லிக் கொண்டே மெய் மறந்தவளாக அடுத்தாப்போல இருந்த குடிசைகளை நோக்கி ஓட்டமாக ஓடினாள்.

முதல் குடிசை வாசலில் நின்று "அம்மா, யார் வீட்டிலே, பிள்ளையைப் பிழைப்பிக்க ஒரு பிடி கடுகு கொடுங்களேன்" என்று இரைந்து கூவினாள்.

உடனேயே கடுகை எடுத்துக் கொண்டு ஒருத்தி வெளியில் வந்து கடுகு கேட்டவளிடம் அதைத் கொடுத்துக் கொண்டே "என்ன உடம்பு பிள்ளைக்கு?" என்று கேட்டு வைத்தாள் அவள்.

"ஐயோ, நிக்க நேரமில்லெ — பாம்பு கடிச்சு புள்ளெ செத்துப் போச்சு, ஒரு சாமியாருகிட்டெ ஓடி அழுதேன். அவரு எரக்கப் பட்டு, ஒருத்தரும்சாவாத ஊட்லே இருந்து ஒரு புடி கடுகு வாங்கிட்டு வரச் சொன்னரு மறந்துட்டேன்; இந்த ஊட்லெ......"

"என்னடி ஆயா நீ? எந்த ஆயி அப்பன் உன்னெ இப்படி வளத்து வச்சாங்க? ஒருத்தரும் சாவாமெ இருக்கற ஊடு உலகத்திலேயே கெடையாதே!" என்றாள் அவள்.

"என்ன?" என்று திடுக்கிட்டு நின்றாள் அவள் — மெதுவாக அப்பொழுதுதான் துக்கத்திலிருந்து விழித்தவள் போல்.

ஆயினும், மறுபடியும் அக்ஞானம் அறிவை மேவியது. ஒருவேளை அடுத்த குடிசைகள் ஏதாவதொன்றில் யாரும் சாகாமலிருந்தால் ஆகாதா? கேட்டுப் பார்க்கிறேன்" என்று முனகிக்கொண்டு ஒவ்வொரு குடிசைக்கு முன்பும் நின்று கூவிக் கூவி கேட்டு அலுத்தாள்.

"ஆமாம், பிறந்தால் சாவுதான் — செத்தால் பிழைக்க முடியாது. இது ஏனே தெரியாமல் போச்சே எனக்கு? அதுதான் சாமி சுருக்கமா அப்படிக் கேட்டாரு சரி போனது போனதுதான் — நான் செஞ்ச பாவம்" என்று நடக்க ஆரம்பித்தாள்.

அவள் போக்கில் இப்போது முன் போன்ற ஓட்டமில்லை. தாபத்ரயமில்லை. பரம நிச்சிந்தையாக நடந்து சென்று சித்தார்த்தரை வணங்கி "சாமி, தெரியாமெ உங்களை இப்படி நிறுத்தி வச்சுட்டேன். பிறந்தா சாவுதான்னு தெரிஞ்சிகிட்டேனுங்க........."

"அம்மா, நான் உனக்கு உணர்த்த இருந்தேன். எனக்கு முன்

நீயே உணர்ந்து கொண்டாய், உலகமே சாவை நோக்கித்தான் நடக்கின்றன. இதோ இந்த ஆட்டு மந்தை மனிதர்களால், சாவுக் காட்டிற்கு நடத்திச் செல்வதுபோல, மனிதர்களை வியாதியானது சாவுப்பாதையில்நடத்திச் செல்கிறது. இந்த ஆட்டின் சாவைத் தவிர்க்க வழியுண்டோ வென்று அறிய — என் உயிரையும் கொடுக்கத் துணிந்து முன் வந்து விட்டேன் — போய்க் கொண்டிருக்கிறேன் — நீ போய் இறந்துபோன உன் மகனுடைய ஈமக் கடனுக்குரியன செய் — போ'' என்று சொல்லி தமது பிரயாணத்தைத் தொடங்கினர்,

சூரியன் மலை வாயிலிற் பொற் பிழம்பில் இறங்கினன். உலகம் பொன்னொளி பூசிக் கொண்டு மினுக்கிக் கொண்டிருந்தது.

அதே பொன்னொளி பெற்ற உடலில், தங்கநிற ஆடையணிந்த சித்தார்த்தன், மற்றொரு ஒளி உருவாக பிம்பஸாரனுடைய ராஜ்யத்தில் புகுந்தார்.

சூரிய ஒளி மங்கி, ஸந்தியையும் மறைந்து இரவு சமீபித்து விட்டது. தபசியொருவர் ஆட்டுக் குட்டியைச் சுமந்து கொண்டு வந்த விசித்திர சங்கதியைப் பற்றி பரபரப்புடன் நகரத்து ஜனங்கள் ஒருவரையொருவர் விசாரித்த வண்ணமாக இருந்தார்கள்.

மகதத்தின் மன்னனன பிம்பஸாரனுடைய யக்ஞம் நாளைக்கு என்க. முதல் நாளிரவாகையால் நகரத்திலும் அரண்மனையிலும், யாகசாலையிலும் பிரஜைகள் கஜ கஜ வென்று நடமாடிக் கொண் டிருந்தார்கள். இரவு, பகலைப் போல இருந்தது.

யாகசாலையின் ஒரு ஒதுக்குப் புறத்தில் ஆடுகள் யாவும் அவிழ்க் கப்பட்டன. அவ்விடத்தில் நடைபெறும் குதூகல யாக முஸ்தீபுகளைப் பார்த்தபடியே சித்தார்த் தரும் ஒரு புறமாக அமர்ந்திருந் தார்.

பட்சிகளும், கானமும், அருணோதயமுமாக உதய காலத்தை வரவேற்றன. யாக பூமியில், சிஷ்டாசரர்களான பிராம்மணர் களும், ரித்விக்குகளும் பிரவேசித் தார்கள்.

யக்ஞ கர்த்தாவான பிம்பசார மன்னன், நீராடி யாகதீக்ஷா வஸ் திரத்துடன், பத்தினி சமேதனாக யாக மண்டபத்தில் பிரவேசித் தார்.

மந்திர கோஷம் ஆரம்பமாயிற்று. ஹோம குண்டத்திலிருந்த புகை உயர எழும்பி — யாக குண் டத்தில் தீ நாக்குகள் நீண்டன.

ஹோமாக்கினியில் அகிலும், சந்தனக் கட்டைகளும், சமித்து களும் பொழியப்பட்டு நெய்த் தாரைகளால் அவை நனைந்ததும், ஹோம குண்டத்திலிருந்து எழுந்த சுகந்தவாடை நகர முழுதும் சூழ்ந்து கொண்டது.

யாகசாலை நிரம்பிய பிரஜைகள் அந்த வாசனையை நுகர்ந்து, நுகர்ந்து அனுபவித்தார்கள்.

சரியான உச்சிவேளை, வேத மந்திர கோஷம் சற்று நின்றது. ஆடுகளனைத்திற்கும் நீராட்டி, புஷ்பமும், புது வஸ்திரமும் அணிவித்து தயாராகக் காத்திருந்த அந்த இரு நூறு ஆடுகளும் ஹோம குண்டத் தருகில் கொண்டு வரப்பட்டன.

அவற்றுடன் கூடவே அவ்வளவு நேரமும் மௌனமாக இடம் விட்டு அசையாமல் அமர்ந்திருந்த

147251

சித்தார்த்தரும் வந்தார். முதலில் வந்த ஆட்டைப் பற்றிமுன்னுக்கு கொணர்ந்து தர்ப்பையாலான முறுக்குக் கயிற்றால் ஒரு வேதியர் பற்றிக் கொண்டு நின்றார்.

எதிர் புறத்தில் பத்னிசமேதனை பிம்பசார மன்னன். மன்னனை புடைசூழ ரித்விக்குகள். ராஜ மரியாதைச் சின்னங்கள்.

ஹோமத் தீ வானை நோக்கி சீறிக்கொண்டு எரிந்தது. மந்திர உச்சாடனம் பலத்தது. பலர் சேர்ந்து ஒரு குரலாகி "தேவர்களே, பிம்பசாரனுடைய இந்த கிஷ்டியில் மன்னனுடைய பாபங்கள் தொலைய — உங்களுடைய மனது சந்தோஷிக்க அநேக யக்ஞங்களின் தலைமையாக இதோ இந்த உதர மாம்ச பரிதமான இந்த பேஷ ராஜனை அக்னியில் ஆஹுதி செய்கிறோம். சுகந்தங்கள் சொரியப்பட்டதும், நெய்யில் நனைந்த அக்னியில் வெந்த மாம்சம் ரஸோ பரிதமானதாக திவ்ய வாசனை தரும். அவற்றையும், ஹவிர்பாகத்தையும் அங்கீகாரம் செய்து கொண்டு யக்ஞகர்த்தனுக்கு சுபத்தை ஆகர்ஷியுங்கள்" என்ற பெரும் சப்தம் எழுந்தது.

எழுந்த சப்தம் ஓயவில்லை. ஓங்கிய கத்தியுடன் வேதியர் பிரமிக்க ஆட்டைப் பிணித்துப் பிடித்துக் கொண்டிருந்த தர்ப்பைக் கயிற்றை வந்து அவிழ்த்து விட்டார் சித்தார்த்தர்.

ஆட்டை அவ்வாறு அவிழ்த்து விட்ட சித்தார்த்தரை யாரும் எதும் தடை செய்ய சக்தியற்று பிரமை பிடித்து நின்றார்கள்.

ஆடு, அங்கிருந்து நாலுகால் பாய்ச்சலில் தப்பியோடுவதை சற்று வரையில் சித்தார்த்தருடைய கருணைக் கண்கள் கண்டு விட்டு, பிறகு நிதானமாக அரசனை நோக்கித் திரும்பின.

ஆக்ஞையிடும் அரசன் பேதுற்று நின்றான். ஹோமசாலை நிரப்பிய அத்தனை யாக வேதியர்களும் வாயடைத்துப் போனார்கள்.

அனைவருடைய கண்களும், தவ ஒளி வீசும் சித்தார்த்தருடைய திவ்ய ரூபத்தைக் கண்டு மெய் மறந்தவர்களாக அவருடைய செய்கையையும், அவரையும் தடுக்கத் தெரியாமல் ஸ்தம்பித்து விட்டார்கள். சமுத்திரம்போல இரைச்சலிருந்த யாக பூமியில் நிசப்தம் நிலவியது அந்த க்ஷணத்தில்.

மெல்லிய இன்குரலில் சித்தார்த்தர் பேசத் தொடங்கி "மன்னர் மன்ன, யாக பூர்த்தியில் விக்னம் நேர்ந்து விட்டதாக வேதனை வேண்டாம். இகபரசாதகத்திற்காக நீர் செய்யப்பட்ட இந்த யாகத்தின் உத்தம பலனை அடைய உயிர்வதை அவசியமேயில்லை. அதை அறிய உமக்கு ஆவலிருந்தால் நான் சொல்லுகிறேன்" என்றார்.

எத்தனையோ வருஷங்கள் ஜோடித்து, எவ்வளவோ பொருட் செலவிலும், பிரஜா சிரமத்திலும் உருவான அந்த யாகம், பிம்பசாரனுடைய உத்தேசம் பூர்த்தியாகும் தருவாய், ஜீவபலியை சர்வ சாதாரண உபயோகமாகக் கருதிய மன்னன், பலி ஆடு தப்பி ஓடிய காட்சியாலும், சித்தார்த்தருடைய அமுதச் சொல்லிலிருந்த ஞானப் பொருள் செறிந்த போதனையாகச் சேர்ந்து ஜீவபலி ஒரு பாதகச் செயல் என்ற உணர்ச்சி திடீரென்று மன்னனுடைய மனதில் உதயமாகி விட்டது.

அரசனுடைய அனுமதிபெற்று சித்தார்த்தர், க்ஷணகாலம் யோசித்து விட்டு "மன்னவா, நீர் இந் நாட்டின் அதிபதி. பாலனகர்த்தா —ஜீவப்பிராணிகளை, மானிட வர்க்கத்தைக் காப்பாற்ற வேண்டிய பிரதிநிதி — ராஜா. நீர் இச்சித்த படி எந்த உயிரையும் மடித்து விடலாம். ஆனால் கொடுக்க முடியுமா? ஒவ்வொரு மனிதனும், நீரும், உமது பத்னி புத்ரர்களும் உயிரை நேசித்துப் பேணுகிறீர்கள்! அதே அளவுக்கு ஒவ்வொரு ஜீவனும் எறும்பும், கொசுவும்கூட தன்னுயிரைப் பேணி விசுவாசித்து வாழ்வன. 'உயிர்' என்பது ஒவ்வொரு பிராணிக்கும் அருமையானதும், இனிமை பொருந்தியதுமாக இருக்கிறது. கருணை பொருந்திய மனிதனானல் உயிரைக் கொண்டு உடம்பை மேன்மையாக்கி, அறிவை விசாலித்துக் கொண்டு வாழ்வை பயனுள்ளதாக்க முடியும். ஆகையால்தான் மனிதன் தெய்வத்தன்மையிடமிருந்து அருளை யாசிப்பது!

இதோ, பரிதாபத்திற்கு உரிய இந்த ஆடுகளுக்கு மனிதவர்க்கம் காலனாக இருக்கிறது. இருப்பினும்கூட தன்னை வதைக்கும் நோக்குள்ள மனிதன் மீது எவ்வளவு விசுவாசம்? அது மானிடருக்கு உயிரையும், உதிரத்தையும், ஊனையும் மட்டுமா தருகின்றன! பிழைத்திருப்பின் மானிடனுடைய பசிக்கு பாலைத்தருகின்றது. செத்த பின்பு அதன் ரோமம் மனிதன் குளிருக்கு ஆடையாக அணிய உபயோகமாகிறது! இப்படிப்பட்ட சாதுவான ஜீவப் பிராணியை வதை செய்து, அந்த உதரத்தினல் திருப்தி பெருவதானல் தேவர்களிடம் தெய்வத் தன்மையேது; அருளேது? அருளற்ற இடத்திலிருந்து நாம் என்ன நன்மை பெறக்கூடும்?

ஆகவே, உலகநடப்பை ஒட்டி, ஜீவதயை தேடும் நாம், பிறஉயிரை நேசித்தோமானல் நாம் நன்மை பெறுவது திண்ணம். நன்மைக்கு நன்மையும், தீமைக்கு தீமையும் நியாயமாகப் பகிர்ந்தளித்து மனிதனைப் பாது காக்கும் சட்டம் இருக்கிறது. நம் தவறுக்கு நாம் ஜவாப்தாரியல்லவா? அதற்கு இதர பிராணிகளின் உயிரை எவ்வாறு நாம் யாசிக்கலாம்? அது இயலாது —" என்று நிறுத்தினர் சித்தார்த்தர்.

சிறிது பொழுதிற்குள், அந்த பலி பூமி, ஞான பூமியாகி விட்டது. பிராம்மணர்கள் அவசர அவசரமாக புனிதச் செயலில் புக ஆரம்பித்தார்கள். ஆயுதங்களும், கத்திகளும் இருந்த இடம் தெரியாது மறைந்தன.

அரசன் கூப்பிய கரங்களுடன் சித்தார்த்தரை நோக்கி வந்து நமஸ்கரித்து நின்றான்.

சித்தார்த்தர் மேலும் பேசத் தொடங்கி "வேந்தே, கருணை என்பது இகபரசாதகத்தை அருள்வது — நமக்குத் தேவையான உணவு தாவர வர்க்கம் தருகின்றன. ஜீவப் பிராணிகள் அதற்காக உயிரிழப்பது பாபம். இந்த ஞான யாகமே ஜீவன் முக்தியை அடையத்தக்க சாதனம்" என்று சொல்லி அரசனை ஆசீர்வதித்தார்.

மறுதினமே பிம்பசார மன்னன் சித்தார்த்தருடைய அமுத வாக்கியத்தின் உட்பொருளை விளக்கி, நகரில் பறை அறிவித்ததுடன் "அறியாமையின் காரணமாக இது வரையிலும் யாக நிமித்தமாகவும், ஆகார நிமித்தமாகவும் பிராணிவதை நடந்து வந்தது. கருணையுள்ள

வனுக்கே திருவருள் சித்திக்குமாதலால் இனிமேல் யாரும் உயிர் வதை செய்வதும், ஊன் உண்பதும் கூடாதசெயல். இது பிம்பஸார மன்னனுடைய ராஜாக்ஞை!''

இவ்வரிகள் நகரத்துத் தூண்களிலும், சுவர்களிலும், பெரும் பாறைகள் நிறைந்த சாலைகளிலும் கூட செதுக்கப்பட வேண்டுமென்று தீர்மானிக்கப் பட்டது.

இவற்ருல் சித்தார்த்தருடைய மனம் சற்று அமைதியுற்றது.

அங்கிருந்து அவர் புறப்படு முன்பாக மன்னனைச் சந்தித்து "அரசர் பெரும, நான் சென்று வருகிறேன். கருணை நிரம்பிய உனது ஆட்சியில் உயிர்ப் பிராணிகள் இன்புற்று வாழட்டும், உனக்கும் சர்வமங்கள முண்டாகட்டும்''

"இடைமறித்துப் பேசுவதாக எண்ணலாகாது. எனது ஞான குருவாகிய தாங்கள் இந்த நிழலிலே இருக்கவும், தங்கள் பாத சேவையில் நான் ஈடுபடவும் திருஉளம் கொள்ள வேண்டும்'' என்று சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தான் மன்னன்.

சிறு நகை செய்து கொண்டே மன்னனை எழுப்பி உட்கார்த்திக் கொண்டு "மன்னவ, நான் தேடிக்கொண்டிருக்கும் 'உண்மை' இதுவரையில் செய்த தபதியானங்களிலோ, ரிஷிஸங்க வியவகாரங்களிலிருந்தோ, ஆகார பரித்யாகத்திலிருந்தோ காண முடியுமென்று தோன்றவில்லை. ஆதலால் உண்மையை அறிய நெடுந்தொலை செல்ல வேண்டினும், சென்று அறிந்தே ஆக வேண்டும். உண்மையை அறிந்ததும் முதலில் உன்னுடைய இந்த ராஜ்யத்தில்தான் அடிவைத்து வந்துபோதனை செய்வேன்!''

இவ்வாறு சொல்லி அரசனிடம் விடைபெற்று சித்தார்த்தர் கயை நோக்கி நடந்தார். நடந்து நடந்து கயைக்குச் சமீபமான 'பல்கு' என்ற சம வெளியில் வந்து சேர்ந்தார்.

சுற்றிலும் சிறு சிறு மணற் குன்றுகள், முட்புதர்கள் நிறைந்த சமவெளி, ஒரு ஓரத்தில் பெரும் காடு, ஒரு ஓரத்தில் மீன்கள் துள்ளி விளையாடுவதையும் ஸ்படிகம் போன்ற நீர்நிறைந்த சிற்ருேடை. நடுவில் கள்ளங் கபடறியாத ஆடு மாடுகளால் ஜீவிக்கும் இடைய வகுப்பினர்கள் வாழும் கிராமமான 'செநானி' என்ற சிற்றூர். ஊரைச் சுற்றிலும் தென்னந் தோப்பு. அந்தப் பிரதேசம் சித்தார்த்தருடைய மனதிற்குப் பிடித்து விட்டது. ஊரை அடுத்த காட்டினுள் சென்று ஓரிடத்தில் அமர்ந்தார்.

சிந்தனை, சிந்தனை, தீராத சிந்தனை, தெளியாத சிந்தனை. விதி, மனிதன், இருவகைப் பட்டதின் விசித்திரப் போராட்டத்தை சிந்தித்தவாறே ஆண்டுகள் பல ஓடிவிட்டன.

வரவர சித்தார்த்தருக்கு சரீர ஞாபகமே அற்றுப்போக ஆரம்பித்தது. நீண்ட நேரம் சிந்தனையில் ஆழ்ந்து கண் விழித்தால் காலம் அகாலமாகிவிட்டிருக்கும். பிக்ஷா பாத்திரம் வெறும் பாத்திரமாக இருக்கும்.

அங்குமிங்குமாகத் திரிந்து, கிளிகளும், குரங்குகளும் மரத்தினின்று உதிர்த்த பலரகக் கனிகளையும், காய்களையும் தின்று தண்ணீர் குடிப்பார். சித்தார்த்தருடைய இளமை வெகுவாகக்

காய்ந்து விட்டது. வஸந்த ருது ஆரம்பத்தில் மரத்திலிருந்து உதிர்ந்து காய்ந்துவிடும் இளந்தளிர்களிடம் காணப்படும் ஜீவுகூட அவரிடம் இல்லை!

ஆகாரமற்ற களைப்பினால் மூர்ச்சித்துப்போய் அசைவற்றிருந்த சித்தார்த்தரை, அவ்வழியே ஆடுகளை ஓட்டிச் சென்ற சிறுவன் கண்டான்.

வெய்யிலின் சூடுகூடத் தெரியாமல் கிடக்கும் மனிதரைக் கண்டதும், அருகில் ஓடிவந்து பார்த்தான் பையன். பசிக்களைப்பைத் தோற்றுவிக்கும் அந்த முகத்தைக் கண்டதும் ஓடிச்சென்று பால் நிரம்பிய மடியுடனிருந்த ஒரு ஆட்டை ஓட்டி வந்து, அவர் வாய்க்கு நேராக அதன்மடி இருக்கும்படி நிறுத்தி ஆட்டின் பால் அவர் வாயிலேயே விழுமாறு கறந்தான். சிறிது சிறிதாக பால், மெல்ல உள்ளிறங்கிற்று. மெதுவாக, மூடிக்கிடந்த தமது கண்களைத் திறந்தார். சித்தார்த்தர். மெல்லிய குரலில் "அப்பனே, ரொம்ப களைப்பாக இருக்கிறது; இன்னும் கொஞ்சம் பால் கறந்து கொடுப்பாயா?" என்று கேட்டார்.

உடனே அவன் ஒதுங்கி நின்று கூப்பிய கைகளுடன் "சாது நான் தொட்டதை நீங்க தொடப்படாதுங்களே......"

சித்தார்த்தருடைய கண்களில் நீர் நிறைந்து விட்டது. "அப்பனே, மன இரக்கம் மனிதர்களை பந்துக்களாக்கி விடுகிறது. உடம்பிலுள்ள ரத்தமும், கண்ணீரும் யாவருக்கும் ஒரே மாதிரிதான். பிராமணன் பிறவியிலேயே விபூதியும், பூணூலுமாகப் பிறக்கவில்லை! நன்மை புரிபவன் பிராமணன் தீமை செய்பவன்தான் சூத்திரன் ஜாதிபேதம் இதே.

நீ பிராமணனில்லையென்று சங்கைப்படாதே — எனக்குப் பசிக்குணவு தா!" என்றார்.

சிறுவனுடைய அறியாமை, சூரியன் முன் பனிபோல மறைந்து விட்டது. பிக்ஷா பாத்திரம் நிறைய பால் கறந்து கொடுத்து விட்டுப் போனான்.

பசியால், சோஹித்து மூர்ச்சையடைந்து, ஆகாரத்தால் பிரக்ஞை வந்து, இன்னும் கொஞ்சம் பாலையும் உட்கொண்ட பிறகு சித்தார்த்தருடைய புலன்கள் உயிர்த்தெழுந்தன. உடலும், உள்ளமும் தென்புற்றன.

தேகத்தின் அன்றாட உபாதியான பசியையும், அந்த உபாதியால் தமக்கு நேர்ந்ததையும் எண்ணிக்கொண்டு சிந்தனையிலாழ்ந்திருந்த சமயத்தில் கூத்தாடிகளின் கூட்டமொன்று ஆரவாரத்துடன் வருவது கண்டார். தம்பூரும், மத்தளமும், துருத்தியும் கொம்புகளுமான பெரும் சப்தத்துடன் பாதச் சிலம்புகள் கல கல என்று ஒலிக்கும் கூத்தாடிய பெண்கள் உல்லாச நடை போட்டவாறு சித்தார்த்தரை கடந்துசென்றனர்.

அப்பொழுது தம்பூர் மீட்டுபவனிடம் நடந்து கொண்டிருந்த ஒருத்தி "தம்பூர் சுருதியாகப் போடு, நான் நன்றாக ஆடுவேன், தம்பூர் சுருதியைத் தாழ்த்தாதே. தொனியை ரொம்ப உயர்த்தாதே. அப்போதுதான் நாம் மனிதர் மனதை ஆட்டத்தில் ஊன்ற விட்டுச் செல்வோம்" என்று சொல்லிக்கொண்டே நடந்தாள்.

தந்தியை முறுக்கினால் அறுந்து போகிறது; தந்தியை நெகிழ்த்தி

னுல் பேச மறுக்கிறது. ஆதலால் சுருதி அதிகமாக உயர்ந்தோ, தாழ்ந்தோ போகக்கூடாது.

அர்த்தமற்ற இந்தப் புலைப் பாட்டை யாராவது கேட்டால் பரிகசிப்பார்களே என்ற நினைவு துளிகூட இல்லாமல் அவர்கள் கூத்தாடிக் கொண்டு நடந்தார்கள்.

பாட்டு சித்தார்த்தருடைய காதில் விழுந்ததும் அவர் திடுக்கிட்டார்! "ஆஹா, அறிவிலிகளுடைய வீண் வார்த்தைகளிலும் சில சமயம் அற்புதமான பொருள் நயம் தென்படுகிறது! அறிவாகிய சங்கீத சாதனைக்காக, உடலாகிய, தந்திகளை மிக அதிகமாக முறுக்குகிறேன். உண்மையைக் கண்டு பிடிக்கப்படாத பாடுபட்டு, அதை அடையவிருக்கிற தருணத்தில் சரீர வலு இன்றி க்ஷீணமடைந்து விட்டேன்; கண்கள் இருளுகின்றன. எனக்கு சிறிதளவு ஆகார போஷணை தேவை போலும்! இந்த அரண்யப் பிரதேசத்தில் என்னைத்தேடி உணவளிப்பார் யார்?"

இவ்விதமாக குக்ஷி உபாயையைப் பற்றிய நினைப்பில் சித்தார்த்தருக்கு அன்றைய பொழுது போயிற்று.

★

நன்மையும் தீமையும்

"என்னடா ராமு கண்ணில் காணவே இல்லை!"

"கண்ணாஸ்பத்திரியில் இருந்தேன் கிட்டு"

"அடப் பாவமே!"

"பாவம் என்னடா கிட்டு. அங்கே நர்சை பணந்து கொண்டேன்"

"பேஷ்!"

"பேஷா? அவள் ஒரு விதவை"

"அட கஷ்டகாலமே!"

"இல்லையடா, அவள் லக்ஷாதிபதி; அவளுக்குத் பெரிய பங்களா உண்டு"

"சந்தோஷம்"

"சந்தோஷமா? அந்த பங்களா இடிந்து அவள் தலையில் விழுந்தது"

"அடப் பாவமே!"

"பாவமா, எனக்குச் சொத்துக் கிடைத்தது"

"பேஷ்!"

"ஆமாம், பலே பேஷ்!"

தொடர் கதை:

மல்லிகை மொக்கு

தா. நாகலிங்கம்.

அத்தியாயம் எட்டு

காமாக்ஷியம்மாளும் முத்துவும் புவனாவைக் கோவைக்கு அழைத்துச் சென்று ஒரு மாதம் ஆகிவிட்டது. ராஜம்மாளுக்கு வீட்டில் இருப்புக் கொள்ளவில்லை. பேச்சும் சிரிப்புமாக கலகலப்பாய் இருந்த வீடு இப்போது சூனியம் பிடித்தது போல் களையற்று வெறிச்சென்றிருந்தது. அந்தச் சூழ்நிலையில் அதிக நேரம் தனித்திருக்க ராஜம்மாளால் முடியவில்லை. ஆகையால் இப்போதெல்லாம் அவள் வீதித் திண்ணையில் வந்து உட்கார்ந்து கொண்டு சேகரன் வரும்வரையில் போவோர் வருவோரைப் பார்த்துக்கொண்டிருப்பது வழக்கமாகி விட்டது.

அன்றும் அப்படித்தான் சமையல் வேலை முடிந்ததும் மூடி வைக்க வேண்டியவைகளை மூடி வைத்து, அறையை ஒழுங்குபடுத்தி விட்டு, கையில் வெற்றிலை பாக்குடன் வீதித் திண்ணைக்கு வந்து உட்கார்ந்தாள்.

'பாதைகளெல்லாம் எங்களுக்குத்தான் உரிமை, எந்தப் பாதையில் வேண்டுமானாலும், எப்படி வேண்டுமானாலும் எத்தனை வேகம் வேண்டுமானாலும் போவோம்; யாரும் எங்களைக் கேட்கமுடியாது என்பது போல் கார்கள் 'விர் விர்' என்று வேகமாய்ச் சென்று கொண்டிருந்தன. பாதையின் ஓரமாக சில குதிரை வண்டிகள் மெல்லப் போய்க் கொண்டிருந்தன. அதற்கும் அப்பால் சில பாட்டை சாரிகள் தங்கள் தங்கள் லக்ஷியத்தை அடைய தங்கள் வசதிப்படி மெதுவாகவும் வேகமாகவும் போய்க் கொண்டிருந்தார்கள். எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்த ராஜம்மாளுக்கு, தான் ஏதோ ஒரு சினிமாப் படம் பார்த்துக் கொண்டிருக்கிறோம் என்ற பிரமை சற்று நேரம் ஏற்பட்டது. பாதையில் போய்க் கொண்டிருந்த யாரோ இளம் தம்பதிகள் 'கலகல' வென்று சிரித்தது ராஜம்மாளின் பிரமையைத் தட்டி எழுப்பியது. 'புவனா சிரித்தாலும் இப்படித்தான் இருக்கும்' என்று நினைத்து அந்தச் சிரிப்பை நன்றாக நினைவு படுத்திக் கொண்டாள்.

புருஷன், மனைவியை ராணியாக வைத்து ராஜோபசாரம் செய்தாலும், அவளுக்குத் தன் தாய் வீட்டில் இருப்பது போல் ஒரு நிறைவும், மன நிம்மதியும் புகுந்த வீட்டில் ஏனோ இருப்ப

தில்லே. பிறந்த வீட்டில் சோற்றுக்கு வழியில்லாமல் கஞ்சியோ கூழோ குடிக்கக் கூடிய நிலைமை ஏற்பட்டாலும், புகுந்த வீட்டில் பலகார பட்சணங்களோடு உண்ணும் சாப்பாட்டைவிட அவர்களுக்கு அந்தக் கூழும், கஞ்சியும் சிறந்ததுதான்! இந்த விதி பொதுவாக எல்லாப் பெண்களுக்கும் பொருந்தும். இந்த விதிக்குப் புவனவும் உட்பட்டவள் தானே? அவளுக்கு மட்டும் ஆசையிருக்காதா தாய் வீட்டிற்குச் சென்று பத்து நாட்களுக்காவது இருந்து வர வேண்டும் என்று?

ராஜம்மாள் இப்படித்தான் நினைத்தாள்: 'நானும் புவனவைப் போல் இருந்த போது என் தாய் வீடு செல்ல எவ்வளவு துடியாய்த் துடித்திருப்பேன்? பொங்கலுக்கு அவர்கள் வந்து அழைத்துச் செல்லுமுன் 'அவரை' வற்புறுத்தி பொங்கலுக்கு ஒரு வாரம் முன்னடியே கூட்டிப் போயிருக்கிறேனே! என்னைப்போல புவனவும் பெண்தானே? அவளுக்கு மட்டும் தாய் வீட்டின் மீது ஆசை அன்பு, பாசம் எல்லாம் இருக்காதா? ஆயிற்று. ஒரு மாதம் ஆகிவிட்டது. மீறி மீறி இருந்தாலும் இன்னும் எழெட்டு நாட்கள்தானே? பிறகு வந்து விடுகிருள்!' இப்படி ஏதேதோ நினைத்துக் கொண்டிருந்த ராஜம்மாளின் நினைவுக் கோவையை சேகரன் வந்த (செருப்புச்) சத்தம் துண்டித்தது. அதைத் தொடர்ந்து, "ஏனம்மா இன்னும் சாப்பிடலேயா? மணி ரெண்டுக்கு மேலா யிடுச்சே?" என்று கேட்டான் சேகரன்.

"இல்லப்பா, பத்துப் பதினொரு மணிக்குத்தானே காப்பி சாப்பிட்டேன். பசியே இல்லே. நீ வரட்டும்னு இருந்தேன்" என்று சொல்லிக்கொண்டே திண்ணையை விட்டு எழுந்து உள்ளே சென்று செம்பில் தண்ணீர் மொண்டு வைத்துவிட்டு இலையைப் போட்டாள் ராஜம்மாள். கைகால் அலம்பிக்கொண்டு சாப்பிட ஆரம்பித்தான் சேகரன்.

"ஊருக்குப் போயிருந்த 'ஆபீஸ்' காரர் ரெண்டு பேரும் திரும்பி வந்து விட்டார்களா?" என்று கேட்டாள் ராஜம்மாள், பறிமாறியபடி, ஆர்வத்துடன்.

"இல்லம்மா. இண்ணைக்குத் தான் ரெண்டுபேர் கிட்ட இருந்தும் காயிதம் வந்திருக்கு. ஒருத்தர் திருநெல்வேலி போய் தண்ணி ஒடம்புக்குச் சேராமெ ஜொராமாப் படுத்துட்டாராம். இன்னெருத்தர் மேட்டுப் பாளையத்திலே அவரோட தம்பி கலியாணத்தைக் கையோட முடிச்சுட்டு அடுத்த வாரம் வர்ருராம். ரெண்டு பேரும் இப்போதைக்கு வருவாங்கண்ணு தோணலே. எப்படீம்மா கோயமுத்தூருக்குப் போறது?" என்று ராஜம்மாளின் முகத்தைப் பார்த்தான் சேகரன்.

ராஜம்மாள் பதில் ஒன்றும் சொல்லவில்லே. சற்று நேரத்திற்குப் பிறகு, "சரி. அப்ப எப்பத் தான் கோயமுத்தூர் போறது?" என்ருள்.

"இப்ப எங்கே! இனி கிருஸ்மஸ் லீவுக்குத்தான். அதுக்கு முன்னலே பத்துப் பதினஞ்சு நாளைக்கு சேந்தாப்பலே லீவு கிடைக்காது. நடுவாலே 'இன்ஸ்பெக்ஷன்' வேறே வந்து தொலேயுது. என்ன பண்றது?"

"என்ன பண்றது? சம்பந்தியம்மா, பலகாரத்தையும் பக்ஷணத்தையும் பண்ணி வெச்சுட்டு

ஒன்னெ எதிர்பாத்துட்டே இருக்கும். ஒரு காயிதமாவது எழுதிப் போட்டுடு வராததைப்பத்தி.''

''ஆமாமா சாயங்காலம் எழுதிப் போடத்தான் வேணும். புவனு வேறே எதிர்பாத்துட்டு இருப்பாள்.''

''ஆமாப்பா ஒண்ணு எழுதிப் போட்டுடு. அதுதான் நல்லது'' என்று அந்தப் பேச்சை ஒரு முடிவுக்குக் கொண்டு வந்தாள் ராஜம்மாள்.

காமாக்ஷியம்மாளும் புவனுவும் சேகரன் போகாததில் வருந்துவார்கள் என்று ராஜம்மாள் அறிந்திருந்தாள். ஆனாலும் சேகரனும் தன்னைத் தனியாய் விட்டுவிட்டுப் பத்துப் பதினைந்து நாள் கோயமுத்தூருக்குச் சென்று வருவது மனதுக்குக் கொஞ்சம் கஷ்டமாகத்தான் இருந்தது. இப்போது எதிர்பாராத விதமாக சேகரன் கோயமுத்தூருக்குப் போக முடியாத நிலைமை ஏற்பட்டது ராஜம்மாளுக்கு உள்ளூரமகிழ்ச்சியாய்த்தான் இருந்தது. அந்த நிலைமையை ஏற்படுத்திய சேகரனின் சகபாடிகளான அந்த இரண்டு உத்தியோகஸ்தர்களையும் வாயார வாழ்த்திவிட்டு, அந்த மகிழ்ச்சியோடு சாப்பிட ஆரம்பித்தாள்.

அத்தியாயம் ஒன்பது

மேற்கொண்டு இரண்டு மாதங்கள், இரண்டு நாட்கள் போல் சென்று விட்டன.

முத்துசாமி இப்போது தங்கு தடையின்றி சரளமாகப் பேசும் நிலைமைக்கு வந்து விட்டான். நாளாக நாளாக அவன் பேச்சில் இயற்கையான ஹாஸ்யமும், கவர்ச்சியும் அமைந்து பொது மக்களை ஆகர்ஷிக்கத் தொடங்கியது. இதனால் அதிக நேரம் பேச வேண்டிய நிர்ப்பந்தமும், அவசியமும் முத்துசாமிக்கு ஏற்பட்டு நீண்ட பிரசங்கங்கள் செய்யவும் அவனைத் தயார் படுத்தி விட்டது.

கோவையில் அதுவரை ஊர் பேர் தெரியாமல் இருந்த நிலயங்கள், வித்வத் சபைகள், சங்கங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு நினைவு நாளோ, பிறந்த நாளோ, ஜெயந்தியோ கொண்டாடும் காரணத்தை அடிப்படையாய் வைத்துக்கொண்டு முத்துசாமியின் சுவையான பேச்சைப் பொது மக்கள் எல்லோரும் கேட்டு அனுபவித்து ஆனந்திக்கச் செய்தன. நாளடைவில் பொதுக் கூட்டம் என்றால் 'முத்துசாமி பேசுகிறாரா?' என்ற கேள்வி எழுவது சர்வ சாதாரணமாகி விட்டது. முத்துசாமியும் கர்வம் கொஞ்சம் கூட இல்லாமல், அழைத்த கூட்டங்களுக்கெல்லாம் சென்று பிரசங்கம் செய்து வந்ததால் அவன் பெயரும் புகழும் தமிழ் நாடெங்கும் காட்டுத் தீ போல் அதி தீவிரமாகப் பரவத் தொடங்கியது! பத்திரிகைகள் அவன் பிரசங்கங்களை அப்படியே சுருக்கெழுத்தில் எடுத்து மூன்று நான்கு தலைப்புகள் கொடுத்து முதல்பக்கத்தில் வெளியிடலாயின. முத்துசாமியின் புகைப்படங்களுக்கு மார்க்கெட்டில் ஏகப்பட்ட கிராக்கி ஏற்பட்டது. முத்துசாமியை பேட்டி காணவும், அவரது மேலான குணங்களையும், அபிப்பிராயங்களையும் நேரில் தெரிந்து கொண்டுபோகவும் பலர்

வந்து போயினர். வெளியூர்களி லிருந்து அழைப்புக்குமேல் அழைப்பாக வந்து கொண்டிருந்த தால் அவற்றில் தேர்ந்தெடுத்து அந்தந்த இடங்களுக்கு மட்டும் போய்வர முன் கூட்டியே பிர யாணத் திட்டங்கள் வகுக்க வேண்டி ஏற்பட்டன. எல்லா வற்றையும் எப்படியோ சமாளித் துக் கொண்டு தனது பிரசங்க வாழ்க்கையை அமோகமாக நடத்தி வந்தான் முத்துசாமி. தனது வீட்டிலேயே ஒரு பகுதி யை ஒழித்து தன்னைப்பார்க்க வரு கிறவர்கள் வசதியாய் உட்காரவும் பேசவும் ஏற்பாடு செய்திருந் தான்.

★

ஒருநாள் வழக்கம்போல் முத்து சாமி காலையில் தன் அறையில் உட்கார்ந்து கடிதங்களைப் பார்த் துக் கொண்டிருந்தபோது, ''நமஸ்காரம்!'' என்ற இனிய குரல் அவன் காதில் விழுந்தது. தலை நிமிர்ந்து பார்த்தான். சர்வ லக்ஷணங்களும் பொருந்திய சௌந்தர்ய தேவதை போல் நின்று கொண்டிருந்தாள் ஒரு நாரீமணி.

காதுகளில் 'டால்' அடித்த டோலக் ஊசலாடியது. மெல்லிய வாயில்புடவை அவள் உடலை மென்மையாய் அலங்கரித்தது. கையே இல்லாத 'சில்க்' ஜாக் கெட், கைப் பின்னல் பார்டர் கொடுத்த பாடியின் அழகை வெளிப் படுத்துவதற்காக அணிந் தது போல் இருந்தது. சுருண்ட கேசம் காற்றில் லேசாகப் புரண்டு கொண்டிருந்தது. சற்று நீண்ட அழகான அந்த முகத்திற்கு சோபை யளித்த கரிய கண்கள் இரண்டும் காதளவு நீண்டிருந் தன. அவள் நமஸ்காரம் செய்த கைகள் கீழே இறங்குவதற்குள் முத்துசாமியும் நமஸ்காரம் செய்து எழுந்து, ''வாருங்கள். இப்படி உட்காருங்கள்'' என்று தன் எதி ரில் இருந்த ஒரு ஆசனத்தைச் சுட்டிக் காட்டினான். வந்த அப் பெண்மணி 'டக் டக்' என்று 'பூட்ஸ்' பின்னணி கீதம் பாட முத்துசாமிக்கு எதிரில் இருந்த நாற்காலியில் உட்கார்ந்து தன் கைப் பையிலிருந்து ஒரு 'விசிட் டிங் கார்டை' எடுத்து முத்துசாமி யிடம் நீட்டினாள். அதில்,

---

மாதர் முன்னேற்றக் கழகம்

ஜெவந்திபுரம்

மிஸ். ஜெயாபாய்

காரியதரிசி.

என்றிருந்தது.

''ஜெவந்திபுரமா? அது எங்கே இருக்கிறது? எந்த ஜில்லாவைச் சேர்ந்தது?'' என்றான் முத்து சாமி. திருநெல்வேலி ஜில்லாவில் இருக்கிறது. திருநெல்வேலி டவு னிலிருந்து பதினைந்து மைல் அதற்கு. நீங்கள் அதிகமாய்க் கேள்விப்பட்டிருக்கமாட்டீர்கள். ஆனால் இனிமேல் அதைப்பற்றி அதிகம் கேள்விப் படுவீர்கள்'' என்றாள் அந்த யுவதி சிரித்துக் கொண்டே.

''ஓஹோ! அப்படியா, சந்தோ ஷம். நல்லது. நீங்கள் என்னைத் தேடி வந்த விஷயத்தைச் சொன் னால் நலமாக இருக்கும்'' என்றான் விநயமாக.

''வேறு எதற்காக இருக்கும்? உங்கள் பேச்சைக் கேட்பதற்கும் சோர்வுற்று, உணர்ச்சியற்றுக் கிடக்கும் எங்கள் ஜெவந்திபுர

மக்களுக்குப் புத்துயிர் அளிப்பதற்கும்தான்."

"உங்கள் சங்கம் ஆரம்பித்து எத்தனை வருஷங்கள் ஆயிற்று? இதுவரையில் என்னென்ன காரியங்கள் உருப்படியாகச் செய்திருக்கிறது? இதைப்பற்றியெல்லாம் கொஞ்சம் விபரமாகச் சொன்னால் எனக்கு உங்கள் சங்கத்தைப் பற்றி நன்றாகத் தெரிந்து கொள்ள வசதியாய் இருக்கும். கொஞ்சம் தயவு செய்து சிரமம் பாராட்டாமல் சொல்வீர்களா?"

"ஆஹா! அதற்காகத்தானே உங்களிடம் வந்திருக்கிறேன். இதற்கு தயவு ஒன்றும் செய்ய வேண்டியதில்லை; எந்த விதமான சிரமமும் இல்லை. எங்கள் மாதர் முன்னேற்றக் கழகம் ஆரம்பித்து ஒரு வருஷம் ஆயிற்று. நூற்றுஐம்பது பேர் அதன் அங்கத்தினர்கள் ஆகியிருக்கிறார்கள். இதில் பத்துப் பேர் தலைக்கு ரூபாய் நூறு கொடுத்து அதன் ஆதரவாளர்கள் ஆகியிருக்கிறார்கள். மற்றவர்கள் மாதத்திற்கு எட்டணா சந்தா செலுத்துகிறார்கள். எங்களுக்கென்று ஒரு சிறிய நூல் நிலையமும், ஒரு வாசகசாலையும் இருக்கின்றன. சந்தாவைக் கொண்டு நல்ல பத்திரிகைகளும், புத்தகங்களும் தருவித்து அதைப் படித்தும் 'சர்க்குலேட்' செய்தும் எல்லோரும் இன்புறுகிறோம்" என்று சொல்லி சற்று நிறுத்தினாள்.

"எப்பொழுதாவது கூட்டம் போடுவதுண்டா?" என்று இடையில் கேட்டு வைத்தான் முத்துசாமி.

'ஓ, போடுகிறோமே! வாரத்திற்கு ஒரு முறை ஞாயிற்றுக்கிழமையன்று கூட்டம் போட்டு பல விஷயங்கள் பற்றிப் பேசி, விவாதிக்கிறோம். ஆரம்பத்தில் பேசவே தடுமாறிய பல பெண்கள் இன்று சுமாராகப் பிரசங்கம் செய்யும் நிலைமைக்கு வந்திருக்கிறார்கள். இது தவிர அவ்வப்பொழுது பெரியார்களின் நினைவு நாட்களும் ஜெயந்தி விழாக்களும் கொண்டாடி வருகிறோம். உள்ளூர் பிரபலஸ்தர்கள் யாரையாவது தலைவராகப் போட்டு அந்த விழாக்களை சக்தியனுசாரம் கொண்டாடி வருகிறோம்."...... இந்த இடத்தில் மீண்டும் சற்று நிதானித்து இடுப்பில் சொருகியிருந்த கைக்குட்டையால் தன் முகத்திலும் நெற்றியிலும் லேசாய் அரும்பிய வியர்வைத் துளிகளை மெல்லத் துடைத்துக் கொண்டாள்.

"கொஞ்சம் ஜலம் சாப்பிடுகிறீர்களா?" என்ற முத்துசாமியின் கேள்விக்கு வேண்டும் என்று பொருள்படும்படி தலையை ஆட்டினாள் ஜெயாபாய். முத்துசாமி எழுந்து சென்று ஒரு கண்ணாடி டம்ளரில் சுத்தமான குளிர்ந்த தண்ணீர் கொண்டு வந்து மேஜையின் மேல் வைத்தான்.

'தேங்ஸ்' என்று சொல்லிக் கொண்டே அதை எடுத்து முக்கால் டம்ளர் குடித்து விட்டு டம்ளரை மேஜையின் மேல் வைத்து விட்டு, "உங்களுக்கு சிரமம் கொடுத்து விட்டேன்" என்றாள் ஜெயாபாய்.

"பரவாயில்லை. உங்கள் தாகத்திற்குத் தண்ணீர் கொடுத்த பலன் என் கணக்கில் வரவு வைக்கப்படும்" என்று சிரித்துக் கொண்டே சொல்லி விட்டு, "சரி, பேலே சொல்லுங்கள்" என்று அவள் சொல்வதைக் கேட்கத் தயாரானான்.

தொண்டையை மெல்லக் கனைத்துக் கொண்டு மீண்டும் பேசத் தொடங்கினாள் ஜெயாபாய்.

"எங்களில் சங்கீதம் தெரிந்த சிலர் பிரதி தினமும் மாலையில் சிறுமிகளுக்கு சங்கீதம், பாட்டு, கீர்த்தனங்கள் சொல்லித் தருகிறார்கள். இன்னும் சிலர் கும்மி கோலாட்டங்களும், அதற்கேற்ற பாடல்களும் கற்பிக்கிறார்கள். வேறு சிலர் பெண்களுக்கு பரத நாட்டியம் சொல்லித் தருகிறார்கள்......"

முத்துசாமி குறுக்கிட்டு "சரிதான், உங்கள் கழகம் தன் பெயருக்கேற்ப உண்மையில் முன்னேற்றக் கழகமாய்த் தான் இருக்கின்றது" என்றான்.

"ஆமாம். ஏதோ எங்கள் சக்தியனுசாரம். எங்கள் கழகத்தின் சார்பில் ஜெவந்திபுரத்தை முன்னேற்ற வேண்டும் என்பது தான் எங்கள் லக்ஷியம். அதற்கு உங்களைப் போன்றவர்களின் அன்பும், ஆசியும், ஆதரவும்........." என்று தொடர்ந்து சொல்வதற்குள்ளாக "நிச்சயம் கிடைக்கும்" என்று முடித்து விட்டான் முத்துசாமி. இருவரும் ஏக காலத்தில் சிரித்தார்கள்.

"நல்லது, எந்த விசேஷத்தின் போது நான் வரவேண்டும், அந்த விசேஷம் எப்போது என்பதை நான் தெரிந்து கொள்ள வேண்டாமா?"

"நிச்சயமாய். அடுத்த மாதம் 10ம் தேதியன்று மகாகவி பாரதியாரின் பிறந்த நாள் வருகிறது, அதை ஒரு பெரிய ஜெயந்தி விழாவாகக் கொண்டாட பெரிய திட்டம் வகுத்திருக்கிறோம். அந்த விழாவுக்குத் தாங்கள் தான் தலைமை தாங்கி நடத்திக் கொடுக்க வேண்டும்" என்று தான் வந்த காரியத்தை கடைசியாக வெளிப்படுத்தினாள் ஜெயாபாய்.

"ஒன்று சொல்கிறேன். உங்கள் பேச்சை அலட்சியம் செய்ததாக நினைக்கக் கூடாது. ஒரு பெரிய விழாவுக்குத் தலைமை வகித்து அதைச் சிறப்புற நடத்திக் கொடுக்கும் தகுதி எனக்கு இல்லை. வேறு யாராவது விஷயம் தெரிந்த பெரியவர்களைத் தலைமை ஸ்தானத்துக்குத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள். குருவி தலையில் தேங்காயை வைப்பது போல அவ்வளவு பெரிய பதவிக்கு நான் லாயக்கற்றவன். நான் எதையும் ஒளித்துப் பேசுவது கிடையாது. வேண்டுமானால் ஒரு சாதாரணப் பிரசங்கியாக வந்து பாரதியாரைப் பற்றி ஏதோ எனக்குத் தெரிந்ததைக் கூட்டத்தில் சொல்வதைப் பற்றி ஆக்ஷேபணையில்லை. இந்த அளவுக்கு எனக்கு சந்தர்ப்பம் கொடுத்தால் போதும்" என்று இரு கைகளையும் கூப்பி ஜெயாபாயை நமஸ்கரித்தான். ஜெயாபாயின் கைகள் சுய உணர்வின்றி பதில் நமஸ்காரம் செய்தன.

முத்துசாமியின் சாந்தமான குணமும், அடக்கமும், பேச்சு நயமும் புகழில் ஆசை வைக்காத மனப்பக்குவமும் ஜெயாவை வெகுவாக ஆகர்ஷித்தன. அங்கு வருவதற்கு முன் முத்துசாமியைப் பற்றி அவள் கற்பனை செய்திருந்ததெல்லாம் அடியோடு மாறி அவள் கற்பனைக்கு முற்றிலும் மாறுபட்ட குணாதிசயமும், உருவமும் கொண்ட ஒரு தேவ புருஷனைக் காட்சியளித்தான் முத்துசாமி.

அதுவரை தன் டைரியை எடுத்துப் புரட்டிக் கொண்டிருந்த முத்துசாமி, "நல்ல வேளை. 8ம் தேதி முதல் 12 ம் தேதி வரை எங்

கும் கூட்டமில்லை." என்று சொல்லிக் கொண்டு, "9ம் தேதி மாலை இங்கு புறப்பட்டு 10ம் தேதி காலை திருநெல்வேலி வருகிறேன் போதுமல்லவா"? என்று ஜெயாவைக் கேட்டான்.

"ஓ, போதும். ஒரு நாள் முன்னதாக வந்தாலும் நலமே!" என்றாள் ஜெயா.

"அவசியமில்லை. 10ம் தேதி காலையில் வந்து விடுகிறேன். திருநெல்வேலி ஜங்ஷனுக்கு நீங்கள் யாராவது ஒருவரை அனுப்பி வைத்தால் ஜெவந்திபுரம் வருவதற்கு வசதியாய் இருக்கும்"

"கண்டிப்பாக அனுப்பி வைக்கிறோம். முடிந்தால் நானே வருகிறேன்"

"நல்லது, உங்களுக்குச் சிரமம். இதற்காக நீங்கள் இவ்வளவு தூரம் வந்திருக்கக் கூட வேண்டியதில்லை. ஒரு கடிதத்தில் விபரம் எழுதிக் கேட்டிருந்தால் கூட காரியம் சுலபமாக ஒன்றரை அணு செலவில் முடிந்திருக்கும். நல்லது...நமஸ்காரம் வருகிறீர்களா?" என்று எழுந்து கை கூப்பினன்.

நாற்காலியை விட்டு எழுந்து தன் கைகளையும் குவித்து நமஸ்காரம் செய்து கொண்டு, "நான் இதற்காக மட்டும் வரவில்லை. என் உறவினர் ஒருவர் குடும்பத்துடன் இங்கு சமீபத்தில் மாற்றலாகி வந்திருக்கிருர். அவரைப் பார்த்துச் செல்ல வேண்டிய அவசியமும் இருந்ததால் உங்களை நேரிலேயே சந்தித்து விஷயத்தைத் தெரிவிக்க சௌகரியமாய் இருந்தது. நல்லது. நான் ஊர் சென்று அடுத்த வாரத்தில் உங்களுக்கு நிகழ்ச்சிக்குறிப்பு அனுப்பி வைத்து, கடிதமும் எழுதுகிறேன். நமஸ்காரம். வருகிறேன்" என்று மீண்டும் ஒரு முறை நமஸ்காரம் செய்து விட்டு 'டக் டக்' என்று பூட்ஸ் சப்தம் பின் தொடர வெளியே புறப்பட்டாள் ஜெயா பாய்.

இன்னும் சற்று நேரம் முத்துசாமியிடம் எதைப் பற்றிப் பேசலாம் என்று திட்டமிட்டுக் கொண்டிருந்த ஜெயாவுக்கு, முத்துசாமி திடீரென்று பேச்சுக்கு முற்றுப் புள்ளி வைத்தது பெரிய ஏமாற்றமாய் இருந்ததென்ருலும் முத்துசாமியின் கண்டிப்பான குணமும் அனாவஸ்யமாகப் பேச்சை வளர்த்தாது முடிக்கும் தன்மையும் அவளுக்கு ரொம்பவும் பிடித்தன. 'முத்துசாமி ஒரு விசித்திரமான மனிதர்' என்று தனக்குள் எண்ணமிட்டபடி நடக்கலானுள்.

அறையின் வாயிற்படி வரையிலும் சென்று அவளை வழியனுப்பி விட்டுத் திரும்பிய முத்துசாமி பழையபடி நாற்காலியில் அமர்ந்து அரை குறையாகப் படிக்காமல் விட்ட கடிதங்களை மேற்கொண்டு தொடர்ந்து படிக்கலானுன். ஒரு கடிதத்தைப் பார்த்த அவன் கண்கள் அகல விரிந்தன.

(தொடரும்)

★

சிதைந்த எழில்

★

(தெ. ப. பெருமாள்)

வானக் கடலிடையே — சந்திரன்
மறைந்து மாய்ந்துவிடில்
ஈன இருளன்றே? — அங்கே
எழில் நிலவிடுமோ?

காயும் கதிரவனும் — மேகக்
காட்டில் மறைந்து விட்டால்
பாயும் ஒளியுண்டோ? — எழிற்
பண்பு கனிந்திடுமோ?

வாசப் பொழிலிடையே — விரியும்
மலர்கள் வாடிவிடில்
ஆசை எழும்பிடுமோ? — அதை
அடையக் காலெழுமோ?

ஓதே அருவியினில் — வெள்ளம்
கிளர்ந்து பாய்தலின்றேல்
சீதம் நிலைத்திடுமோ? — செழுமைத்
தேக்கம் பெருகிடுமோ?

தங்க யாழினிலே — தந்தி
தகர்ந்து நாசம் வரின்
பொங்கும் நாதமுண்டோ? உணர்வு
பொருந்தி நின்றிடுமோ?

மக்கள் இதயமதில் — அன்பு
வற்றி வரண்டு விட்டால்
துக்கக் கொடுமையன்றே? — வெறும்
சூனியப் பாலையன்றே?

வசனமும் கவிதையும்

கே. ஸ்ரீனிவாசன் எம். எஸ்..ஸி.

கவிதைக்கும் வசனத்துக்கும் இடையில் ஒரு வரம்பு இருக்கிறதா? இவை இரண்டுக்கும் என்ன வித்தியாசம்? கவிதையின் வரையரை என்ன? இலக்கிய ரீதி என்று ஒன்று ஏற்பட்டதிலிருந்து மேற்கண்ட கேள்விகள் ஒவ்வொரு மொழியிலும், ஒவ்வொரு நாட்டிலும் கேட்கப்பட்டு வந்திருக்கின்றன. ஒவ்வொரு காலத்திலும் இவைகளுக்கு எழுத்தாளர்கள் ஒவ்வொரு விதமாகப் பதிலளித்து வந்திருக்கிறார்கள்.

இக்கேள்விகளில் கொஞ்சமும் சிரத்தை யில்லாத என் நண்பர் ஒருவர் முடிவாக பின்வருமாறு இவைகளுக்குப் பதில் சொன்னார்: "வசனத்தில் எல்லா வரிகளும் ஒரே நீளமாய் இருக்கும். ஆனால் பாட்டில் ஒவ்வொரு வரியும் வெவ்வேறு நீளமாய் இருக்கின்றன. இதனால் பாட்டு எழுதுவதால் அதிகக் காகிதம் செலவாகிறது" என்றார். இதிலிருந்து அவர் ஒரு பழமொழியும் உண்டாக்கினார். "கவிதை எழுதினால் காகிதப் பஞ்சம்" என்று.

என் நண்பருடைய பதில் குறை கூற முடியாததாய் இருந்தாலும், இலக்கிய வளர்ச்சிக்கு உதவி செய்வதாய் இல்லை. ஆகவே கவிதை, வசனம் இவைகளின் குணங்களைத் தெரிந்துகொள்ள வேறுவழிகளைத் தேடவேண்டியிருக்கிறது.

என் நண்பருடைய பதிலில் இருந்தே ஆரம்பிப்போம். ஆனால் அதில் ஒன்று கவனிக்கவேண்டும்; அவர் பாட்டு என்ற வார்த்தையை உபயோகப் படுத்தினர். பாட்டும் கவிதையும் ஒன்று?

வசனத்தின் வரையரையைச் சுலபமாகச் சொல்லி விடலாம். ஒரு விஷயத்தை எல்லோருக்கும் அர்த்தம் தெரியும்படி தெளிவாகச் சொல்லும் வார்த்தைக் கோர்வையே வசனம். இன்னும் அதை விரிவாகச் சொல்லும்படி கேட்டால், "வார்த்தைகள் பொருத்மாய் இருக்க வேண்டும். இன்னொருவர் மனதில் சந்தேகம் ஏற்படாதவாறு விஷயத்தைப் படிப்படியாகச் சொல்ல வேண்டும். வாக்கியங்கள் கோவையாய் இருக்கவேண்டும்" என்றெல்லாம் சொல்லிக் கொண்டே போகலாம்.

ஆனால் கவிதையைப் பற்றிப் பேசுவது அவ்வளவு சுலபம் அல்ல.

இசையழகும் நல்ல சந்தமும் இருந்தால்தான் கவிதை என்று சிலர் சொல்வார்கள். குழந்தைப் பாட்டுகளில் நல்ல சந்தங்கள் இருக்கின்றன. நாட்டுப் பாடல்கள் காதுக்கு இனிமையாய் இருக்கின்றன. இன்றைய சினிமாப் பாட்டுகளில் இசையழகு இருக்கிறது என்றுகூட சொல்லலாம். ஆகவே இவைகளையெல்லாம் ஒன்று சேர்த்துப் பாகுபாடு இல்லாமல், கவிதை என்று குறிக்கலாமா?

எதுகை, மோனை முதலிய யாப்பிலக்கண சுத்தியுடன் இருப்பதே கவிதை என்று இன்னும் சிலர் சொல்வார்கள். யாப்பிலக்கணத்துக்குட்பட்டு ஒவ்வொரு பாஷையிலும் எத்தனையோ புஸ்தகங்கள் வெளிவந்திருக்கின்றன. அவைகளில் சிலவற்றைப் படித்தால் பல் உடைந்துவிடும். அவ்வளவு கஷ்டமாய் இருக்கும். அறிவுணர்ச்சியோ, இதய உணர்ச்சியோ அவற்றில் கொஞ்சமும் இருக்காது.

அவற்றை யாப்பிலக்கண அப்பியாசம் என்று சொல்லலாமே தவிர கவிதை என்று சொல்ல முடியாது.

ஆகவே கவிதையின் தன்மையை அறிந்து கொள்ள வார்த்தை அழகை மட்டும் கவனிக்காது வேறு குணங்களையும் ஆராய வேண்டும். உலகத்தில் எல்லோரும் உயர்ந்த கவிதை என ஒப்புக்கொள்ளும் காவியங்களை ஆராய்ந்து பார்த்தால், எல்லாவற்றிற்கும் பொதுவாக ஒரு குணம் தென்படும். அதை உணர்ச்சி என்று சொல்லலாம். 'காதல் உணர்ச்சி' 'இயற்கை உணர்ச்சி' அறிவு உணர்ச்சி' 'ஆத்ம உணர்ச்சி' இவற்றில் எதாவது ஒன்று பிரதானமாய் இருக்கும். நாம் ஒரு கவிதையைப் படிக்கும் போது உணர்ச்சிதான் நம் மனதையும் இதயத்தையும் கவர்ந்து விவரிக்க முடியாத ஒரு ரம்மியத்தை உண்டாக்குகிறது. இந்த உணர்ச்சியுடன் இசையழகும் இருந்தால் ரம்மியம் பல மடங்கு அதிகமாகிறது. இசையழகு மட்டும் இருந்தால் சத்தமாகப் படித்து செவியின்பத்தை அனுபவிக்க வேண்டும். ஆனல் உணர்ச்சி யிருந்தால் மனத்திற்குள் படித்தே அனுபவிக்கலாம்.

உணர்ச்சிக்கு அடுத்தபடியாக கவிதைக்கு இருக்கவேண்டிய குணம் புஷ்டி என்றுசொல்லலாம். ஒரு கவிதையில் இருக்கும் வார்த்தைகள் சாதாரண வார்த்தைகளாய் இருக்கலாம். ஆனல் அவைகளெல்லாம் கவிதையின் முறையில் ஒன்று சேரும்போது அவைகளுக்கு ஒரு தனி சக்தி ஏற்பட்டுவிடுகிறது. அவைகளுக்கு ஒரு புது சத்து நிறைந்த அர்த்தம் உண்டாகிறது. கவிதை மூலமாக ஒரு வரியில் சொல்லக்கூடிய விஷயத்தை வசனத்தில் சொல்ல பத்து வரிகள்கூட எழுத வேண்டியிருக்கலாம். கவிதையின் இந்தத் தன்மையைத் தான் புஷ்டி என்று சொல்வது. நல்ல கவிதைகளில் எல்லாம் புஷ்டி நிறைந்திருக்கும்.

நம் வாழ்க்கையில் நெருக்கடியான சமயங்களில் நம் மனத்தில் எத்தனையோ உருவற்ற சிந்தனைகளும் ஒலியற்ற எண்ணங்களும் தோன்றும். இந்த எண்ணங்களையும், சிந்தனைகளையும் வெளியில் எடுத்துச் சொல்ல நமக்கு வார்த்தைகள் வராது. ஆனல் ஒரு கவிதையைப் படிக்கும்போது, "நானும் ஒரு கவியாய் இருந்தால் என் எண்ணங்களை இதேவார்த்தைகளினல் தான் சொல்லியிருப்பேன்." என்று நினைப்போம். அம்மாதிரி நம் இதயத்தில் தோன்றும். ஆனல் நம்மால் வெளியில் சொல்ல முடியாத, ஆழ்ந்த எண்ணங்களை வெளியிடுவதும் கவிதையின் தன்மைகளில் ஒன்ருகும்.

இன்னும் எத்தனையோ குணங்கள் தனிப்பட்ட கவிதைகளில் இருந்தாலும் உணர்ச்சியும் புஷ்டியும் தான் எல்லாக் கவிதைகளுக்கும் பொதுவானவை; பிரதானமானவை. அதேபோல, வசனத்துக்குத் தெளிவு, விளக்கம், என்

னும் தன்மைகளே முக்கியமானவை. இதனுல் வசனத்தில் உணர்ச்சியும் புஷ்டியும் இருக்கக் கூடாதென்றே, அல்லது கவிதையில் தெளிவு இருக்கக் கூடாதென்றே அர்த்தமல்ல.

கவிதையைப் பற்றிய மேற் கூறிய உண்மையை நாம் ஒப்புக் கொண்டால், வசன கவிதையைக் கவிதை என்று சொல்லலாமா கூடாதா, அது யாப்பிலக்கணக் கவிதையை விடத் தாழ்ந்ததா உயர்ந்ததா என்றுவரும் கேள்விகளுக்கு சுலபமாகப் பதில் சொல்லிவிடலாம். உணர்ச்சியும் புஷ்டியும் போதுமான அளவு இருந்து அதில் யாப்பிலக்கண சுத்தம் இல்லாவிட்டாலும் அதைக் கவிதை என்று ஒப்புக்கொள்ளலாம். ஆனுல் இசையழகு செவிக்கு இன்பமூட்டி மனத்தை மயக்கி உணர்ச்சிக்கு உதவி செய்கிறது. ஆனுல் வசன கவிதைக்கோ அந்த உதவி இல்லை. ஆகவே இசைக்கவிதையை விட வசன கவிதையில் உணர்ச்சியும் புஷ்டியும் அதிகமாய் இருந்தால்தான் அது உயர்ந்த கவிதையாய்த் திகழும். யாப்பிலக்கணம் சரியாய் இருந்தாலும் உணர்ச்சியும் புஷ்டியும் இல்லாவிட்டால் அது கவிதையாகாது. அதேமாதிரி வசனத்திலும் உணர்ச்சியும் புஷ்டியும் நிறைந்து இருந்தால் அதைக் கவிதை வசனம் என்று குறிப்பிடலாம்.

இதைப் பற்றி இனி சரித்திர வாயிலாக ஆராய்வோம்.

உலக ஆரம்பத்தில் மனிதன் வார்த்தைகளுக்குப் பதிலாக சித்திரங்களை உபயோகித்து வந்த காலத்தில் பேச்சுக்கு முன்னுல் பாட்டு தோன்றியது என்று நாம் யூகிக்கலாம். தனக்கு அர்த்த மாகாத ஒரு ஒலியைக் கேட்டால் அக்கால மனிதன் பயந்து திரும்பிப் பார்த்திருப்பான். ஆனுல் பிறகு அதைக் கவனித்திருக்கமாட்டான் அவ்வொலி காதுக்கு இனிமையாக இருந்தாலோ அதை உற்றுக் கேட்டு வெளியில் சொல்ல முடியாத சந்தோஷத்தை அடைந்திருப்பான். அதனுல்தான் ஒவ்வொரு தேசத்திலும் ஆதி காவியங்களெல்லாம் இசைக் கவிதைகளாக இயற்றப்பட்டன. வசன காவியங்கள் இந்த ஐநூறு வருடங்களுக்குள் ஏற்பட்டனவேயாகும். ஆதி கால மனிதர்கள் இசையின்பத்தைத்தான் கவனித்தார்கள். அறிவின்பம் அவர்களுக்கு தெரியவில்லை. இதில் அவர்களை குழந்தைகளுக்கு ஒப்பிடலாம். குழந்தைகளும் வசனத்தைவிட பாட்டுகளை சீக்கிரம் கற்றுக் கொள்கின்றன அல்லவா? அர்த்த மாகா விட்டால் கூட பாட்டுப் பாடுவதில் அவர்களுக்கு ஒரு தனி சந்தோஷம். அறிவுணர்ச்சி அனுபவ உணர்ச்சி இல்லாத ஆதிகால மனிதனும் ஏறக்குறைய அதே நிலைமையில் இருந்தான்.

ஆனுல் நாளாக ஆக, மரத்திலிருக்கும் கனிகளையும், வனத்திலிருக்கும் மிருகங்களையும் தின்று கொண்டு பிராந்தியம் பிராந்தியமாகச் சுற்றித் திரிவதை விட்டு விட்டு விவசாயம் செய்ய ஆரம்பித்தார்கள். பருவ காலங்கள் அவர்களுக்குத் தெரிய வந்தன. சுழலும் சக்கரம், கலப்பை, ராட்டினம் ஆகிய வாழ்க்கைக்கு அடிப்படையான எதுக்களைக் கண்டு பிடித்தார்கள். ஆடு, மாடு, குதிரை, நாய் முதலிய மிருகங்களை அடிமைப் படுத்திக் கிராமங்களில் வாழ்க்கை நடத்தலானுர்கள். காற்று, மேகம், மழை, நெருப்பு, இந்த இயற்கையின் சக்திகளைப்

பற்றி அவர்களுடைய அறிவு வளர்ந்தது. அவர்களுள் அறிவும், அனுபவமும் படைத்தவர்கள் தம் அறிவைப் பாட்டுகள் வாயிலாக மற்றவர்களுக்கு போதிக்கலானார்கள். முதலில் அவர்கள் இசை இன்பத்தை மட்டும் அனுபவித்தாலும் கூடிய சீக்கிரத்தில் அறிவையும் கிரகிக்கலானார்கள். இதைத்தான் நாம் புராதன காலம் என்று குறிப்பிடுகிறோம்.

கூடிய சீக்கிரத்தில் மனிதர்கள் இயற்கையின் சக்திகளான, நெருப்பு, கடல், காற்று, மழை ஆகியவற்றை வழிபடக் கற்றுக் கொண்டார்கள். தெரிந்ததைப் பார்க்கவும் தெரியாததைப் பற்றி கற்பனை செய்யவும் முயன்றார்கள். கடவுள், சுவர்க்கம், நரகம் என்பவைபற்றித் தெரிய ஆவலுடையவர்கள் ஆனார்கள். நன்மை, தீமை, பாவம், புண்ணியம், என்று தம் நடத்தையைப் பிரிக்கலானார்கள். அதன் மூலியமாக ஆத்ம விசாரணை ஆரம்பமாயிற்று. நாம் எங்கிருந்து வந்தோம்? மரணத்திற்குப் பிறகு எங்கு போகப்போகிறோம்? உலகத்தின் ஆரம்பம் எப்படி? முடிவு எப்படி? என்னும் பிரச்னைகளுக்கு பதில் தேடலானார்கள். இம்மாதிரியான விசாரணையின் மூலமாகத்தான் வேதாந்தக்கவிதை உண்டாயிற்று. இயற்கை பற்றியும், காதல், வீரம் இவற்றைப் பற்றியும் காவியங்கள் தோன்றின. பாமர மனிதர்களுக்கு செவியின்பத்தின் மூலமாகவே இவைகளைப் பற்றிச் சொல்லவேண்டியிருந்தது. ஆகையால் புராணங்களும் காவியங்களும் ஒவ்வொரு மொழியிலும் இசைக்கவிதை களாகவே இயற்றப்பட்டு வந்தன.

அக்காலத்தில் ஆடல் பாடல், அறிவு, ஆகிய மூன்றும் ஒரே கலையாகத் திகழ்ந்தன. அதாவது இம் மூன்றையும் தனித் தனியாக மனிதர்கள் அப்யசிக்க வில்லை. இன்றைக்கும் பழைய காலத்து நாட்டுப் பாடல்களை கிராமங்களில் இசையுடனும், கும்மி அல்லது கோலாட்டத்துடனும்தான் பாடுவார்கள். ஆனால் மனிதனுடைய அறிவு வளர்ச்சியடைய இவைகள் நாட்டியம், சங்கீதம், கவிதை என்று மூன்று கலைகளாகப் பிரிந்தன. பின்பு அறிவுணர்ச்சியும், ஆத்ம சோதனையும் கவிதையின் முக்கிய இயல்புகளாக ஏற்பட்டன.

ஆனால் மனிதன் இதிகாச காலத்துக்குப் பின்னால் தன் வர்ழ்க்கையை அதிகமாக மாற்றவில்லை. ஒரு மனிதனுக்கும் இன்னொரு மனிதனுக்கும் உள்ள உறவிலாவது, மனிதனுக்கும் அவன் சுற்றுப் புரங்களுக்கும் உள்ள உறவிலாவது, மனிதனுக்கும் சமூகத்துக்கும் உள்ள உறவிலாவது புரட்சிகரமான மாறுதல்கள் ஏற்படவில்லை. பொருளாதார நிலைமையிலும் அதிக மாறுதல்கள் ஏற்படவில்லை. யுத்தங்கள் நடக்கலாம், நாடுகள் கை மாறலாம். ஆனால் சமூகத்தில் மாறுதல்கள் உண்டாகவில்லை. முதலில் புதிதாகக் கண்ட உண்மைகளையும், அனுபவங்களையும் எடுத்துச் சொல்லச் சொல்ல கவிதைகளில் உணர்ச்சியும், புஷ்டியும் அதிகமாகிக் கொண்டே வந்தன. ஒவ்வொரு மொழியிலும் உலக காவியங்கள் தோன்றின. ஆனால் சமூகத்திலும் மாறுதல்கள் ஏற்படாமல், புதிய உண்மைகளையும் கண்டு பிடிக்காமல் பல நூற்றாண்டுகள் சென்றன. இயற்கை, காதல், வீரம், ஆத்ம விசாரணை, இவற்றைப் பற்றியெல்லாம், காளிதாசன், கம்பன் முதலியவர்கள்

சொல்லித் தீர்த்து விட்டார்கள். ஆகவே பிற்காலத்திய கவிகள் முந்திய கவிகள் சொன்ன அதே விஷயங்களைப் பற்றியும், எண்ணங்கள், சிந்தனைகளைப் பற்றியுமே பேச ஆரம்பித்தார்கள். அவர்களுக்குப் புது உண்மைகள் உதயமாகவில்லை. ஆகவே உணர்ச்சி புஷ்டி, ஆத்ம விசாரணை, இவைகளுக்குப் பதிலாக யாப்பிலக்கணத்தில் அதிக கவனம் செலுத்தலானார்கள். அவர்களுடைய கவிதைகளும் யாப்பிலக்கணச் சின்னங்களாக விளங்கின.

மெதுவாகச் சென்ற இரண்டு மூன்று நூற்றாண்டுகள் விஞ்ஞானம் தலையெடுத்து என்றும் மாறாது என்று நாம் நினைத்துவந்த சமூகத்தில் பெரிய புரட்சியை உண்டு பண்ணிவிட்டது. யந்திரப் புரட்சி ஏற்பட்டதிலிருந்து மனிதனின் வாழ்க்கை தினசரி மாறிக் கொண்டு வருகிறது. புதிய கொள்கைகளும், எண்ணங்களும் தினமும் வந்து கொண்டிருக்கின்றன. விஞ்ஞான மனப் பான்மையை அடிப்படையாகக் கொண்ட பல புதிய தத்துவங்கள் வெளிவருகின்றன. இந்தத் தத்துவங்களையும் கொள்கைகளையும், இவைகளினால் வாழ்க்கையில் ஏற்பட்டுவரும் மாறுதல்களையும் பற்றிச் சொல்ல புது முறைகளைக் கையாளவேண்டியிருக்கிறது. நாவல், சிறுகதை, நாடகம் என்னும் இலக்கியங்கள் மாதிரி வசன கவிதையும் இந்தப் புது முறைகளில் ஒன்றாகும். புதிய மாறுதல்கள் காட்டாறு பெருக்கெடுத்தாற்போல் புரண்டு வந்து கொண்டிருக்கும்போது அதை இலக்கணக் கட்டுப் பாடுகளுக்கு உட்படுத்துவது கஷ்டம். புரட்சிகரமான எண்ணங்களை யாப்பிலக்கண விதிகளுக்கு அடிமைப் படுத்தினால் உணர்ச்சி, ஆர்வம், குறைந்து விடும். இதனால் யாப்பிலக்கணத்தை அடியோடு புறக்கணிக்க வேண்டுமென்று அர்த்தமல்ல. யாப்பிலக்கணங்களுக்கு உட்பட்டு ஒரு உணர்ச்சியை உண்மையாக வெளிப்படுத்த முடியாவிட்டால் அதை வசன கவிதையாக வெளிப்படுத்தலாம்.

வசன கவிதையில் இசையின்பம் இல்லை என்று நாம் நினைக்கக் கூடாது. இன்று ஆங்கிலத்தில் வெளிவரும் வசன கவிதைகளைப் படித்தால் இந்த உண்மை நன்கு விளங்கும்.

கவிதைக்கும் வசனத்துக்கும் இடையில் ஒரு வரம்பு இருக்கிறதா? வசனம் எங்கு முடிகிறது? கவிதை எங்கு ஆரம்பிக்கிறது? இன்று இலக்கியம் இருக்கும் நிலையில், வசனம், கவிதை என்று பிரிப்பதைவிட, இசைக் கவிதை வசன கவிதை, கவிதை வசனம் என்று பிரிக்கவேண்டும். வரம்பு வசன கவிதைக்கும் கவிதை வசனத்துக்கும் மத்தியில் நிர்ணயிக்க முடியாத ஓரிடத்தில் இருப்பதாகச் சொல்லலாம். ஒரு இலக்கியத்தை நம்மிடம் காட்டி இது வசனமா? கவிதையா? என்று ஒருவர் கேட்டால், நம் இதய உணர்ச்சிதான் பதில் சொல்ல வேண்டும்.

★

புத்தக ஆராய்ச்சி

[ஞான சம்பந்தம் (6-வது ஆண்டு மலர்) தருமபுர ஆதீன வெளியீடு, தருமபுரம், மாயவரம்.]

சைவ சமய வளர்ச்சிக்காக தருமபுர ஆதீனத்தார் செய்து வரும் அரும்பணி பலரும் அறிந்தது. அந்த வகையில் 'ஞானசம்பந்தம்' என்ற பெயருடன் அவர்கள் ஒரு மாத வெளியீடும் நடத்தி வருகின்றார்கள், சொந்தமாக. அதன் 6-வது ஆண்டு மலர் சமீபத்தில் வெளியாகி இருக்கின்றது. வித்வான் வை. சுந்தரேச வாண்டையார், திருவையாறு ஓலோகமாதேவீச்சரத் திருக்கோவிலைப் பற்றிய ஒரு நல்ல ஆராய்ச்சிக் கட்டுரை எழுதியிருக்கிறார். கோவைக் கிழார் 'கந்தர் கலிவெண்பா' பற்றி ஆராய்ந்திருக்கிறார். மற்றும் பல சிவநேசச் செல்வர்களின் விஷயதானங்களும், ஆதீனத் தொடர்புடைய புகைப் படங்களும் மலரில் இடம் பெற்றிருக்கின்றன.

★

[சேரநாடு (மாதப் பத்திரிகை) ஆசிரியர்: வித்துவான் ஜி. சதானந்தம்; காரியாலயம்: நெம்மாரா, கொச்சின் ஸ்டேட்; விலை: 0—4—0.]

சேர, சோழ, பாண்டிய நாடுகள் மூன்றும் கலை, மொழி, பண்பாடு இவற்றை அடிப்படையாகக் கொண்டு இணைக்கப்பட வேண்டும் என்பதும், அவை மூன்றும் ஒன்றாகி ஒரு தமிழகம் ஆகவேண்டும் என்பதும் பலர் கண்ட, கண்டு வரும் ஆசைக் கனவு.

அந்த ஆசைக் கனவை நனவாக்கும் லக்ஷியத்துடன் வித்துவான் ஜி. சதானந்தத்தை ஆசிரியராகக் கொண்டு 'சேர நாடு' வெளிவந்திருக்கிறது. சேர நாட்டிற்கு நல்வரவு கூறி வரவேற்கிறோம். கொச்சி ராஜ்யத்தில் ஒரு நல்ல தமிழ்ப் பத்திரிகை இல்லாத குறையை 'சேர நாடு' நீக்கி விட்டது. அடுத்து வரும் இதழ்கள் இன்னும் சிறப்பாய் வெளிவரும் என்பது முதல் இதழிலேயே நன்கு தெரிகிறது.

★

[தொண்டன் (மாத வெளியீடு) ஆசிரியர்: கெ. ஆறுமுகநாவலர்; வெளியீடு: தொண்டன் காரியாலயம், நாகர் கோவில்; விலை: 0—8—0.]

தமிழ்ப் புலமை மிக்க அறிஞர்கள் பலரது அரிய விஷயதானங்களைத் தாங்கி தமிழ் உலகுக்கு, நல்ல முறையில் சமயச் சேவை செய்யக் கிளம்பியிருக்கிறான் 'தொண்டன்.' இறைபணி, இந்து சமய வளர்ச்சி இரண்டையும் தன் லக்ஷியமாகக் கொண்டிருக்கிறான் 'தொண்டன்.' 2வது இதழில் ஆ. முத்து சிவன் (பி. ஏ. ஹானர்ஸ்) வித்வான் ச. தண்டபாணி தேசிகர், வித்வான் மறை திருநாவுக்கரசு, பண்டித மு. முத்து வெங்கிடாசலமய்யர், கவிராஜ பண்டிதர் ரா. கனகரா

ஜையர் முதலியோர் வெவ்வேறு வகைப்பட்ட நல்ல சமயக்கட்டுரைகளை எழுதியிருக்கிறார்கள். நாமக்கல் கவிஞர் "தீண்டாமை ஒழிக" என்ற தலைப்பில் ஒரு கவிதை உதவியிருக்கிறார்.

★

[பஜனைப் பாடல்கள். வெளியிட்டவர்: சுவாமி நிஷ்காமானந்தர்; வெளியீடு: ஸ்ரீ ராமகிருஷ்ணமிஷன் வித்யாலயம், பெரிய நாய்க்கன் பாளையம், கோயமுத்தூர்; விலை: 0—12—0.]

ஸ்ரீ ராம கிருஷ்ண வித்யாலயத்தில் பிரதி வாரமும் மாணவர்கள் சேர்ந்து பஜனை செய்யும் பாடல்களைத் தொகுத்து 'பஜனைப் பாடல்கள்' என்ற தலைப்பில் வெளியிட்டிருக்கிறார்கள். தமிழ் நாட்டில் புகழ்பெற்ற பல் முக்கிய சாகித்ய கர்த்தாக்களின் பாடல்கள் இப்புத்தகத்தில் இடம் பெற்றிருக்கின்றன. 'பஜனை செய்பவர்களுக்கு மட்டுமின்றி. பக்திரசமான புதிய பாடல்களைத் தெரிந்து கொள்ள விரும்புபவர்களுக்கும்' இப் புத்தகம் பெரிதும் பயன்படும்.

★

[விமர்சனம் (பொங்கல் இதழ்) ஆசிரியர்: காண்டீபன்; வெளியீடு: விமர்சனம் காரியாலயம், சேலம்; விலை: 0—2—0.]

விமர்சனம், கேள்வி பதில், தொடர் கதை, திரைக்கதை, சினிமாச் செய்திகள் முதலிய ஒரு சினிமாப் பத்திரிகைக்கு இருந்து தீர வேண்டிய எல்லா விஷயங்களும் அடங்கியதாய், கவர்ச்சியான இருவர்ண மேலட்டைப் படத்துடன் வெளிவந்திருக்கிறது இப் பொங்கல் இதழ்.

★

[கந்தப்புராணத் திரட்டு: (யுத்த, தேவ, தக்ஷ காண்டங்கள்) தொகுத்தவர்: ரா. பி. சேதுப் பிள்ளை பி. ஏ., பி. எல்; பிரசுரம்: அல்லயன்ஸ் கம்பெனி; விலை: ரூ. 2—4—0.]

கந்த புராணத்தின் மூன்று முக்கிய காண்டங்களிலிருந்து ஏறக்குறைய 560 பாடல்களைத் திரட்டி, அந்தந்தப் பாடல்களுக்குக் கீழே விளக்கமாக அதன் பொழிப்புரைகளையும் தந்திருக்கிறார் தொகுப்பாளர் இந்தப் புத்தகத்தில். புராணப் பித்தர்களுக்கு ரொம்ப உபயோகமான புத்தகம்.

★

[புதுமைக்கவி பாரதியார்; ஆசிரியர்: தி. ஜ. ர. வெளியீடு: அல்லயன்ஸ் கம்பெனி; விலை: ரூ 1-0-0]

அமரகவி பாரதியாரைப் பற்றி அறிஞர் பலர் எழுதியிருக்கும் விஷயங்களை அடிப்படையாக வைத்துக் கொண்டு தமது சொந்தப் பாணியில் விறுவிறுப்பான நடையில் பாரதியாரின் வாழ்க்கை பற்றியும், அவரது கவிதையின் உயர்வு பற்றியும் அளந்து ஆனல் தெள்ளத் தெளியக் கூறுகிறார் தி. ஜ. ர. இந்தச் சின்னப் புத்தகத்தில்.

மேலே குறிப்பிட்டிருக்கும் இரண்டு புத்தகங்களும் அல்லயன்ஸ் கம்பெனி, மைலாப்பூர், சென்னை என்ற விலாசத்தில் கிடைக்கும்.

[சிவானந்தா (60வது பிறந்ததின மலர்) பிரசுரம்: அருள் நிலையம், ராமச்சந்திரபுரம், திருச்சி ஜில்லா; விலை: ரூ 1—8—0]

சுவாமி சிவானந்தரைப் பற்றி அவரது நண்பரும் சிஷ்யருமான யோகி ஸ்ரீ சத்தியார்க்கா எழுதியுள்ள சுவையான வாழ்க்கை வரலாறு இது. சிவானந்தாவின் சீடர்கள் சிலரது கட்டுரைகளும் இதில் இடம் பெற்றிருக்கின்றன. விலை அதிகம். இம் மாதிரிப் பிரசார புத்தகங்களுக்கு விலை அதிகம் வைப்பது தகாது; முறையும் அல்ல.

★

[இளம் பிறை. ஆசிரியர்: ஓமார்; பிரசுரம்: பால்ய முஸ்லிஸ் அசோசியேஷன், காரைக்கால்; விலை: ரூ. 0—8—0]

ஒரு முஸ்லிம் எழுத்தாளரை ஆசிரியராகக் கொண்ட இந்த 'இளம் பிறை'யில் ஹிந்து எழுத்தாளர் முஸ்லிம் எழுத்தாளர் என்ற வேற்றுமையின்றி கட்டுரை கதை, கவிதைகள் தாராளமான இடம் பெற்றிருக்கின்றன. சகோதரப் பத்திரிகைக்கு நல்வரவு கூறுகிறோம்.

★

[நாமக்கல் கவிஞர் நாவன்மை; ஆசிரியர்: திருவத்திபுரம் வித்துவான் மாவண்ணு தேவராசன்; பிரசுரம்: ஸ்ரீ லக்ஷ்மி நூல் பதிப்பகம், திருவத்திபுரம், (வ. ஆ.); விலை: ரூ. 1—0—0.]

நாமக்கல் கவிஞரின் நாவன்மையைப் பற்றி எழுத வந்த ஆசிரியர், அதை மட்டும் எழுதியிருந்தால் அது பொருத்தமாயும், நியாயமாயும் இருந்திருக்கும். ஆனல் அதை விட்டு அவர், கவிஞர் உதாரண புருஷர்களாய்க் குறிப்பிட்டிருப்பவர்களை யெல்லாம் திராவிடக் கண்கொண்டு பார்த்து அவர்கள் பார்ப்பனர் என்ற ஒரே ஒரு காரணத்திற்காக அவர்களை மட்டம் தட்டி எழுதுவது நேர்மையல்ல; அது சரியான விமரிசன முறையும் அல்ல. வாசகர்களை ஏமாற்றும் தலைப்புடையதும் மட்டக் காகிதத்தில் அச்சிட்டிருப்பதுமான இப்புத்தகத்திற்கு ஒரு ரூபாய் விலை ரொம்ப ரொம்ப அதிகம்.

★

[பாலைவனத்தில். ஆசிரியர்கள்: மணி சகோதரர்கள்; பிரசுரம்: விநியோக முறை வெளியீடு, ஏரிக் கரைத் தெரு, பழைய மாம்பலம், தியாகராய நகர், சென்னை; விலை: ரூ. 0—13—0.]

அரேபியப் போர் முனைக்குச் சென்ற ஒரு சிப்பாய் பாலைவனத்தின் நடுவே பசுஞ்சோலை போன்ற ஒரு பெண்ணைக் கண்டு காதல் கொள்கிருன். கடைசியில் காதல் கை நழுவிச் சென்று அவன் காதலி மற்ருெருவனின் மனைவியாகி விடுகிருள். இந்தக் கருத்தைக் கொண்டு எழுந்த சிறு நவீனம் இது.

★

[வீரர் சுபாஷ் ஆசிரியர்: சி. எஸ். வேணு, பிரசுரம்: வீனஸ் பிரசுரம், 57, அண்ணு பிள்ளை தெரு, சௌகார் பேட்டை, சென்னை.]

நேதாஜி சுபாஷ் போஸின் வாழ்கை, இ. தே. ரா. படை பற்றிய விபரம், ஆஜாத்ஹிந் பாங்க், செங்கோட்டை விசாரணை இவைகளைப் பற்றிச் சுருக்கமாகச் சொல்லுகிறது இந் நூல்.

"உமாபதி"

பாப்பா கதை:

கெட்டிக்காரி மீனா

[மஞ்சுளா]

ஒரே ஒரு அழகான காடு. அந்தக் காட்டில் ஒரே ஒரு அழகான குடிசை. அந்தக் குடிசையில் ஒரே ஒரு நல்ல பாப்பா. அந்தப் பாப்பாவுக்கு அதன் அப்பா மீனா என்று பெயர் வைத்தார். அம்மா மட்டும் பாப்பா என்றே செல்லமாகக் கூப்பிட்டு வந்தாள்.



மீனாவின் அப்பாவுக்கு, பக்கத்தில் ஒரு பூந்தோட்டம். பூப் பறிக்கவும், பழம் பறிக்கவும் போகும் போது மீனாவின் அம்மா தன் குழந்தையிடம், "கண்ணே, குடிசைக் கதவை நல்லாச் சாத்தி தாள் போட்டுக் கொள்ளு. நரி கிரி வந்து விடும். ஓநாய் கீநாய் வந்து விடும். பத்திரமாக இரு, கண்ணே" என்று சொல்லிச் செல்வது வழக்கம்.

ஒரு நாள் மீனாவின் அம்மா பூந்தோட்ம் போயிருக்கும் சந்தர்ப்பம் பார்த்து ஒரு புதர் ஓநாய் மெள்ள வந்தது. கிட்டத்தில் வந்து பார்க்கவும் குடிசை நன்றாகச் சாத்தியிருந்தது. குடிசைக் கதவை ஓநாய் தட்டிற்று. மீனா "நீ யார்?" என்று கேட்டாள். ஓநாய் பேசுமா? மெள்ள கையை (இல்லை காலைத்தான்) நீட்டிற்று. நீள நீள நகத்தைப் பார்த்து மீனா 'நீ என் அம்மா அல்ல. ஓநாயே உனக்கு செகப்பு நகம் இருக்கிறதிலிருந்தே நான் தெரிந்து கொண்டேன்' என்றாள். ஓநாய் ஒரே ஓட்டமாக ஓடிப் போய், முன் ஒரு காலத்திலே ஒரு சாய வியாபாரியைச் சாப்பிட்டபோது, மிச்சம் வைத்திருந்த சாயத்தை நகத்திற்குப் பூசிக்கொண்டு வந்தது. குடிசைக் கதவில் கையை விட்டது. மீனா 'சரி, நீ என் அம்மாவாக இருந்தால் பேசேன்' என்றாள்.

ஓநாய்தன் கடூர தொண்டையில் பேசக் கூடாது என்று ஓடிப்போய் முன் ஒரு காலத்திலே ஒருதேன் வியாபாரியை 'சுவாஹா' செய்த போது மிச்சம் இருந்த தேனைக் குடித்து விட்டு வந்தது. அப்போது குரலும் கொஞ்சம் மனிதக் குரல் மாதிரியே இருந்தது.

அந்தச் சமயத்தில் மீனாவின் அம்மா வந்து, தடி எடுத்து ஓநாயை இரண்டு மொத்து மொத்தவும் ஓநாய் ஓடியே போச்சு. மீனா சிரிசிரி என்று சிரித்தாள்.

மலர்கள்

'யுவபாரதி'

மன்னர் முடி மீதிருப்போம்
மாமணமும் செய்வோம்
மங்கையரின் கூந்தலுக்கு
மணத்தை மிகக் கொடுப்போம்

கன்னலும் புளிக்குமென்ன
கனிந்த தேனுங் கொடுப்போம்
கடவுள் பூசை பண்ணுவார்க்குக்
காலை மாலை பூப்போம்

நாடெலா மலங்கரிப்போம்
நல்ல முத்தந் தருவோம்
நங்கையரின் கூந்தலுக்கு
நல்ல பரிசாவோம்

பாட்டினிலே பொலிந் திருப்போம்
பனி நீருங் குடிப்போம்
பந்தலிலும் படர்ந் தடர்வோம்
பாடலிலும் வளர்வோம்

பிரிவு

(கு. ஸ்ரீமதி)

நிலைக் கண்ணாடியின் முன்னின்று தன்னை அழகு படுத்திக் கொண்டிருந்த சினிமா நடிகை ஸுலேகா ராணி, ரோஸ் பவுடரை தன் செழித்த கன்னங்களில் தடவியவாறே கண்ணாடியில் தோன்றின தன் பிரதி பிம்பத்தைக் கண்டு தனக்குத் தானே வியந்து கொண்டாள். வளைந்த புருவங்களின் கீழ், இரு கரு விழிகளின் அழகை அணை கோலிட்டாற் போல் அஞ்சனம் தீட்டியிருந்தது. நாகரீக வேலைப் பாடுடன் கூடிய, கழுத்திலணிந்திருந்த பவழ மாலையும், உதடுகளில் பூசியிருந்த சென்னிற "லிப்ஸ்டிக்" கும் போட்டியிட்டன. சிறிய வைரத்தோடுகளிலிருந்து 'பெண்டுலம்' போல் ஊசலாடிக் கொண்டிருந்த வட்டக் குழைகள் தோளைத் தொட்டுக் கொண்டிருந்தன. தனது கொடி போன்ற தேகத்தை சுற்றியிருந்த நீல "டிஷ்யூ" புடவையின் அகலக் கரையைச் சரிப்படுத்துகையில், வேலைக்காரப் பொன்னி அங்கு பிரசன்னமாகி, "அம்மா உங்களை யாரோ பார்க்கணும்னு வெகு நேரமாக காத்துக்கிட்டிருக்காங்க; 'அம்மா இப்போ உங்களை பாக்க மாட்டாங்க'ன்னு சொல்லிடட்டுங்களா?" என்று தானே ஒரு பதிலையும் நிர்ணயித்தாள். "சரி தான் எவனாவது ஒரு காலேஜ் மாணவன், தங்கள் காலேஜ் டிராமாவிற்கு அழைப்பிதழ் கொடுத்து செல்ல வந்திருப்பான். அல்லது ஏதாவது ஒரு "பூஷணிக்காய்" இரண்டு லக்ஷ ரூபாய் 'செக்' குடன் பழி கிடக்கும்" என்று தனது கவர்ச்சிகரமான தோற்றத்தை எண்ணிக் கொண்டே "இன்னும் அரை மணியில் ஸ்டூடியோவிற்குப் போக வேண்டும்; ஏதாவது சொல்லி அனுப்பித்து விடு" என்று கூறி, கை கடிகாரத்தைப் பார்த்து விட்டு, வேலைக்காரி கொடுத்த 'விசிட்டிங்' கார்டின் மேல் அலக்ஷ்யமாக ஒரு பார்வையை செலுத்தினாள்.

ஸி. எஸ். ராஜகோபாலன்
பி. எஸ். ஸி
உதவி ஆசிரியர் — "லேகா"

என்றதைப் படித்த ஸுலேகாவிற்கு 'சுரீர்' என்றது. 'அடி பொன்னி அந்த ஐயாவை இருக்கச் சொல்லு. வரேன்!" என்று படபடப்பாகச் சொல்லித் தன் 'ட்ரெஸ்ஸிங்' அறைக்கு விரைந்தாள். கடைசி முறையாக தன்னை 'டச்' செய்து கொண்டு ஓர் விலையுயர்ந்த காஷ்மீர் பட்டு ஷாலை போர்த்திக் கொண்டு வெளியே வந்தாள்.

வெல்வட் செருப்பின் மிருதுவான சப்தம், 'ட்ராயிங்' அறையிலமர்ந்து, மேஜை மீதிருந்த ஸுலேகாவின் ஒய்யார புகைப் படத்தை விழி வாங்காது பார்த்துக் கொண்டிருந்த ராஜுவை, தன்

பாலிழுத்தது. கழுத்தைச் சுற்றியிருந்த சால்வையின் ஒரு நுனி கீழே இரத்ன கம்பளத்தில் புரள தெய்வ கன்னிகை போன்று சோபாவில் 'ஜம்'மென உட்கார்ந்தாள். கழுத்தை தழுவிக் கிடந்த வைரமாலை, பிரகாசமான மின்சார வொளியில் நவரத்தினங்களை சிதறுவது போல் டால் அடிக்க அழகு தேவதையாய் அமர்ந்த ஸுலேகாவின் பவள அதரங்களில் தோன்றிய புன்னகை ஒரே ஒரு கணம் தான் வெளித் தெரிந்தது. ஒரு கணம் தேவ மாது போன்று தோற்ற மளித்த ஸுலேகா திடீரென முக பாவத்தை மாற்றிக் கொண்டு "என்ன வேண்டும் மிஸ்டர் ராஜகோபாலன்" என்று கடுமையாக கேட்டதற்கு, ராஜுவால் உடனே பதில் சொல்ல முடியாது போனது மட்டுமல்லாது, தன் மனைவி தன் பெயரை உச்சரிப்பதால் ஏற்பட்ட சிலிர்ப்பையும் வேறு சமாளித்துக் கொள்ள வேண்டியதாயிற்று!

"எவ்வளவு காலம் இப்படியே இருக்கப்போவதாய் உத்தேசம்?" என்ற ராஜுவின் கேள்வி ஸுலேகாவின் உள்ளத்துள் ஊடுருவிப் பாய்ந்தது. உடனே வெட்டி விடுகிறாப் போல் ஓர் பார்வையை ராஜுவின் மேல் வீசி, "அதைப் பற்றி உங்களுக்காவதென்ன? ஏன்! உங்கள் 'லேகா,வில் பிரசுரிக்கவா?" என்று அதிகப் பிரசங்கித்தனமாக பதில் கேள்வி போட்டாள். ஆனால், சில வருஷங்கள் முன் வரை கணவன் அன்பை எதிர் பார்த்து, அவனுக்கு அடங்கி வாழலாம் என்ற எண்ணம் கொண்டிருந்த ஸுலேகா இன்று சினிமா வானில் பிரகாசிக்கும் பிரபல நக்ஷத்திரம்; அவளுக்கு அவள் கணவன் மட்டும் தான் எம்மாத்திரம்?

"ஏதோ நடந்தது நடந்து விட்டது. இனியாவது ஒன்று சேர்ந்து வாழலாமே!" என்று ராஜு சகஜமாக ஓர் வெடி குண்டைத் தூக்கிப்போட்டான். எதிர்பாராத இக்கேள்வி ஸுலேகாவை ஆச்சரியத்தில் ஆழ்த்தி விட்டது. ஓர் அகம்பாவ பார்வையுடன் "பேஷ் வெகு நன்றாக இருக்கிறது! உம்மோடு நான் வந்து வாழ்வதாம். சுதந்திரக் கிளியாய் உல்லாசமாய் உலவி வரும் என்னை கூண்டிலடையச் சொல்லுகிறீரா?" என்று காண்போர் உள்ளத்தைக்கொள்ளை கொள்ளும் அக்கட்டழகி கேட்டாள். "ஏது திடீரென இப்புது எண்ணம்?" என்று ஒன்று மறியாதவள் போல் வினவிய, அப்பேதை மொழிகள் ராஜுவிற்கு ஓர் தைரியத்தை அளித்தது.

"உன் விதவையின் கண்ணீரைக் கண்டபின் என் மனம் ஒரு நிலையிலில்லை! எப்படியேனும் உன்னை அடைவது என்று தீர்மானம் செய்து விட்டேன்" என்று கூறினான்.

"இன்னும் ஒரு 'சுமங்கலியின் கண்ணீ'ரை காண நேர்ந்தால் அச்சுமங்கலியையும் அடையாமல் உங்கள் மனம் ஒரு நிலையிலிராது போலும்!" என்று ஏகத்தாளமாக திருப்பியடித்த ஸுலேகா பகபக வென்று சிரிப்பு வெள்ளத்தின் அணையை உடைத்து விட்டாள். ஸுலேகா விடுத்த சொல்லம்பினால், நெற்றியில் துளிர்த்த வியர்வை முத்துகளை தன் பட்டு குட்டையால் ஒற்றிக் கொண்டு, தன் பலவீனத்தை வெளிக்காட்டாது தப்பித்துக் கொண்டான். "நீ, என் மனைவி என்பதால் தானே இவ்வார்த்தைகளைச் சொல்ல எனக்கு துணி வேற்பட்டது" என்று

சிறிது கோபமும் கடுமையுமாக பதிலளித்தான்.

ஸுலேகாவின் முகத்தோற்றம் சற்று வெளிரிப்போன தாயினும்

தன்னைச் சமாளித்துக் கொண்டு இதுவரை புன்னகை கொள்ள மட்டுமே உபயோகப் படுத்தி வந்த தன் முல்லைப் பற்களை நறநற வென்று கடித்தாள். "ஆண்கள் எத்தனை மனைவிகளை வேண்டுமானாலும் மணந்து கொள்ளலாம்! அவர்களுக்கு மனைவிகளைத் தள்ளி வைக்கவும் உரிமையுண்டு!! அவ் 'வாழாவெட்டிகள்' வாழ்க்கையில் சுகம் என்பதை அறியாதாராய், இந்து மதத்தில் தலைநிமிர்ந்து வாழ முடியாத பேதையராய் நெல்லுக்குத்தியும், அவல் இடித்தும் காலம் தள்ள வேண்டியது. இந்தக் கடமையுணராக் கயவர் இன்னொருபண முடிச்சையும் பெண்ணையும் மணந்து கொள்ள வேண்டியது" என்று சீறி எழும் பெண் புலி போல் ஆக்ரோஷத்துடன் கூவினாள்.

சாந்தஸ்வரூபிணியாய் இதுவரையிருந்த ஸுலேகா ரணவீர பத்ர காளி அவதாரம் எடுப்பதைக் கண்ட ராஜு தடுமாறியவனாய் "எனக்குத் தெரியாமலே நடந்து விட்டது ஸுலேகா. ஆனால் எந்தத் தவறுக்கும் பிராயச்சித்தம் கிடையாதா?" என்றான் கெஞ்சும் குரலில்.

"பதிமூன்று வயதில் முதல் கல்யாணம்! முதல் மனைவி உயிரோடிருக்கையிலேயே, மூன்றாம் தெருவில் இரண்டாம் கல்யாணம் பதினெட்டு வயதில் செய்து கொண்டு 'தெரியாமலே நடந்து விட்டது' என்று சொல்ல உமக்கு வெட்கமில்லையா? ஐயோ பாவம் அப்போ ஒன்றும் தெரியாத குழந்தைதான்" என்றாள் கேலியாக.

கோபத்தின் ரேகை முகத்தில் பட 'ஏதோ என் தாய் தந்தையர் செய்து விட்டார்கள்......" என்று மென்று விழுங்கிய ராஜுவை எரெடுத்தும் பாராது சாவிகொடுத்திருக்கும் கிராமபோன் மாதிரி பேசிக்கொண்டே போனாள்.

"பிதுர்வாக்கிய பரிலானம் செய்ய மனைவியைத் தள்ளிவைத்து மறுமணம் புரிந்து கொள்ள வேண்டியது! அப்படித்தானே? விதவையின் பெண் என்று அனுதாபமற்று மூவாயிரம் ரூபாயுடன் வந்தால்தான் வீட்டிற்குள் நுழையவேண்டும் இல்லையேல் வீட்டு வாசற்படி ஏறக்கூடாது என்றனரே உம் தாய்தந்தையர்; இப்போது, நான் தூய்மைப் பெண்ணாக இருந்த போதிலும், "சினிமாக்காரி" என்ற பட்டம் சூட்டப்பெற்ற என்னை அடைய விரும்புவதன் காரணம்? என் பணமா? புகழா? செல்வாக்கா? எப்படியோ இத்தனை வருஷங்களை கழித்துவிட்டேன். இன்னும் அதிகமானால் பத்து வருஷங்கள் தான், ஆம் பத்தே வருஷங்கள் தான்! திரையில் ரீங்காரம் செய்து பறந்துவரும் பட்டுப் பூச்சி, பின்னர் சிறகொடிந்து ஓய்ந்துவிடும். ஆனால் உம்முடைய இரண்டாம் மனைவியும், நானும் சேர்ந்து வாழ்வதென்பது என்றும் இயலாது. இது ஒருவருக்கும் பிடிக்கவும் பிடிக்காது" என்று ஆத்திரமாகக் கத்தினாள்.

திக்பிரமை யடைந்திருந்த ராஜு மெதுவாக தலையைத்தூக்கி ஸுலேகாவை நோக்கினான். கொவ்வைக் கனிபோல் சிவந்திருந்த அவளது அழகிய கண்கள், உள்ளத்தில் சினம் பொங்குவதைக் காட்டிற்று. "ஒரு காலத்தில் என் அன்புப் பொய்கையில்பூத்த காதல் மலரை தங்களுக்கு அர்ப்பணிக்க விழைந்தேன். ஆனால் மலரின் மென்மையை அறியாது கசக்கித்

தூர எறியும் பாவிகள் கூட்டத்தில் நீர் ஒருவர்! ஆகையால் உடைந்த கண்ணாடி ஒட்டுகையிலே தான் என் உடைந்த உள்ளமும் ஒன்று சேரும். அது மட்டுமல்ல எந்த பெண்ணும் தன் சக்களத்தியுடன் வாழ விரும்பாள்'' என்றாள் சீற்றம் தாங்காதவளாய்.

''உன்னோடு வாழ என் இரண்டாம் மனைவிக்கு சம்மதமில்லாது போகாது......'' என்று ராஜு ஆரம்பித்தான்.

''என்ன சொன்னீர்கள்? நீங்கள் என் வாழ்க்கையையே குட்டிச் சுவராக்கியது போலவா நானும் இன்னொரு பெண்ணின் வாழ்க்கையில் குறுக்கிட்டு அவள் அமைதியைத் தகர்ப்பது? அவளது உள்ளக் குமுறல் என்னை எழேழு பிறவிக்கும் விடாது சுற்றுமே! மேலும் பெண்கள் தயை நிரம்பிய மனம் படைத்தவர்கள். உள்ள மற்றவர்கள் இந்த ஆண்வர்க்கம் தான்'' என்றாள் பளிச்சென்று.

''அத்தகைய பெண் ஜென்மத்தைச் சேர்ந்த நீ, என்னிடத்து இரக்க உணர்ச்சியைக் காண்பித்து என்னை மன்னிக்காமலிருப்பது எனக்குப் பெரும் வியப்பைத் தருகிறது'' என்றான் மெல்லிய குரலில். ஆனல் ராஜுவின் கண்களை நேராக சந்திக்க இயலாதவளாக தன் கண் வீச்சை வேறு புறம் திருப்பிக் கொண்டாள். நிலைமையை சமாளித்துக் கொண்டவனாய் ராஜு ''உனக்கு ஏற்படும் உள்ளக் குமுறல் எங்களை மட்டும் பாதிக்காதா? அதனால் தான் உன்னை ஏற்றுக் கொள்ள முன் வந்ததே!'' என்று துணிவோடு, வெகு தாராளமாய்ச் சொன்னான்.

''ஏற்றுக் கொள்ளவா வந்தீர்கள்? அணையிடப்பட்ட நீர் ஒரு நிலைவரைதான் கட்டுப் பட்டிருக்கும். பின் உடைத்துக் கொண்டு வெளியேறி, தேக்கத்தையே வற்றச் செய்துவிடும். என்னுடைய அன்புத் தேக்கமும் — ஒரு காலத்திலிருந்தது- இப்போது அந்நிலையிலேயே உள்ளது. ஒருசமயம் ஊற்று நீர்போல் அகங்கார உணர்ச்சி தோன்றினாலும் அதைத் தவிர்த்துக்கொள்ள இதோ மருந்து இருக்கிறது'' என்று ஆத்திரத்துடன் கூறி, அருகிலிருந்த மேஜை மீதிருந்த 'பிராந்தி' புட்டியை எடுத்து ஒரு 'பெக்' குடித்துவிட்டு, ராஜு விற்கும் ஊற்றி வைத்தாள்! உணர்ச்சிப் பெருக்கால் அவள் விழியோரத்தில் துளிர்த்த நீர்த்துளி, கரைந்த மையுடன் கலந்து வெண்ணிற மேஜை விரிப்பின் மீது வீழ்ந்து கறைப் படுத்தியது.

★

ஸுலேகாவின் உண்மைப் பெயர் அலமேலு. அவளது ஏழாம் வயதில் அவளுக்கும் ராஜகோபாலனுக்கும் 'பொம்மைக் கல்யாணம்' நடந்தேறியது. அவளது பதிமூன்றாம் வயதில் அவளை புக்ககத்திற்கனுப்ப விரும்பி ஏற்பாடுகள் செய்தாள் அவள்தாய். மூவாயிரம் ரூபாயுடன் வந்தால் தான் அழைத்துக் கொள்ள முடியும் என்று முடிவாக, மூவாயிரம் சல்லிக்காசுகூட இல்லாத அலமேலுவின் தாயிடம் கூறிவிட்டு, தன் மகனுக்கு வேறு பெண்ணை செய்து வைத்து விடப்போவதாக பயமுறுத்தினாள் சம்பந்தியம்மா. மூன்று மாதத்திற்கெல்லாம் தன் மகனுக்கு ஒரு பெண்ணுடன் மூவாயிரம் ரூபாயையும் வாங்கி வைத்துவிட்டுத்தான் மறுவேலை பார்த்தாள்!

சில வருஷங்கள் கழித்து, சிறு வயதில் வீட்டில் சண்டை போட்

டுக்கொண்டு ரங்கூனுக்கு ஓடிப் போய்விட்ட அலமேலுவின் மாமா, வியாபாரத்தில் ஆயிரக் கணக்கில் சம்பாதித்துக் கொண்டு ஊர் திரும்பினர். தங்கை மகளுக் கேற்பட்ட துன்பத்தைத் தீர்த்து உதவி புரிய முன் வந்த தன்மாமா விடம், ராஜுவை மீண்டும் உள்ளக் கோயிலில் பிரதிஷ்டை செய்து கொள்ள விரும்பாத அலமேலு, தான் புக்ககம் சென்று வாழ முடியாது என்று உறுதியாகக் கூறிவிட்டாள். ஏற்கனவே மனம் நொந்து போயிருந்த அவள் தாய், தன் அடங்காப் பிடாரிப் பெண்ணின் பிற்கால வாழ்வை எண்ணி உருகி மறைந்தாள். பிறகு சென்னையில் மாமா நிர்மாணித்த ஸ்டுடியோ ஒன்றில். அலமேலு நடிகையாகச் சேர்ந்தாள். முதற் படமே அவளைப் புகழ் ஏணியி லேற்றி விட்டது. அடுத்துவந்தவை அவளை பிரபல நக்ஷத்திரமாக ஜ்வலிக்கச் செய்தன!

★

கடந்த வற்றை நினைத்துக் கொண்டு பிராந்தி மயக்கத்திலாழ்ந்து கிடந்த ஸுலேகாவை, கடிகாரத்தின் மணி யோசை அவள் ஒருமணி நேரமாக அவ்வறையில் இருப்பதைஅறிவித்தது. தூக்கி வாரிப் போட்டவளாய் எழுந்திருந்தாள்; இதுகாறும் எண்ணக்கடலில் அலைபாய்ந்து கொண்டிருந்த ராஜுவிடம் "நீங்கள் போகலாம்" என்று அதிகாரக் குரலில் சொல்லிவிட்டு அவ்வறையை விட்டு நீங்கலானள்.

"ஹும், உன்முடிவு?" என்று ராஜு நிமிர்ந்து உட்கார்ந்து கேட்டான்.

"அதுவா? மீண்டும் உம்மோடு வந்து பந்த விலங்கைப் பூட்டிக் கொள்ள நான் முன்வரவில்லை... இப்போது, உங்களுக்கு என் மீது அன்பு மேலிட்டு என்னைச் சுற்ற வில்லை என்பதும் எனக்குத் தெரியும். எல்லாம் பணத்தாசை பிடித்தே வட்டமிடுகிறீர்கள்...... சரி இன்னும் என்ன? நீங்கள் போகலாம்" என்ருள் கடூரமாக.

"உன்னிடம் பிச்சைக் காரனைப் போல் அன்புப் பிச்சை யாசிக்கிறேன்; நீ என்னைப் புறக்கணிக்கிருய்!" என்று உறுமினன்.

"போதும் போதும், உம்முடைய பசப்பு வார்த்தைகள்! நீங்கள் இப்போது போகிறீர்களா? அல்லது 'ப்யூனை'க் கூப்பிடட்டுமா?" என்று கத்தினுள் ஸுலேகா.

ஸுலேகா தொடுத்த சொல்லம்புகளால் தாக்கப் பட்டு ராஜு திணறிப்போய் எழுந்து நின்று கொண்டு, "நீ ப்யூனைக் கூப்பிடும் வரை இங்கு நிற்க விரும்பவில்லை! ஆனல் ஒன்றுமட்டும் அறிவிக்க அவகாசம் கொடு... எப்படியும் ஆபீஸ் பணம் இருபதாயிரம் ரூபாய்களை திருடியதற்காக ஜெயில் வாசம் கிடைக்கத்தான் போகிறது! நான் திருடன், திருடன் தான். ஆனல் அதோடு, ஸுலேகா ராணி, உங்கள் பெயரும் கொட்டை கொட்டையான அச்சில், "பிரபல நடிகை ஸுலேகாராணியின் (மாஜி) கணவர் ராஜகோபாலன் கைது செய்யப்பட்டு விட்டார்" என்று தலைப்புகள் வரும் போது நீங்கள் 'ப்யூனை' அழைக்கும் ஜோரைப் பார்க்க வேண்டும்!" என்று படபடப்பாகக் கூறிவிட்டு வெளியேறினன் ராஜகோபாலன்.

ஸுலேகாவின் முகம் வெளுத்து விட்டது. இடியுண்ட நாகம் போல் சாய்ந்து விட்டாள். அவன் போய் விட்டான். ஆனல் கடைசி

யாக அவன் சொல்லிச் சென்ற சொற்களும் பார்த்த கடூரமான பார்வையும், ஒலித்துக் கொண்டும், தோன்றிக் கொண்டுமிருந்தன. கண்களினின்றும் நீர் பிரவகிக்க அவன் சென்ற திசையையே நோக்கினாள். அவள் இருதயத்தை ஓர் பாறாங்கல் அழுத்துவது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது.

ஒரு வாரம் கழித்து ராஜுவிற்கு ஒரு செக்கும் தபாலும் வந்தன. கடிதத்தைப் படித்தான்:

சில வருஷங்களுக்கு முன் நம்மை ஒன்று சேர்க்க மூவாயிரம் ரூபாய் தேவையாயிருந்தது. இப்போது முப்பதினாயிரமாகக் கொடுத்து உமது பந்தத்தினின்றும் என்றென்றைக்கும் பிரிந்து விடுகிறேன்.

இப்படிக்கு,
அலமேலு (ஸுலேகாராணி)

★

இருளில் ஒளி

இடம்: *யுத்தகால ரயில் வண்டிப் பிரயாணம்*

பாத்திரங்கள்: ஜர்மன் அதிகாரி, ருமேனிய அதிகாரி, ஒரு கிழவி, ஒரு இளம் பெண்.

ரயில் வண்டி ஒரு குகை வழியாகப் போன போது, முத்தத்தின் ஒலியும், பளீரென்ற அடியும் கேட்டது.

கிழவி நினைத்தாள்: ரொம்பவும் தைரியசாலி இந்த வாலிபப் பெண்.

குமரி நினைத்தாள்: போயும் போயும் கிழவியா இந்த ஜர்மானியனுக்குக் கிடைத்தாள்! என்னை மறந்தானே?

ஜர்மானியன் நினைத்தான்: ருமேனியன் பலே ஆள். முத்தம் அவனுக்கும், அடி எனக்கும் கிடைத்தது.

ருமேனியன் நினைத்தான்: நான் புத்திசாலி, நானே என் புறங்கையை முத்தமிட்டு ஜர்மானியனை செவினியில் அடித்தேன்.

ரீடேர்ஸ் டைஜஸ்ட்

இது நிஜமா?

(கோமதி சுவமிநாதன்)

காலசக்கரத்தின் வேகத்திற்கு அபூர்வமான மாறுதல்களை ஏற்படுத்தும் சக்தி இருக்கிறது என்பதை நான் அப்போது நிதர்சனமாகக் கண்டேன். காய்ந்து போன மாங்கொட்டையிலிருந்து பச்சைப் பசேரென்ற மாந்துளிரைக் காண்பிக்கும் கண்கட்டி வித்தைக்காரன் போல காலம் என்ற மாந்திரீகன் சில வருஷங்களுக்குள் எங்கள் ஊரையே மாற்றியிருந்தான். ஐந்து வருஷங்களாக இடைவிடாத யுத்த சேவையில் ஈடுபட்டிருந்த நான் மறுபடியும் ஊருக்குத் திரும்பியபோது பாண்டவர்களுக்காக மயன் சிருஷ்டித்த மாளிகையில் துரியோதனன் பட்டபாட்டைத்தான் அனுபவித்தேன்.

நான் யுத்த சேவையில் சேர்ந்து ஐந்துமுழு வருஷங்கள் ஆய்விட்டன. சேர்ந்த புதிதிலேயே எகிப்திய பாலைவனத்திற்கு அனுப்பப்பட்டு விட்டேன். அப்படியே அங்கிருந்து ஐரோப்பிய போர்க்களத்திற்குப் போய்விட்ட படியால் இடையில் நான் விடுமுறையே எடுத்துக்கொள்ளவில்லை. நிரந்தரமாக "வீட்டிற்குப்போ" என்று சொல்லிய பிறகுதான் நான் வீடு திரும்பினேன். என்ன ஆச்சரியம்! எங்கள் தெருவே எனக்கு அடையாளம் புரியவில்லை! அத்தனை மாறுதல்கள்! அன்று மாலையே பல்வேறு தெருக்களில் உள்ள என் நண்பர்களைப் பார்க்கப் புறப்பட்டேன்.

ரதவீதியில் நுழைந்ததுமே எனக்கு ஓர் ஏமாற்றம் காத்திருந்தது. ரத வீதி முதல் வீட்டில்தான் டாக்டர் ரகுபதி முன்பு குடியிருந்தார். அவர் எனக்கு மிகவும் வேண்டியவர். 'டாக்டர் ரகுபதி எம். பி. பி. எஸ்' என்று கொட்டை கொட்டையாய் எழுதப்பட்ட போர்டு அங்கு மாட்டப்பட்டிருக்கும். ஆனால் இன்று கண்களைத் துடைத்துக் கொண்டு பார்த்தேன். அந்த போர்டைக் காணோம். அந்த வீடுகூட சற்று மாற்றிக் கட்டப்பட்டிருந்தது போலிருந்தது. பக்கத்தில் போய்ப் பார்த்தேன். தொப்பி அணிந்த இஸ்லாமிய கனவான் ஒருவர் உட்கார்ந்திருந்தார்.

"அடடா, டாக்டர் ரகுபதி கூடவா இந்த ஊரைவிட்டுப் போய் விட்டார்" என்று நினைத்துக்கொண்டு நடக்க ஆரம்பித்தேன். நான் மனதில் நினைத்துக் கொண்டது, என்னை அறியாமலேயே வார்த்தைகள் ரூபத்தில் வெளிப்பட்டிருக்க வேண்டும். அப்பொழுதுதான் என் பின்னால் வந்து கொண்டிருந்த ஆசாமி ஒருவன் 'சார்! டாக்டர் ரகுபதியையா பாக்கறீங்க! அது பெரிய கதையல்லங்களா!" என்றான். அந்த நபரை ஏற இறங்கப் பார்த்தேன். வாரி விடாத தலை. முழங்கை ஷர்ட். அவன் குரலிலிருந்து

அவன் வார்த்தைகளில் கொஞ்சம் உண்மை இருப்பதுபோல் தோன்றியது. "என்னப்பா! அவர் வீடு மாத்தி விட்டாரா? இப்போது எங்கே இருக்கிறார்?" என்றேன் ஆவலுடன். அந்த ஆசாமி ஓர் "அவுட்" சிரிப்புச் சிரித்தான்.

அந்த சிரிப்பு அடங்க ஐந்து நிமிஷங்கள் ஆயின. "இப்படியே நேராக வடக்கே போனால் அவரை பத்ரீநாராயணத்திலாவது கைலாச பர்வதத்திலாவது பார்க்கலாம், பார்க்கலாம்" என்று ஆரம்பித்தவன் மறுபடியும் எழுந்த சிரிப்பை அடக்கிக் கொண்டு "அது பெரிய கதை. உங்களுக்குத் தெரிய வேண்டுமா என்ன?" என்று கேட்டுக் கொண்டே புறப்பட ஆரம்பித்தான். அவன் பேச்சில் எனக்கு ஸ்வாரஸ்யம் ஏற்பட்டது. டாக்டர் ரகுபதி ஹிமயமலையை நோக்கிப் போய் விட்டார் என்ற சமாசாரமும், எனக்கு அதிசயமாகத்தோன்றிற்று. அவனைக்கூப்பிட்டு நிறுத்தினேன். "அந்தக் கதையைத்தான் சொல்லேன்" என்று சொல்லி அவனை அழைத்துக் கொண்டு பக்கத்திலுள்ள ஹோட்டலில் நுழைந்தேன். இரண்டு ஜாங்கிரிகளை உள்ளே தள்ளிய பிறகு அவன் ஆரம்பித்தான்.

நான் சொல்லப் போவது சுமார் நான்கு வருஷங்களுக்கு முன் நடந்தது. அப்போது டாக்டர் ரகுபதிக்கு அமோகமான பிராக்டீஸ். உயிர் போன பிறகு கூட அதைத் திருப்பி வரவழைக்கும் கைராசி உள்ளவர் என்று அவருக்குப் பெயர் ஏற்பட்டது. தாராளமான ஸ்வபாவமும் இரக்கப்படும் தன்மையும் அவரிடம் நிரம்பி இருந்தன. ஏழைகளிடம் பணமே வாங்கமாட்டார். ஐஸ்வர்ய வந்தனை அவரிடம் எந்த விதமான துர்ப்பழக்கமும் கிடையவே கிடையாது.

ஒரு நாள் அவர் பக்கத்து ஊருக்கு ஓர் அவசர கேஸ் நிமித்தம் தன் காரில் போய் விட்டு இரவில் திரும்பும் போது நடுக் காட்டில் ஓர் மனித உருவம் பாதையில் அலங்கோலமாக வீழ்ந்து கிடப்பதைப் பார்த்தாராம். பக்கத்தில் போய்ப் பார்த்ததில் சுமார் இருபது வயதுள்ள ஓர் வாலிப ஸ்திரீ சோர்ந்து பிரஞ்ஞையற்றுக் கிடந்தாளாம். அவளை அப்படியே காரில் எடுத்துப் போட்டுக் கொண்டு தன் வீட்டிற்குக் கொண்டு வந்து சிகிச்சை செய்வித்து பிரக்ஞை வரவழைத்தாராம் அவர். பிச்சைக்காரி அவள்! பசியால் மயக்கமடைந்து வீழ்ந்திருக்கிறாள். அனாதை!

அந்தப் பெண்மேல் குழந்தை குட்டி இல்லாத டாக்டருக்கு ஓர் பாசம் ஏற்பட்டது. குலம் கோத்திரம் தெரியாத அந்தப் பெண்ணை தன் சொந்த மகள் போல் வளர்க்க ஆரம்பித்தார். இயற்கையிலேயே கட்டுமஸ்தான தேகமும் கவர்ச்சிகரமான தோற்றத்தையும் உடைய அந்த அனாதைப் பெண் அவர் போஷணையில் அப்சரசாக மாறி விட்டாள். அவளைக் கோகிலா என்று பெயரிட்டு அழைத்தார் டாக்டர் ரகுபதி. குயில் அவள் குரலைக் கேட்டு வெட்கும். அவள் கானம் கந்தர்வ கானம் போலிருந்தது. ஊரெல்லாம் கோகிலாவின் அழகைப் பற்றியும் குரலைப் பற்றியும் பேச்சாக இருந்தது. டாக்டருக்கு பூரிப்புத்தாங்க முடியவில்லை. கோகிலாவிற்கென்றே தனியாக ஓர் கார் வாங்கிக் கொடுத்தார். அவர் மனைவியும் கோகிலாவை சொந்தப் பெண்ணைப் போல் வாத்

ஸல்யத்துடன் வளர்த்து வந்தாள். அந்த அனுதைப் பெண்ணிற்கு அடித்த குருட்டு அதிருஷ்டத்தைப் பற்றி பொருமைப் பட்டவர்களும் உண்டு.

டாக்டர் ரகுபதியின் மனதைக் கலக்க வந்து சேர்ந்தான் டைரக்டர் கோவிந்த ராஜன். வடநாட்டிலே ஆங்காங்கு கிடைத்த அரைகுறை அனுபவங்களை அஸ்திவாரமாகக் கொண்டு தமிழ் நாட்டில் பிரபல தமிழ்ப் படம் ஒன்றைத் தயாரிக்க வேண்டும் என்ற திட்டத்துடன் ரகுபதியை அணுகினான். ரகுபதியை அணுகினதில் அவனுக்கு மற்றொரு முக்கிய நோக்கமும் உண்டு. கோகிலாவையே கதாநாயகியாக வைத்துக் கொண்டு படத்தை எடுத்தால் ரகுபதி உற்சாகத்துடன் மூலதனம் கொடுத்து உதவுவார். இதர பிரபல நக்ஷத்திரத்திற்கு கொடுக்கும் ரூபாயும் லாபம் என்று கருதினான்.

ஆகவே கழுதை தேய்ந்து கட்டெறும்புஆன கதை போல், முதலில் திடசித்தத்துடன், சினிமாத் துறையிலேயே ஈடுபட மாட்டேனென்று மறுத்த ரகுபதியை, நாளடைவில் வழிக்குக் கொண்டு வந்தான் கோவிந்த ராஜன். சென்னையிலுள்ள பிரபல ஸ்டுடியோ ஒன்றில் படப்பிடிப்பு ஆரம்பமாமாயிற்று. டாக்டர், குடும்பத்தையே சென்னைக்கு மாற்ற எண்ணினர். ஆனல் அதற்கு அவர் சம்சாரம் இசையவில்லை. ஆதலால் அவரும் கோகிலாவும் படப்பிடிப்பிற்காக அவ்வப்போது சென்னை போய் திரும்பினர்கள்.

கோவிந்த ராஜன் உற்சாகத்துடன் படப்பிடிப்பில் ஈடுபட்டான். அரைவாசிப் படம் எடுத்தாகி விட்டது. ஆங்காங்கு, கோகிலம் அபரிமிதமாக நடித்திருந்தாள். கோகிலாவை வசோபிக்க வைக்க மிகவும் சிரத்தை எடுத்துக் கொண்டான் கோவிந்த ராஜன். அந்தப் படம் வெளியாவதற்கு முன்னமேயே, அவளை விவாகம் செய்து கொண்டு விட வேண்டும் என்று பிரம்மச்சாரியாகிய அவன் திட்டம் போட்டதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை?

கோகிலா கோவிந்தராஜன் பிணைப்பில் கத்தியை வைத்தான் கதாநாயகனுக நடிக்கும் கந்தசாமி. கோகிலாவின் கண் விழிகளால் சித்தம் கலங்கி, உணர்ச்சியுடன் நடித்து டைரக்டரிடம் வாங்கிய நல்ல பெயரைத் தொலைத்துக்கொண்டு அவருடைய பொருமைக்குப் பாத்திரமானுன். அடுத்த படத்தில், ஏன் அந்தப் படத்திலேகூட கந்தசாமியை தலைகாட்ட விடாமல் அடிக்க வேண்டுமென்று கோவிந்த ராஜன் திட்டம்போட்டான். அவனை விகாரக் கோணங்களில் வைத்துப் படம் பிடிக்கச் செய்தான்.

கோகிலா கிடைத்தால் அடுத்த படமே தேவையில்லை என்று நினைத்தான் கந்தசாமி. அமோஹமான பணம் படைத்த டாக்டரின் அபிமான புத்திரி அல்லவா அவள்! கோகிலாவின் காதல் திராசின் முள் கந்தசாமி பக்கம் தான் சாய்ந்தது. இன்ன தேதியன்று ஸ்வாமி சன்னதியில் வந்து மாலை மாற்றிக் கொள்ளப் போகிருேமென்று திருநீர்மலை அர்ச்சகருக்குச் சொல்லி அனுப்பினுன் கந்தசாமி. இந்த சமாசாரத்தை சில ஐந்தாம் கால நபர்களால் தெரிந்து கொண்ட கோவிந்தராஜன் தீர்மானமான முடிவிற்கு வந்தான். கோகிலாவை இன்னொருவன் மணந்த பிறகு தான் சினிமா உலகில் டைரக்டராக இருந்து பிர

யோஜனமில்லை என்று கருதினன். ரகுபதிக்கு எங்கெந்த பாங்கில் எவ்வளவு எவ்வளவு தொகை இருக்கிறது என்று அவனுக்கு மனப்பாடமாகத் தெரியும். பாவம்! ரகுபதி தான் இதுவரை சம்பாதித்திருந்த ரூபாய் எல்லாவற்றையும் பத்திரமாக இருக்குமென்று நம்பி பாங்கிகளிலே போட்டிருந்தார். ஆனல் ஒரே விநாடியில், ரகுபதியைப் போல் ஐந்தாறுகையெழுத்துக்களை அவரிடமிருந்து அபேஸ் செய்து செக் புஸ்தகத்தில் வெகு லாவகமாகப் போட்டு, அஞ்சு பைசா நீங்கலாக மற்ற துகைகளை வாங்கினன் கோவிந்தராஜன். தான் அதுவரை கோகிலாவைக் கொண்டு எடுத்த படத்தின் 'நெகடிவ்'வையும் கையில் சுருட்டிக் கொண்டு, ஒரு நாள் ராத்திரி ஒருவருக்கும் தெரியாமல், தனக்கு முன்பு அனுபவம் அளித்த வடநாட்டிற்கு ரயில் ஏறி விட்டான்.

டாக்டர் ரகுபதிக்கு சமாசாரம் தெரிய வெகு நேரமாகவில்லை. ஏற்கனவே சுமார் ஒரு லக்ஷம் கோவிந்தராஜனை நம்பி சினிமாத் துறையில் முதல் போட்டிருந்தார். இப்போது மிஞ்சி இருந்த தொகையையும் அவன் அடித்துக் கொண்டு போய் விட்டான். டாக்டருக்கு ஏக்கம் பிடித்து விட்டது. ரிஷிகேசத்திற்குப் போய் தபஸ் பண்ணப் போகிறேனென்று கட்டின வேஷ்டியுடன் கையை வீசிக் கொண்டு போனவர் தான். அப்புறம் அவரைப் பற்றிய தகவலே இல்லை."

அவன் கதையைத் தடை செய்தான் பில்லைக் கொண்டு வைத்த ஹோட்டல் பையன். கிட்டத்தட்ட மூன்று ரூபாய் ஆயிருந்த அந்த பில்லைக் கையில் எடுத்துக் கொண்டேன். எதிரே இருந்த ஆசாமி புறப்படக் கிளம்பினான்.

"அப்புறம் கோகிலாவும் கந்தசாமியும் தங்கள் விவாகத்தை முடித்துக் கொண்டார்களா?" என்றேன்.

"ரகுபதியின் சொத்து அஞ்சு பைசாவுடன் நின்று விட்டது என்று தெரிந்ததும் கந்தசாமி கம்பி நீட்டி விட்டான். சொத்து சுகமில்லாத கோகிலாவைக் கல்யாணம் செய்து கொள்ள அவனுக்குப் பைத்தியமா என்ன?" என்று பதிலளித்தான் அந்த ஆசாமி.

"கோகிலா பிறக்கும் போதே சொத்து சுகத்துடன் பிறக்கவில்லையே! அவள் குரலும் அழகும் எங்கே போய் விடும். அவள் இப்போது பிரபல நக்ஷத்திரமாக விளங்குவாள் என்று நினைக்கிறேன்" என்று சொல்லி விட்டு பதிலுக்காக அவன் முகத்தைப் பார்த்தேன்.

"அது தான் சார் ரொம்ப சோகமான கட்டம். கந்தசாமி அவளைக் கைவிட்டதிலிருந்து அவளுக்கு ஒரு மாதிரி பிரமை ஏற்பட்டு விட்டது. டாக்டர் ரகுபதியை அடையுமுன் எந்த நிலைமையிலிருந்தாளோ அந்த நிலைமைக்கே திரும்பிப் போய் விட்டாள். அவளை நீங்கள் கூடப் பார்த்திருக்கலாம். இந்தப் பக்கத்து ரயில் வண்டிகளில் இனிமையாகப் பாடிக் கொண்டு ஒளியற்ற கண்களுடன் ஓர் பெண் சில்லறைப் பிச்சை கேட்பாளே அவள் தான் கோகிலா — மாஜி சினிமா ராணி. காதற் கடலில், கந்தசாமி என்னும் கட்டை மரத்தை நம்பி இறங்கி அவனல் கைவிடப்பட்ட காரிகை!"

ஓர் பெரிய பிரசங்கியின் பாணியில் அவன் தன் பேச்சை முடித்தான். நாங்கள் எழுந்து வெளியே வந்தோம். ஹோட்டல் பில்லைக் கொடுத்து விட்டுப் படி இறங்கினதும் 'நான் வருகிறேன் சார்' என்று சொல்லி தன் நன்றியறிதலை நயனங்கள் மூலம் தெரிவித்து புறப்பட ஆரம்பித்தான் அந்த கதை சொல்லிய பேர்வழி. டாக்டர் ரகுபதியின் அமைதியான வாழ்க்கை எப்படியோ நிலை குலைந்து போய் விட்டதே என்று நினைத்துக் கொண்டு கிளம்பிய நான், கடைசியாக என் மனதிலெழுந்த ஓர் சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்வதற்காக "மிஸ்டர், கோவிந்த ராஜனைப் பற்றி அப்புறம் ஏதாவது தகவல் கிடைத்ததா?" என்றேன். ஆரம்பத்தில் சிரித்தது போல் ஓர் அவுட் சிரிப்பு சிரித்தான் அந்த ஆசாமி. அது அடங்கினதும் "நான் தான் ஐயா சாக்ஷாத் கோவிந்தராஜன். இப்போது சினிமா உலகத்திற்கு கோவிந்தாப் போட்டுட்டு ராஜா மாதிரி ஊர் சுத்தரேன். நான் வருகிறேன்" என்று, என்னை பிரமிப்பிலேயே வைத்து விட்டு நகர்ந்தான் அந்த ஆசாமி.

அந்த பிரமிப்பில் ஆழ்ந்தே சற்று தூரம் நடந்திருப்பேன். மிகவும் பழக்கமான ஓர் குரல் என்னைக் கூப்பிடுவது போலிருந்தது. திரும்பிப் பார்த்தேன். அங்கு புதிதாகக் கட்டப்பட்டிருந்த ஓர் பங்களா முகப்பில் டாக்டர் ரகுபதி நின்று கொண்டிருந்தார். நான் திகைப்படைந்து சில வினாடிகள் நின்று விட்டேன். அவரைப் பற்றி சில நிமிஷங்களுக்கு முன்னால் நான் கேட்ட கதை, என் மனக் கண் முன் சினிமாப் படம் போல் ஓடத் துடங்கியது. மனதை ஓர் நிலைப்படுத்திக் கொண்டு அவரிடம் சென்றேன்.

வெகு நேரம் அவருடன், என் யுத்த அனுபவங்களை எல்லாம் பற்றிப் பேசிக் கொண்டிருந்து விட்டு புறப்படும் போது, "டாக்டர் சார்! உங்களுக்கு விரோதியாரேனும் இந்த ஊரில் இருக்கிறார்களா?" என்றேன் சிரித்துக் கொண்டே. "என்ன விஷயம்?" என்றார் டாக்டர் ரகுபதி. மாஜி டைரக்டர் என்று தன்னைச் சொல்லிக்கொண்ட கோவிந்தராஜன் கதையைச் சொன்னேன். பீறிட்டு எழும்பிய சிரிப்பை அடக்கிக் கொண்டு அவர் "ஓஹோஹோ! அந்தப் பயித்தியத்தைப் பார்த்து விட்டாயா? அந்த முழுக்கை ஷர்ட் பேர்வழி தானே! என்னிடம் கொஞ்ச நாள் வைத்தியம் செய்து கொண்டான். இப்போது கொஞ்சம் குணம் கூடக் கண்டிருக்கிறது. ஏதாவது உளறிக் கொண்டே இருப்பான்" என்றார். "அடேயப்பா! அவனு பயித்தியம்? என்ன அற்புதமான கற்பனை. அபூர்வமாகவல்லவா கதை சொன்னான், சினிமாத் துறையில் அடிபட்டு அனுபவப் பட்டவன் போல" என்றேன்.

"விஷயம் வேறொன்றும் இல்லை. அவனுக்கு சினிமாப் பார்க்கும் ஆசை அதிகம். ஒரு நாள் கூட்டத்தில் டிக்கட் வாங்கும் போது கலவரம் ஏற்பட்டு, போலீசாரின் லத்தி அடிகளுக்கு அவன் தலை இலக்காகியது. அதனால் அவனுக்கு மூளையே குழம்பி விட்டது. என்னிடம் வைத்தியத்திற்கு வந்தான். என்னால் பாதி தான் குணமாக்க முடிந்தது. இதையெல்லாம் ஒன்றாகக் குழப்பித்தான், என்னையும் சேர்த்து உன்னிடம் ஓர் சினிமாக் கதை சொல்லியிருக்

தந்தி: "வசந்தா" கோயமுத்தூர். போன்: நெ. 25

வசந்தா மில்ஸ்

லிமிடெட்.

ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்: சிங்காநல்லூர்.

மேனேஜிங் ஏஜண்ட்ஸ் அண்டு செக்ரடரீஸ்:

R. K. ஷண்முகம் செட்டி அண்டு பிரதர்ஸ்.

1934-ஞ் கள்ளிக்கோட்டையில், நடந்த கண்காட்சியில் நூல் ரகங்களுக்காக தங்க மெடல், நற்சாட்சிப் பத்திரம் பெற்றிருக்கிறோம்.

நூற்றல்:

20 நெ.முதல் 44 நெ. வரை, ஒத்தை, முறுக்கு, காரம் சலவை நூல் தயாரிக்கிறோம்.

எல்லா விதமான ஜவுளி ரகங்களும்:

வேஷ்டிகள், லாங்கிளாத்,
டவல், சர்ட்டிங்,
மல், சதர்,

தயாரிக்கிறோம்.

எங்களுடைய வி. 116 நெ. லாங்கிளாத் மார்க்கட்டில் பெயர் பெற்றது.

600 நெ. காடா தயாரிக்கும் உரிமை எங்களுடையதே.

போலிகளைக்கண்டு ஏமாறாதீர்கள்.

நம் நாட்டுத் தொழிலை ஆதரியுங்கள்.

மிகச்சிறந்த ஆயுர்வேத ஔஷதங்களும் சிகிச்சைகளும்!

ஒரு முறை விஜயம் செய்யுங்கள்

★

ஆர்யவைத்தியர்

பி. வி. ராமவாரியர்

ஆர்யவைத்ய பார்மசி

திருச்சி ரோடு : : கோயமுத்தூர்

★

கேட்லாக் இலவசமாக அனுப்பிவைக்கப்படும்.

THE VASANTHA DYEING WORKS,

181 Oppanakara Street
Coimbatore.

Phone No. 155. **Estd., 1921.**

Proprietor
C. M. Subramanya Chettiar
CONTRACTOR
To
THE VASANTHA MILLS, LIMITED.
SINGANALLUR.

For all kinds of dyeing border yarn and tie yarn etc., undertakes any variety of colour dyeing at reasonably cheap rates for dyeing all counts of yarn, cloth and sarees of 100 and 80 counts, wholesale orders received our due and special attention. A trial order will convince you the good quality of our work. Fastness and durability of colour guaranteed.

கிருன். இப்போது புரிந்ததா?" என்ருர் டாக்டர்.

பயித்தியமாக இருந்தாலும் அற்புதமான கற்பஞ சக்தி உள்ளவன் என்றது என் உள்ளம்.

"என்னுடைய புது பங்களா எப்படி இருக்கிறது? பார்த்தாயா? பழைய வீட்டை 'என் நண்பர் இப்ராகீம் சேட்டிற்கு விற்று விட்டேன்" என்று அவர் சொல்லித் தெரிந்துகொண்டேன். பயித்தியத்தின் கதையில் மனதைக் கொடுத்திருந்த நான் உள்ளே கோகிலா இருக்கிருள் என்ற பிரமையுடனேயே வெளியே வந்தேன்.

★

சிந்தனே

"சிந்தனே என்பது உலகத்திலே உள்ள வியாதிகளேயெல்லாம் விட ரொம்பப் பெரிய வியாதி மனிதர்களில் அநேகம் பேர் இந்த வியாதியினுல் மடிகிருர்கள். நல்ல வேளேயாக நம்முடைய இங்கிலாந்து தேசத்திலே இந்த வியாதிகள் இல்லே! நாம் உயர்ந்ததெல்லாம், நம்முடைய தேசீயக் களங்கத்திஞல்தான்! இந்த நம்முடைய ரொம்பப் பெரிய கலாசாரத்தை இப்படியே பரம்பரையாக வளர்த்துக் கொண்டு போகலாம்; ஆனுல் நான் பயப்படுவதெல்லாம், அதிகப் படிப்புப் படித்து விட்ட கோளாறு நம்மைச் சூழ்ந்து விட்டது என்பதுதான்! நம்மில் அறிவு என்பது கிஞ்சித்தும் இல்லாதவர்களெல்லாம் பிறர்க்குக் கற்றுக் கொடுக்கக் கிளம்பி விட்டார்கள்!"

— ஒரு அறிஞர்

197251

The Fashionable Furnishing Fabrics

DRESS TEXTILES

Ladies', Gents', Children's, Underwear, Sport Shirts etc.,

S. BEEMIAH CHETTY,

"WHITE SHOP" Coimbatore.

Telegrams :- "UMAYAL". Telephone :- 56 A.

UMAYAL WEAVING ESTT., LTD.,

Cannanore, N. Malabar.

Manufacturers of:- BEST "UMAYAL" HANDLOOM FABRICS.

BEDSPREADS
TABLE LINEN
FURNISHING FABRICS AND CURTAIN CLOTHS
DRESS MATERIALS FOR LADIES AND GENTS IN UP-TO-DATE DESIGNS AND CHARMING COLOURS
TURKISH TOWELS
BATH GLOVES
BATH MATS
MUFFLERS ETC.

ENQUIRIES EARNESTLY SOLICITED.

ENCOURAGE HANDLOOM INDUSTRY.

"UMAYAL" FABRICS
AN ASSET TO EVERY HOME
EVERYTHING MADE TO ORDERS
POPULAR FABRICS
THROUGHOUT INDIA AND CEYLON.

Distributors for Mysore State :-
SRI UMAYAL STORES,
363, Avenue Road,
BANGALORE CITY.

சந்தாதாரர்களுக்கு

'வசந்த'த்திற்கு அனுப்பும் செக்குகள், மணியார்டர், போஸ்டல் ஆர்டர் முதலியனவைகளில் 'மானேஜர், வசந்தம்' என்று குறிப்பிடவேண்டும்.

மானேஜர் :

வசந்தம், 4/12A திருச்சி ரோடு, கோயமுத்தூர்.

at the Vasanta Mills Press, and Published by K. P. Sundaram
A. Trichy Road, Coimbatore. Editor: R. Thirugnanasambandan